www.tamilarangam.net

# தேசபக்தன்


## தமிழீழ மக்களின் முற்போக்கு அரசியல் இதழ் 5

"தேசத்தின்
அந்த
நிச்சயமற்ற
அச்சம் நிறைந்த இரவுகளும்
அநாதைகளாகிவிட்ட பகல்களும்
துயருறு முடிவினை
சுமந்து வந்தது
தோழர்களே..........."





- ஆசிரியர் குழு குறிப்பு
- தோழர் பாபுவுக்கு த. தே. மு. க. வின் அஞ்சலி
- "வான சாஸ்திரி"
- தமிழீழ அகதிகள் மீது இந்திய-இலங்கை அரசுகள் கூட்டுச்சதி
- 'தேசிய சக்தி' பற்றி ஒரு பார்வை
- "வெறும் சமாதியல்ல நான்"
- இலங்கையில் மட்டுமா? இந்தியாவிலும் தமிழர்கள்? கர்நாடகம் பற்றி ஒரு கண்ணோட்டம்
- 'ஐக்கிய முன்னணி' சில கருத்துக்கள்
- "வால் முனிதர்கள்"
- தமிழீழ தேசபக்த புரட்சியாளர்கள் மேல் தொடரும் புலிகளின் அராஜகம்

7 JUL 1992

வெளியீடு : மக்கள் கலை அச்சகம்-தமிழீழம்

அன்பளிப்பு-10 ரூபா

**தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்-த. தே. மு .க.**

**PATRIOTIC VANGUARD'S ORGANIZATION**
**THAMILEELAM-P V O T**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழீழ மக்களின் தேசபக்த புரட்சிகரப் போராட்டம் முன்னேறட்டும்.

தமிழீழ மக்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை சிறீலங்கா சிங்கள பேரினவாத அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டமாக மாறியதிலிருந்து இன்றுவரை இனவாத பாசிச ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் வழி என ஆயிரம் தடவைகள் கூச்சலிட்டு வந்திருக்கின்றார்கள். உண்மையில் அவர்கள் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியையும், போராட்ட உணர்வையும் சுதந்திர வேட்கையையும் இனப் படுகொலைகள் மூலம் நசுக்கிவிடவே முனைகிறார்கள். 1983 கறுப்பு யூலைப் படுகொலையின் தொடர் தாக்கங்கள் நமது மக்களின் தினசரி வாழ்வில் பல அவலங்களை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. "தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பிரேமதாசவின் கடைசி நல் முயற்சி" 1990 யூனிலும் முப்படைகளையும் கொண்டு ஒரு திட்டமிட்ட இன அழிப்பை, படுகொலையை நிகழ்த்துவதின் மூலம் சாதித்து இடி இடியாய் அடிக்கிறது. தமிழீழ மக்கள் தமது தேசிய சுதந்திரத்திற்கும் நல்வாழ்வுக்கும் ஆன ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை மேலும் மேலும் செழுமைப்படுத்தி புரட்சிகர மக்கள் போராட்டமாகி நீண்டகால மக்கள் யுத்தமாக நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இன்று நமது பாரம்பரிய பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் பரவலான ஊரடங்குகளும், தேடுதல் வேட்டையும் இராணுவ நடவடிக்கைகளும் வடக்குப் பகுதி மேலான எல்லா யுத்த நடவடிக்கைகளும் "விடுதலைப் புலிகளையும், அதன் பயங்கரவாதத்தையும் அடக்குவதற்கு என்றும், தமிழ் மக்களை காப்பதற்கு என்றும்" அரசு கூறுகிறது. போராட்டகளத்தில் நிலவும் சிக்கல் நிறைந்த சூழலில் இச் சாதாரணமான பிரச்சாரத்தை (எல்லாத் திசைகளிலும்) தமிழீழ மக்களின் அனைத்து எதிரிகளும் ஒரு நோக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ளார்கள். இது ஸ்ரீலங்கா அரசின் முப்படைகளும் தமிழீழ மக்கள் மீது நடத்தும் இன அழித்தொழிப்பை, படுகொலையை, சிமகாவத்தில் நடத்தப்படும் சிங்கள குடியேற்றங்களை, விடுதலைப் புலிகள் மீதான யுத்தத்தையும் மறைத்து விடுகிறது. கூடவே தமிழீழ மக்களின் நியாயமான அடிப்படைக் கோரிக்கைகள், அதற்காக இதுவரை காலம் செய்த தியாகங்களும் கைவிடப்பட்டு, சிங்கள இனவாதிகளும் அரசும் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு தீர்வு கூறும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஊடாக இன்று வழங்கியிருக்கும் எழும்புத்துண்டு சமரசத் திட்டத்தை தமிழீழ மக்களும், விடுதலைப் புலிகளும் ஏற்க வேண்டும் என விஷப்பிரச்சாரம் மறைமுகமாக கோருகிறது. தமிழீழ மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கூறும் பாராளுமன்ற தெரிவுக்குழு முதல் கட்டமாக தெரிவித்துள்ள தீர்வுகளை அனைத்து தமிழர் அமைப்புகளும் எதிர்த்து இருப்பது வரவேற்கத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் பிரேமதாசா அரசு வடக்கு கிழக்கில் கட்டவிழ்த்து விட்டுள்ள அரசு பயங்கரவாதத்தை இவர்கள் ஆதரிப்பதும், மௌனம் சாதிப்பதும் அவர்களின் கண்ணோட்டத்தை தெளிவாக்குகிறது. இவர்கள் விடுதலைப் புலிகளின் தனிநபர் பயங்கரவாதத்தை, தனி இயக்க இராணுவ சர்வாதிகாரத்தை அரசு பயங்கரவாதத்தின் துணையுடன் முகம்கொள்ள விரும்புகிறார்கள். இதன் வழி, தாங்கள் ஒரு மக்கள் இயக்கம் இல்லையென்பதையும் அவ்வாறு மாற முடியாது என்பதையும் தெளிவுபடுத்தி நிற்கிறார்கள்.

* அரசு படைகளுக்கு துணைக்கு நிற்பதன் மூலம் விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி அல்லது அழித்து தாங்கள் தமிழீழ மக்களின் மேல் ஆதிக்கம் செலுத்த நினைப்பதால் தான் இத்தகைய நிலைமையை ஏற்படுத்தி இருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் பல மக்களின் போராட்ட வளர்ச்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தி வருகின்றது. இதை மக்களின் ஆதரவு மூலம் சொந்த சக்திகளின் பலத்தைக் கொண்டே விமர்சிப்பதையும் எதிர்கொள்வதையும் விட்டு விட்டு அரசுபடைகளுக்குத் துணை நின்று விடுதலைப் புலிகளை விரட்டியடிக்கும் கொள்கையும் செயலும் மக்களின் போராட்ட வளர்ச்சிக்கு பின்னடைவு மட்டுமல்ல — துரோகச் செயலுமாகும். இப்படியான இவர்களின் தந்திரம் விடுதலைப்புலிகளை அவர்களது கொடுஞ்செயல்களை நிறுத்த நிர்ப்பந்திக்கும் வழியும் சக்தியும் தம்மிடம் இல்லாததால் அரசுபடைகளை ஒருகருவியாக பயன்படுத்துகிறார்களா? (இது சரியா? பிழையா? என்பதை விட்டுவிட்டால் சரி—] என்றால் புலிகள் விரட்டப்பட்ட அரசு கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவ் அமைப்புக்கள் சுதந்திரமாக ஓடியாடி [இவர்களுக்கும் மக்கள் சுதந்திரமாக அல்ல] திரியும் பகுதிகளில் இவ்வமைப்புப் போராளிகள், தலைவர்கள் மக்களுக்கு ஆதரவாக செயல்படவில்லை. அரசுபடைகளின் அட்டூழியங்களுக்கு ஆதரவு கொடுப்பவர்களாகவும் அப்பகுதிகளில் உள்ள முற்போக்கு ஜனநாயக சக்திகளை தேடி அழிப்பதிலும் குறியாக இருக்கிறார்கள். மற்றும் மக்கள் விரோத ஜனநாயக விரோத நடவடிக்கைகளை ஹீரோயிசங்களை பழைய — புதியபாணி அராஜகங்களை தினமும் அமுல்படுத்துகிறார்கள். இவர்களை தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இத் துரோக அமைப்புக்கள் எதிர்ப்புரட்சிகர சக்திகளாகவே அடையாளம் காணவேண்டும்.

விடுதலைப் புலிகள் அரசு படைகளுக்கு எதிராகப் போராடுகின்றனர். தமது தனி இயக்க சர்வாதிகாரத்தின்படி எந்தவகை அரசியல் போராட்ட சக்திகளையும் இயங்கவிடாது தடுப்பது (தடைசெய்துள்ளனர்) அழிப்பதிலும் ஈடுபடுகின்றனர். <u>இது LTTE இன் உருவாக்கத்தில் இருந்து தொடர்ந்து வரும் பிரச்சனை</u>. விடுதலைப் புலிகளின் உருவாக்கத்திலிருந்து அரசியல் இராணுவ சித்தாந்தமும் நடைமுறையும் போராட்டத்திற்கு பரந்து பட்ட மக்களை அணி திரட்டுவதிலும் கீழ்தட்டு வர்க்க மக்கள் திரளின் ஜனநாயகக் கோரிக்கைகளை தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைத்து செல்வதற்கும் மக்களை ஆயுதபாணியாக்குவதையும் அனுமதிப்பதில்லை (தொடர்ச்சி அடுத்தபக்கம் ----)

* ஈ தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரத்திற்கும் மக்களின் நல்வாழ்விற்கும் போராடுவதாக கூறியவர்கள் பொது எதிரிக்கு எதிரான போராட்டத்தில் மக்களின் பக்கம் நிற்காது இருப்பதும், அல்லது எதிரிக்கு சேவகம் செய்யும் வேலையிலும் [TELO, PLOT, ENDLF, EPRLF, EPDP) ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்படியாக தமிழீழ மக்களின் தேசியப் போராட்டத்தில் உள்ள சக்திகளின் திசை விலகல்களும் எல்லைப்படுத்தப்பட்ட செயல்பாடுகளும் இனவாத அரசுக்கு எதிரான விடுதலைப் போராட்டம் பலத்துடனும் வேகத்துடனும் சரியான திசைவழியில் செல்வதில் பல சிக்கல்களை சந்தித்து நிற்கிறது. இந்நிலை சிறீலங்கா அரசு, இந்திய விரிவாதிக்க அரசு ஏகாதிபத்தியங்கள் என தமிழீழப் போராட்டத்தை நசுக்கிவிட தயாராக இருக்கும் அனைத்து மக்கள் எதிரிகளுக்கும் வாய்ப்பளித்துள்ளது.

தமிழீழ மக்களின் மேலான இனப்படுகொலையும், தமிழீழ அகதிகளையும் காட்டி தமிழீழப் போராட்டத்தில் நுழைந்ததை பிராந்திய விரிவாதிக்க நோக்கில் போலி நாடகம் ஆடியது இந்தியா. இந்திய ஆட்சியாளர்களும் மத்திய-மாநில அரசுகளும் 1987 துரோக ஒப்பந்தம், ஆக்கிரமிப்பு யுத்தம் இவற்றின் மூலம் தமிழீழ மக்களின் நம்பிக்கையீனத்தையும் எதிர்ப்பையும் சம்பாதித்தனர். இவர்களது "தமிழீழ ஆதரவுச் சாயம்", ஏறுநிலை [illegible], எல்லாம் இந்திய மக்கள் முன் குறிப்பாக தமிழக மக்கள் முன் வெளுத்தது. இன்று சிறீலங்கா அரசின் முப்படைகளின் கொடூரம் மிக்க இராணுவத் தாக்குதலுக்கு உயிரைக் கையில் பிடித்தபடி அஞ்சி தப்பி வந்திருக்கும் அப்பாவி தமிழீழ அகதிகளை (புலிகளை அல்ல) தமிழ்நாட்டின் கடற்கரையோரங்களில் காத்திருக்க வைத்துள்ளார்கள் மாநில-மத்திய அரசுகள். [சோமாலியா நாட்டின் ஆயிரக்கணக்கான அப்பாவி அகதிகள் ஏமன் நாட்டின் கடற்கரையோரங்களில் வேறு வழியின்றி தஞ்சம் புக இருக்கையில், ஏமன் நாட்டு அரசும் அதிகார வர்க்கமும் கரையிறங்க நிறுத்தி போதே 200க்கும் மேற்பட்ட அகதிகள் பசி பட்டினியால் இறந்தும், கடலில் குதித்தும் தற்கொலையும் செய்துகொண்டார்கள்]

சர்வதேச விவகாரங்களில் நடுநிலையும் முற்போக்குப் பாத்திரமும் வகிப்பதாக காட்டும் இந்தியஅரசு இன்று தமிழீழ அகதிகளை நடத்தும்பாங்கு "அகதிகளை பராமரிக்கும் நல்லுறவுக் கோட்பாட்டின்" ஓட்டையை உலகமக்களுக்கு வெட்ட வெளிச்சமாக்கியுள்ளது.

தமிழீழ மக்களுக்கும் — இந்திய மக்களுக்கும் (விசேடமாக தமிழ்நாட்டுமக்களுக்கும்) இடையிலான நல்லுறவு வளர விடாது திருப்பதிலும், நம்பிக்கை அற்ற தன்மையை ஏற்படுத்தி வெறுப்பை உண்டாக்குவதிலும் இந்திய மத்திய-மாநில ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் 1983இல் இருந்து மறைமுகமாகவும் - நேரடியாகவும் தொடர்ந்து முயற்சித்து வந்துள்ளனர். இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள குறுகிய நோக்கம் கொண்ட இயக்கங்களையும் சில வேளைகளில் பயன்படுத்தி இருக்கின்றார்கள். அல்லது அவற்றின் நடவடிக்கைகளை தமக்கு சாதகமாக இவ்வரசுகள் பயன்படுத்தியுள்ளது.

ராஜீவ் கொலையுண்டு போனதின் பின்னராக மத்தியில் ஆட்சிக்கு வந்த "ராவும்", மாநிலத்தில் ஆட்சிக்கு வந்த "ஜெயும்" "புலிகளை ஒடுக்குவது, அவர்களின் சீர்கெட்டுப் போன சட்டம் ஒழுங்கை சீர்படுத்துவது", என்ற பெயரில் தமிழீழ அகதிகள், போராளிகள் மேல் நேரடியான தாக்குதல்களை தொடர்ந்து நடத்தி வருகின்றனர். அகதிகளை கட்டாயப்படுத்தி வெளியேற்றுவதன் மூலமும், அங்கு இருக்கும் அகதிகளுக்கான உணவு, உடை, உறையுள் என எல்லா வகையிலும் நெருக்குதலை கொடுத்துள்ளது அதிகாரவர்க்கம். சிறிலங்கா அரசுக்கு எதிரான தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்திற்கு கிடைத்து வந்த தமிழ்நாட்டின் பின்புல உதவிகளை (தார்மீக ரீதியாகவும், பொருளியல் ரீதியாகவும்)

ம.பா

www.tamilarangam.net

... படுகொலைகளை,
இது இந்திய ஆட்சியாளர்களுக்கு இரண்டு வகையில் உதவுகிறது. தமிழீழப் போராட்டத்தை வளரவிடாது தடுக்க விரும்பும் இந்திய அயலுறவு நோக்கத்தை எட்டுவதற்கும் தனக்கு அடிபணிந்து நடக்கக்கூடிய தமிழீழத் துரோகிகளையும் தூதர்களையும் முன்னிலைப்படுத்தவும் உதவுகிறது. இரண்டு தமிழ்நாட்டில் "ஜெ" அரசு கைக்கொண்டுள்ள லஞ்ச லாவண்யத்துக்கும், ஊழல்களுக்கும், வேலையின்மை, வறுமைக்கும், ராவின் திறந்த பொருளாதாரச் சுரண்டலுக்கும், தேசிய இன ஒடுக்குமுறைக்கும் எதிராக வெடித்துக் கிளம்பும் மக்கள் போராட்டங்களை ஆரம்பத்திலேயே அடக்கி ஒடுக்கி விடவும் ஆளும் வர்க்க போட்டிக் கட்சிகளின் துணை, ஜனநாயக அமைப்புக்களை புரட்சிகர இயக்கங்களை நசுக்கவும் இந்தத் தடாவும் தடையும் கை கொடுக்கிறது.

ஒரு புறம் தமிழீழ அகதிகளையும் போராளிகளையும் முகாம்களிலும், சிறைக் கூடங்களிலும் அடைத்து வைத்து துன்புறுத்துகிறார்கள். இவற்றுக்கு வெளியில் வாழும் தமிழர்கள் தடாவும், தூக்குக் கயிறும் தங்களை நோக்கி எந்நேரமும் வரலாம் என அச்சநிலையில் மறுபுறம் "தமிழீழம்" அறிவித்துவிட்டு வந்த இந்தியத் தூதர்கள் "தமிழீழம் பற்றி பேசுவதும் (போர்) திட்டம் போடுவதும் உல்லாசமாக வாழவும் உலா வரவும் இந்திய ஆட்சியாளர்கள் அங்கீகரித்துள்ளார்கள். அரவணைக்கிறார்கள். தமிழீழ மக்களுக்கும்—தமிழக மக்களுக்கும் இந்திய ஆட்சியாளர்களதும் அவர்களது தமிழீழ தூதர்களதும் (துரோகிகளதும்) உண்மை முகம் மேலும் பதிந்து வருகிறது.

தமிழீழ மக்கள் தமது தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை இறுதி வெற்றிவரை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. போராடும் உணர்வையும் உறுதியையும் மேலும் பேண வேண்டியுள்ளது. நமது நீதியான உரிமைக்கான போராட்டத்தின் பக்கம் உலக மக்களின் நல்லாதரவை தக்க வைக்கவும் பெறவும் வேண்டியுள்ளது. தேசியளவிலும் உலகளவிலும் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் நண்பர்களையும் - எதிரிகளையும் (போராட்டத்தினுள் ஊடுருவியுள்ள எதிரிகளையும்) சரியாக இனம் காண வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கமானது தனது தனி இயக்க சர்வாதிகாரத்தை முறையாகப் பேணி வருகின்றது. தன்னிடம் உள்ள ஆயுத பலத்தின் மூலமும் அரசபடைகளுக்கு எதிரான போராட்டத்தில் தொடர்ந்து இருப்பதன் வழியாக கிடைக்கும் செல்வாக்கையும் கொண்டு ஜனநாயக விரோத, மக்கள் விரோத, பாசிச நடவடிக்கைகளை செயல்படுத்துகிறது. இது தான் விடுதலைப் புலிகள் இயக்கம் தனி இயக்கமாக திகழ்வதற்கான பலமும். தமிழீழ மக்களின் போராட்டமும் LTTE இயக்கமும் தேக்க நிலையில் இருப்பதற்கான பலவீனமும் ஆகும். இதை LTTE தலைமை புரிந்தாலும் அதை மாற்ற அவர்கள் கைப்பிடித்திருக்கும் தனிமுதலாளித்துவ சித்தாந்தமும், சுத்த இராணுவ அமைப்பும், நடவடிக்கைகளும் என்றும் அனுமதிக்கப் போவதில்லை. வேண்டுமானால் சில சீர்திருத்தங்களைச் செய்து நம்மை தக்க வைக்க முயற்சி செய்வார்கள். 1987 துரோக ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதன் மூலம் மற்றைய இயக்கங்கள் துரோக அமைப்புக்களாக மாறியதானது தன்னைத் தவிர மற்றைய இயக்கங்களை அழிக்கும் LTTE யின் கொள்கைக்கு 1987 க்கு முற்பட்ட காலத்தில் கிடைத்து வந்த விளக்கத்திற்கு ஒரு புத்துயிர்ப்பு அனுசரணையை வழங்கியது. "எதிரியைக் கொல்லு முன் எதிரியின் நண்பனைக் கொல்" என்ற முதுமொழியை தனது வெவ்வேறான பழி வாங்கல்களுக்கும் அழித்தொழிப்புக்கும் -

www.tamilarangam.net

பாசிசம் சூத்திரமாக்கிய ஜெயவர்டனா, சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசு எதிர்ப்பு, இந்திய விஸ்தரிப்புவாத எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையில் உறுதியுடன் தெளிவுடன் நின்று போராடும், போராடத் தயாராக இருக்கும் தமிழீழ தேசபக்த முற்போக்கு புரட்சிகர ஜனநாயக சக்திகளையும் குழுக்களையும் கூட அதே சூத்திரத்தைக் காட்டி கைது செய்கிறது. சிறை வைக்கிறது. சித்திரவதை செய்து கொல்கிறது LTTE இயக்கம். இதற்காக விடுதலைப் புலிகளை அழிப்பு பிரதான எமது கடமையென்றும், அல்லது அவர்களை அழிக்கத் தயாராக இருக்கும் தமிழீழ மக்களின் பொது எதிரிகளுடன் கூட்டு சேர்ந்து இறுதித் தீர்க்கமான தீவிர நடவடிக்கை எனும் நிலைப்பாட்டையோ, அல்லது சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளையும் LTTE யின் செயற்பாடுகளையும் ஒரே நிலையில், ஒரே தராசில் வைத்துப் பார்க்கும் தவறான கணிப்பீட்டையோ எந்த ஒரு தேசபக்த புரட்சிகர சக்திகளும் எடுக்கவில்லை, எடுக்கவும் கூடாது.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் நூறுவகை கொள்கை முரண்பாடுகள் இருக்கின்ற போதிலும் அதன் நடவடிக்கைகள் சகித்துக்கொள்ள முடியாத பாசிசப் போக்கை வெளிப்படுத்துகின்ற போதிலும் தமிழீழ புரட்சிகர சக்திகள் தங்களை தற்பாதுகாப்பு செய்வது என்ற கோணத்தில் சரியான அரசியல் அமைப்பு அணுகுமுறைகளையும் உருவாக்கி உறுதியான தற்காப்பு இராணுவ செயற்பாட்டிற்கு தயார் ஆவதன் மூலம் புரட்சிகர இயக்கத்தின் சக்தியை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். LTTE சிறிலங்கா அரசுக்கு எதிரான போராட்டத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கும் வரை அதுவும் தேசிய விடுதலை தளத்தில் ஒரு நட்பு சக்தி என்பதை அங்கீகரிக்கின்ற அதே வேளை போராட்டப் பாதைக்கு இடர்களையும் தேக்கத்தையும் ஏற்படுத்தும் LTTE செய்கைகளை உறுதியுடன் விமர்சித்தாக வேண்டும். சிறிலங்கா சிங்கள இனவாத அரசிற்கும் அதை கட்டிக் காக்கும் ஆளும் வர்க்கங்களுக்கும் — தமிழீழ தேசிய இன மக்களுக்கும் இடையிலான முரண்பாட்டையும் அதுவே இன்று இலங்கையில் பிரதான முரண்பாடாக இருப்பதையும் இனவாத அரசுக்கும் — விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் போராட்டமும் மேற்பார்த்த முரண்பாட்டின் மேலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளதையும், விடுதலைப் புலிகளுக்கும் — தமிழீழ மக்களின் ஜனநாயக சக்திகளுக்கும் உறவு நிலைகளுக்கும் இடையில் இருக்கும் முரண்பாட்டுத் தன்மைகளையும் ஒவ்வொரு போக்கிலும் பகுத்தாராய்ந்து அதன் அடிப்படையில் தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தில் தமிழீழ சமூகத்தில் நிலவும் வேறுபட்ட வர்க்கங்களின் குணம்சங்களை, போராட்டப் போக்கை ஒரு தேசபக்த புரட்சிகர இயக்கமானது சரியான திசைவழியில் எவ்விதம் கையாள வேண்டும் என்பதைப் புரிந்து ஸ்தூலமான நிலைமைகளையும் அதன் நிகழ்ச்சிப் போக்கில் விடுதலைப் புலிகளின் ஸ்தூலமான கொள்கை — செயற்பாடுகளை பிரதானமாக கணக்கில் கொண்டு தான் விடுதலைப் புலிகளுடனான எமது உறவின் நிலைகள் தீர்மானிக்கப்பட வேண்டும். அதை விட்டு விட்டு உலகப் போராட்ட அனுபவங்களின் "சூத்திரத்தை" அப்படியே இங்கு கொண்டு வந்து பொருத்தி விட முடியாது, கூடாது.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டத்தை புரட்சிகர நோக்கு நிலையில் இருந்து பார்த்த N.L.F.T, T.M.P.P, P.L.F.T போன்ற முற்போக்கு புரட்சிகர குழுக்களும் கூட இன்று போராட்டப் போக்கில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கு ஊடாகவும் புரட்சிகர சக்திகளின் வளர்ச்சியும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேவை வேண்டப்பட்டுள்ள நிலையிலும் போராட்ட அரங்கில் நிலை பெற முடியாதிருப்பதுடன் மேலும் மேலும் உதிர்ந்து செல்வது கவனத்திற் கொள்ள வேண்டிய முக்கிய அம்சமாகும். இவர்களின் அனுபவங்களின் இரண்டு பக்கங்களும் நன்கு பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. தமிழீழப் போராட்டத்தை புரட்சிகரப் பாதையில் தொடர விரும்பும் சக்திகள்: முற்போக்கு இயக்கங்களுடன் அடையாளம் காட்டுபவர்கள் அவ்வியக்கங்களின் செயற்பாட்டின் மந்த நிலையில் விரக்தியுற்றவர்கள், சிறுமுதலாளிய சித்த இராணுவ இயக்கங்களின் கொள்கை செயற்பாடுகளை உணர்வு பூர்வமாக நிராகரித்து வெளியேறியவர்கள் இவ்வியக்கங்களின் நடவடிக்கைகளில் மட்டும் அதிருப்தியுற்று விலகி நிற்பவர்கள், இதுவரை எந்த இயக்கங்களிலும் இணையாமல் — இணைக்கப்படாமல் இருக்கும் சக்திகள் என பல தளங்களில் (தமிழீழம், சிறிலங்கா, தமிழ்நாடு, வேறு நாடுகள்) பல நிலைகளிலுள்ளனர். இவர்கள் அனைவரும் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டம், தாய் மண்ணை மீட்கும் போராட்டம் என்பதுடன் மக்களின் விடுதலையை ஆயிரமாயிரம் ஆண்டு அடக்கியொடுக்கப்பட்ட உழைக்கும் மக்களின் உரிமையை சுதந்திரத்தை உறுதி செய்யும் போராட்டமாக வார்த்தெடுக்க விரும்புபவர்கள். தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான ஆயுதப் போராட்டம் சிறிலங்கா சிங்கள பேரினவாத அரசுக்கும் அதன் பின்னால் இருக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் என்பதையும் தட்டிக்கழிக்க முடியாமல் இந்திய விரிவாதிக்க அரசையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதையும் புரிந்து கொண்டுள்ளவர்கள். நமது போராட்டம் நீண்டகால மக்கள் யுத்தப் பாதைக்கு உட்பட்டது என்ற தெளிவுடன், தமிழீழ தேசிய விடுதலை யுத்தத்தினூடு தமிழீழ மக்களை பரந்துபட்டளவில் அணிதிரட்டி மக்களை ஆயுதபாணியாக்குவதின் மூலம் தொடரப்பட வேண்டியுள்ளது. போராட்டம் திட்டமிட்ட பாதையில் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. நம் சக்தியிலுள்ள உயர்ந்தபட்சப் புரிதல்களில் இருந்து தேசபக்த புரட்சிகர அரசியல் — இராணுவக் கொள்கை திட்டத்தை முன்வைத்து அதனடிப்படையில் அமைப்பாகி அணி திரண்டு செயல்பட அழைக்கிறோம். தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கும் சர்வதேச மக்களுக்கும், மக்கள் இயக்கங்களுக்கும் நமது போராட்டத்தின் புதிய கட்டத்தை தெளிவுபடுத்துவமாக!

* சிறீலங்கா அரசின் தமிழின அழிப்பு யுத்தத்தை எதிர்த்துப் போராடுவோம்!
* அழிப்பு யுத்தத்தை ஆதரிக்கும் சக்திகளை அம்பலப்படுத்துவோம்!
* இந்திய விரிவாதிக்கவாதிகளின் சதியை முறியடிப்போம்!
* அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஒன்றுபடுவோம்!
* போராடும் சக்திகளே! கைகோர்ப்போம்! இணைவோம்!

ஆசிரியர் குழு
தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம்.

"தேசபக்தன்"
[illegible]
பக்த முன்ன[illegible]னர் [illegible]

www.tamilarangam.net

******************************
*தோழர் பாபுவுக்கு எமது வீர அஞ்சலி *
******************************

சிறீலங்கா சிங்கள இனவாத அரசும் முப்படைகளும் தமிழீழ மக்கள் மீது தொடர்ந்து இன அழிப்பு யுத்தத்தை நடத்தி வருகின்றது. தமிழீழ மக்களின் விடுதலைக்காக போராடப் புறப்பட்ட இயக்கங்களின் பெரும்பாலானவை இன்று இலங்கை – இந்திய அரசுகளின் கைக்கூலிகளாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான இயக்கங்களாக மொத்தத்தில் தேசத்தின் விடுதலைக்கும் தமிழீழ மக்களின் சனநாயக உரிமைகளுக்கும் எதிராக செயற்படுகையில், விடுதலைப் புலிகள் இயக்கமானது அரசு படைகளை எதிர்த்து நின்று சமர் புரிந்து கொண்டே தமிழீழ மக்களின் விடுதலைக்காக போராடும் மாற்று அரசியல் கொள்கை கொண்ட இயக்கங்களைத் தடைச்செய்தும், சனநாயக சக்திகளையும், தேசபக்தி புரட்சிகரப் போராளிகளையும் அழித்தொழித்து வருகின்றது. தமிழீழ போராட்ட களத்தின் நிலை இப்படி இருக்கையில் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும், மக்களின் சனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தின் எழுச்சியும் ஒன்றிணைக்கப்படாது முன்னேற்றம் காணவியலாதவாறு சிக்கித் தடுமாறி நிற்கின்றது. தேசத்தினதும் மக்களினதும் எதிரிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்தி போராட்டத்தையும் போராட்ட சக்திகளை அழித்தொழித்துவிட நாட்புறமும் உறுதி பூண்டு நிற்கிறார்கள். இவற்றைப் புரிந்து கொண்டுள்ள ஒவ்வொரு தமிழீழ மண்ணின் மைந்தர்களும் கடந்த பத்தாண்டுகால இடைவிடாத மக்களின் போராட்டத்தை இடைநிறுத்தாது தொடர–விடுதலையை வெல்ல – போராட்ட போக்கின் ஒரு புதிய பரிமாணத்தை நிறுவ ஒரு புரட்சிகரமான அரசியல் இராணுவ மார்க்கமும், போராட்டப் பாதையின் மீது தாக்கம் செலுத்தக் கூடிய நடைமுறை வேலைகளும் போராட்ட களத்தில் தொடங்கி இருக்கிறார்கள். அதற்குத் துணையாக – பல்வேறு தளங்களிலும் தமது சிந்தனை ஆற்றலுக்கும் செயற்திறனுக்கும் ஏற்ப இயங்கி வருகின்றனர்.

தமிழீழ மக்களின் எதிர்கால வாழ்விற்கு தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிற்கு வழி செப்பனிடக்கூடிய ஒரு சமுதாயப் பொறுப்பை கடமையை தனது இளைய கரங்களில் சுமந்து நின்று இறுதிவரை களத்தில் நின்று செயலாற்றி வந்த <u>தோழர் "தயா" "பாபு" என்கின்ற பரராசசிங்கம் சுந்தரதாஸ்</u> இனவாத அரசின் படைகளில் அல்ல அரசின் கைக்கூலி இயக்கங்களால் கடத்தி செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ மக்களின் எதிர்கால வாழ்விற்காக தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள சனநாயகவாதிகள், தேசபக்தர்கள், புரட்சியாளர்கள் ஒவ்வொருவருக்கும் போராட்டம் பற்றிய தமது சிந்தனைகளை வெளிப்படுத்தவும், செயல்களை நடைமுறைப்படுத்தவும் இயலாதபடி அரச படைகளை விட முதலில் மக்களின் சனநாயக உரிமைகளை மறுக்கும் அராஜக இயக்கங்கள் (விடுதலைப் புலிகள் உட்பட) எல்லாவற்றாலும் உளவுப் பார்க்கப்படவும் தேடப்படவும் அழிக்கப்படவும் செய்கிறார்கள். இவர்கள் தமது வரலாற்றில் செய்த நூறு கொலைகளால் கூட வரலாற்றின் வளர்ச்சிப் போக்கைத் தடுத்து நிறுத்த இயலவில்லை.

சில தளங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். என்பதே அவர்களுக்கு மகிழ்ச்சியானதாக இருக்கக் கூடும்.

அராஜக வாதிகளே. உங்களது அங்கொன்றும் இங்கொன்றுமான கடத்தல்களை, புதைத்தல்களை, மரண தண்டனைகளுக்கு மட்டும் பதிலடி கொடுப்பதுடன் நிறுத்த விரும்பவில்லை. இத்தகைய மக்கள் விரோத அராஜக நடவடிக்கைகளுக்கு காரணமான சிறு முதலாளிய சாகச சித்தாந்தத்தையே தமிழீழ மக்கள் இன்று எதிர்த்து நிற்கிறார்கள். குறுகிய நோக்கம் கொண்ட சாகச செயற்பாடுகளும் நடவடிக்கைகளும்தாம் இன்றைய தேசிய நிலைக்கும் சீரழிவுகளுக்கும் தள்ளியுள்ளன என்பதை புரிந்து கொண்டுள்ளனர்.

மக்களை மேன்மேலும் விழிப்படையச் செய்வதன் மூலமும் அவர்களுடன் இரண்டறக் கலந்து நின்று போராடுவதன் மூலமும், அராஜகவாதிகளின் தேசவிரோத, மக்கள் விரோத, ஜனநாயக விரோத செயல்களுக்கு முடிவு கட்டுவோம் என்ற தோழர் பாவுவின் புரட்சிகரச் சிந்தனைகளை செயலாற்றிட முன்வருவோம். இதுவே நாம் செலுத்தும் வீர அஞ்சலியாகும்.

தமிழீழ தேசபக்த முன்னணியினர் கழகம் ( P V O T )

மார்க்சிசம், லெனினிசத் தத்துவத்தால் ஆயுதபாணியாக்கப்பட்ட, சுயவிமர்சன முறையைப் பயில்கின்ற, பொதுமக்களுடன் தொடர்புடைய, சிறந்த கட்டுப்பாடுடைய ஒரு கட்சி, இத்தகைய ஒரு கட்சியின் தலைமையிலுள்ள ஒரு இராணுவம், இத்தகைய கட்சியின் தலைமையில் உள்ள புரட்சிகர வர்க்கங்கள், புரட்சிகரக் குழுக்கள், எல்லாவற்றினதும் ஒரு ஐக்கிய முன்னணி இந்த மூன்றும் தான் நம் எதிரியைத் தோற்கடித்த மூன்று பிரதான ஆயுதங்கள்.

"மக்கள் ஜனநாயக சர்வாதிகாரம் பற்றி" - மாவோ

* வாசிப்போம்:- தேசபக்தன்!
* விமர்சிப்போம்:- தேசபக்தன்!
* ஒன்றுபடுவோம்:- தமிழீழ தேசவிடுதலைப் போரில்!

www.tamilarangam.net

**வான சாஸ்திரி**

கூதல்,
சூரியன் கூடவெள்ளைப் போர்வையுள்
குடங்கி நடந்தான்.

காலையோர் கடையில்
சூடுபறக்கும் தேனீருக்காக
இருக்கையில்
குந்தல் கருப்புக் கம்பளி போர்த்தி
புசித்திருந்த ஒரார் முதாட்டியிடம்
பேச்சுக் கொடுத்தேன்.

"யாழ்ப்பாணமா?" என்றென்னை விளித்தாள்
எனக்கோ நீலகிரியில் கடல் பார்த்த வியப்பு.
முன்னர் தான் கண்டியில் இருந்தது சொன்னாள்.

இருந்தே அன்று
இரண்டு நேரச் சோறும் கூரையும்
என அங்கலாய்த்தாள்.
இங்கே கிழு கிழு படுகர் காடுகளில்
கொத்தடிமைகளாய் சீரழிகிறோம்.

யாழ்ப்பாணத்து பதுங்கு குழியில்
முடங்கு மறுக்கும் சிறுவனைப் போன்று
இருண்ட கண் குழிகளில் ஒரு துளி கண்ணீர்!

"இந்தியாவுக்கு எப்போது வந்தாய்?"
எழுபத்து மூன்றில்.
"அப்போதெல்லாம் இன மோதல் இல்லையே
ஏனம்மா வந்தாய்?"
"வான சாஸ்திரி சொன்னதை நம்பி
நாங்கள் வந்தோம் நாட்டாற்றில் நிற்கிறோம்"
வான சாஸ்திரியா?
குழப்பமடைந்தேன்
நெடுநேரத்து மௌனம் உடைய
நண்பன் கேட்டான்.

"சிறிமாவோ — சாஸ்திரியா?"
"ஆமா ... மகனே அதே சாஸ்திரிதான்".

www.tamilarangam.net


* * * * * * * * * * * * * * *

* தமிழீழ அகதிகள் மேல் நவீன ஒடுக்குமுறை *

* இலங்கை-இந்திய அரசுகளின் கூட்டுச்சதி *

* * * * * * * * * * * * * * *

சிறீலங்கா சிங்கள பேரினவாத அரசு கால்நூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழ் தேசிய இன மக்கள் மீது இன ஒடுக்கு முறையை மேற்கொண்டு வருகின்றது. பேரினவாத ஒடுக்கு முறையின் வளர்ச்சி போக்கில் கடந்த பத்து ஆண்டுகளாக தமிழ் மக்கள்மீது இன அழிப்பு யுத்தங்களையும் நடத்தி வருகின்றது. இதை, எதிர்த்து தமிழ் மக்கள் தமது தேசிய இன உரிமையை வென்றெடுக்க தமிழீழ மண்ணைக் காக்க -அதன் எதிரியான சிறீலங்கா சிங்கள பௌத்த பேரினவாத அரசையும், இவற்றின் பின்னணியில் இருக்கும் ,ஏகாதிபத்தியங்களையும் எதிர்த்து பேராடி வருகிறார்கள்.

சிறீலங்கா அரசின் இன ஒடுக்குமுறையும், இன அழிப்பு யுத்த நடவடிக்கை-களும், தமிழீழ மக்களில் ஒரு பகுதியினரை தங்கள் தாய் மண்ணிலும், அயல் நாடான இந்தியாவிலும், தொலைதூர நாடுகளான மேலைநாடுகளிலும் தினசரி வாழ்விற்கு ஏங்கும் எதிர்காலத்தின் மீது பூரண நம்பிக்கை கொள்ள முடியாது. அகதி வாழ்வின் அவலநிலைக்கு தள்ளியுள்ளது. தமிழீழ மண்ணிலும் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில், மேலைத்தேய நாடுகளிலும் வாழும் தமிழீழ அகதி மக்கள் வேறுபட்ட சூழ்நிலைகளில் வாழ்கின்றபோதும் அடிப்படையில் சிங்கள இனவெறி அரசின் இனபாரபட்ச, இனஒதுக்கல், இன் அழிப்பு நடவடிக்கைகளால் தாங்கள் தாய் பூமியில் வாழவிடாமல் தடுக்கப்பட்டவர்கள். இனப் படுகொலைகளால், பிரதேச ஆக்ரமிப்பால் அரத்தியடிக்கப்பட்டவர்கள். தங்களின் உயிர் உத்தரவாதத்தை பேண, வசதிக்கும் வாய்பிற்கும் ஏற்ப வாய்த்த வழிகளில் அடைகிலம் என்று எல்லை நகர்ந்தவர்கள். இன்று அவர்கள் வாழும் ஒவ்வொரு நாடுகளிலும் (தமிழீழம், தமிழகம், மேலை நாடுகள்) தங்களது நிகழ்கால பிரச்சனைகளை (அந்நாட்டு-அரசுகளால், ஆளும் கும்பல்களால் கொடுக்கப்படும் நெருக்குதல்கள்)முகங்கொள்வதில் வேறுபடுகின்றனர். அதே போல் அவற்றிற்கான உடனடித் தீர்வை தேடுவதிலும் வேறுபட்ட அணுகு முறைகளைக் கைக்கொள்ள வேண்டியுள்ளனர்.

தமிழீழப் பகுதிகளில் அகதிகளாக வாழும் தமிழ் மக்களே இன்றைய நிலையில் பெரும் நெருக்கடியில் வாழ்ந்து வருகின்றனர். உயிர்வாழ்வதற்கு கூட உத்திரவாத மற்ற நிலையில் சாக்கடைச் சூழல்கள் மத்தியிலிருக்கும் முகாம்களில் கொடிய நோய்-களுக்கும், ஒருவேளை உணவிற்கும் வழியற்ற பட்டினிச்சாவைச் எதிர்கொண்டும் இடையிடை இனவாத படைகளின் சதை, உயிர் பசிகளுக்கும் " வெறியைத் தீர்க்கும் இராணுவ பதிலடித் தாக்குதலுக்கும்" பலி கொடுக்கப்பட வேண்டிய நிலையில் தினமும் மரணத்துடன் போராடிக் கொண்டு அகதிகளாக வாழ வேண்டியுள்ளது. தமிழீழ அகதிகளின் அவலம் நிறைந்த வாழ்விற்கு சிறீலங்கா அரசே பிரதான காரணமாக இருக்கின்றது. தமிழீழ பகுதிகளில் அகதிகளாக்கப்பட்டுள்ள தமிழீழ முஸ்லீம் மக்களின் விசேடத்துவ நிலையையும் இங்கு கவனிக்க வேண்டியுள்ளது.

www.tamilarangam.net



சிறீலங்கா அரசின், இராணுவத்தின் தமிழ் இன அழிப்பிற்கு -தமிழீழ இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் மக்கள் மத வேறுபாடுகள் இன்றி உள்ளாக்கப் படுகையில் மத வேறுபாடுகளன்றி மக்கள் எதிரியை எதிர்க்க வேண்டி இருக்கையில், போராடுகைட சிறீலங்கா அரசிற்கெதிராக போராட்டத்தில் தொடர்ந்து போராடி வரும் விடுதலைப் புலிகள் இய்க்கம் (எல்.டி.டி.இ) தனது அரசியல் இராணுவ கொள்கையின் சில தீய விளைவாக அல்லது எதிரியின் தந்திரங்களுக்கு பலியாகும். விதத்தில் நடந்தது கொண்டதன் ஒரு விளைவு வடக்கு பகுதியில் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமிழீழ முஸ்லீம் மக்களை விரட்டியடித்து தென் பகுதியை நோக்கி அகதிகளாக வாழ தள்ளி-விட்டுள்ளது. இது நமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் அகதிகள் வரலாற்றுப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளது. தமிழீழ மக்களின் பொது எதிரியான சிறீலங்கா சிங்கள பௌத்த பேரின வாதிகளும் அரசும், அவர்களுக்கு சார்பான மேல்தட்டு வர்க்க முஸ்லீம் தமிழ் துரோகிகளும் தமிழீழமக்களின் மொத்த பலத்தை உடைக்க-அரசியல்-இராணுவ, இன, மத, பிரதேச, சாதி ரீதியில் மேற் கொண்டு வரும் தந்திரங்களுக்கு சூழ்ச்சிகளுக்கு எல்.டி.டி.இ.யே பழியேற்படுத்தி கொடுத்துவிட்டதாக மாறிவிட்டது. எல்.டி.டி.இ.ன் இத்தகைய செய்கைகள் தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்காக போராடும் ஆதரவாக நிற்கும் ஒவ்வொருவராலும் விமர்சித்து கண்டிக்கப்பட வேண்டும். எல்.டி.டி.இ.யும் உணர்வு பூர்வமாக இத்தவறை திருத்த முயற்சிக்க வேண்டும். விரட்டியடிக்கப்பட்ட தமிழீழ முஸ்லீம் மக்கள் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்ப அவர்கள் அனைத்து வழிகளிலும் உதவ வேண்டும். "அரசு எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடும் ஒரு விடுதலை இயக்கம் போராட்ட நடவடிக்கைக ஊடே மக்கள் மத்தியில் இழைத்த தவறுகளை மக்கள் முன் சுய விமர்சனம் செய்தும், நடைமுறையில் திருத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் தான் அவ்வியக்கம் மக்களின் நம்பிக்கையைப் பெறவும் தேசத்தின் சுதந்திரத்தை வெல்லவும் கூடிய இயக்கம் என்பதை நிரூபிக்க முடியும்".

மேலை நாடுகளிலுள்ள தமிழீழ அகதிகளை நோக்கின் அங்கு வாழும் பெரும் எண்ணிக்கை கொண்டவர்கள், சிறீலங்கா அரசின் இனப்பாரபட்சத்தால் கல்வி, தொழில் வாய்ப்பை இழந்தும், இராணுவ நடவடிக்கைகளால் உயிர் வாழ்வுக்குள்ள உத்தரவாதமின்மையும் கண்டு, இவற்றைப் பெற அந்நாடுகளில் தஞ்சம் புகுந்து உள்ளவர்களில் ஒரு பகுதியினர் தமிழீழ போராட்டத்திலிருந்து துரோக இயக்கங்களாக மாறிய ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், டெலோ, ஈரோஸ் களை நிராகரித்தும், எல்.டி.டி.ஈஇன் தனி இயக்க அச்சுறுத்தல்களுக்கு பயந்தும், முகம் கொடுக்க முடியாமலும் மேலை நாடுகளில் அகதிவாழ்வை வாழ இயக்கங்களால் வழி அமைக்கப்பட்டுள்ளது. உலகின் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் வசிக்கும் இவ்வகதிகள் அனைவரும் அந்நாடுகளின் பொருளாதார, தொழில் நுட்ப வளர்ச்சிகளையும், வசதிகளையும் கண்டு வியப்புற்ற நிற்கையில் அங்கு அகதிகளின் வாழ்வில் கூட காணப்படும் ஒரு வகை புதுமையான மேன்மையையும் அனுபவிக்கின்ற போதிலும் வேலையின்மை போதிய சம்பளமின்மை, வேலை நிரந்தரமின்மை, வாழ்வின் இயந்திரகதியம், விதேசிய கலாச்சாரமும்-கலாச்சார சீரழிவுகளையும் கண்டு அந்நாட்டு தொழிலாளர்களுக்கும் அரசுகளுக்குமிடையிலான

www.tamilarangam.net

போராட்டங்கள், தேசிய இன போராட்டங்கள் இவை எல்லாம் சேர்ந்து அன்னியப்பட்ட வாழ்வின் தாக்கத்தில் எழும் உள்ளுணர்ச்சி சிக்கல்கள் அவர்கள் மத்தியில் கூர்மையடைகின்றது. நமது தாய்நாட்டின் நிரந்தரமான சுதந்திர வாழ்வை நோக்கி நாம் நகர்ந்து செல்ல வேண்டிய அவசியத்தை அதற்கான வழிகளை காண கடுமையாக சிந்திக்க சிலரை தூண்டுகிறது.

இந்தியாவில் விசேடமாக தமிழகத்தில் இருக்கும் தமிழீழ அகதிகள் எதிர் கொண்டு வரும் பிரச்சனைதான் இதில் விரிவாக பார்க்க விழைகின்றோம். காரணம் சிறீலங்கா அரசும் இராணுவமும் தமிழீழப் பகுதிகளில் மக்கள் மேலும் எல்.டி.டி.இ. போராளிகள் மீதும் உக்கிரம் வாய்ந்த ஒரு யுத்தத்தை இன்று கட்டவிழ்த்து விட்டிருக்கையில் தமிழீழத்தில் வாழும் அகதிகளும், மக்களும், யுத்த விமானங்களின் குண்டு வீச்சை, ஊரடங்கு பற்றிய பிரசுர மழையை, இராணுவத்தின் வெறிகொண்ட துப்பாக்கி குண்டுகளை எதிர் கொள்கின்றனர். ஒவ்வொரு நிமிடமும் மரணத்துடன் போராடுகின்றனர். இந்நிலையில் தமிழகத்திலுள்ள தமிழீழ அகதிகளை தஞ்சம் புகுந்தவர்கள் என்றும் பாராமல் நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்றி சிங்கள இன வெறி யுத்தத்திற்கு பலியாக்க இந்திய மத்திய, மாநில அரசுகள் ஒரு சூழ்ச்சித்திட்டத்தை அமுலாக்கி வருகிறார்கள். இவ் வேளையில் சிறீலங்கா இனவெறி அரசையும் இந்திய விரிவாதிக்க அரசையும் மக்கள் சக்திமூலம் நிர்ப்பந்தப்படுத்தி அகதி மக்களை காப்பது ஒவ்வொரு ஜனநாயக வாதியினதும், தேசபக்தனதும், புரட்சியாளனதும் கடமையாக நம்முன் நிற்கின்றது.

1983இல் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட "ஜூலை தமிழின படுகொலைக்கு" பின் தமிழகம் செல்லத் தொடங்கினர் தமிழீழ அகதிகள். 1987 வரை சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ போராளி இயக்கங்களுக்கும் இடையே நடந்த தேசிய விடுதலைக்கான யுத்தங்களின்போதும் 1987 பிற்பகுதியில் தொடங்கி 1989 வரை இந்திய ஆக்ரமிப்பை, எதிர்த்து எல்.டி.டி.இ. நடத்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தங்களின் போதும் பின்னர் சிறீலங்கா அரசிற்கெதிராக தொடர்ந்தும் எல்.டி.டி.இ. நடத்தி வரும் யுத்த நடவடிக்கைகளிலும் தமிழீழ மக்கள் மீது இன ஒழிப்பு யுத்தத்தை, ஆக்ரமிப்பு யுத்தத்தை கொடுத்தவர்களால் சொந்த மண்ணில் நிர்க்கதி ஆக்கப்பட்டு வாழ்வையும் வளத்தையும் விட்டு அகதிகளாக தமிழீழ மக்கள் செல்ல நிர்பந்திக்கப்பட்டார்கள். இவர்கள் கண்காணிக்கப்படும் திறந்த வெளி அகதி முகாம்களில் பெரும்பகுதி இருக்கையில் இந்திய இலங்கை துரோக ஒப்பந்தத்தின் பின் துரோக நிலைப்பாட்டை எடுத்த இயக்கங்கள் அத்தலைமைகளை நிராகரித்து வெளியேறியவர்களும் அத்தலைமைகளுடன் ஆலை செயற்பாடின்றி இருப்பவர்களும், இந்திய ஆக்ரமிப்பு இராணுவத்தின் அரவணைப்பில் துரோக இயக்கத் தலைமைகளின் உடந்தை உடன் கட்டப்பட்ட தமிழீழ தேசிய பாதுகாப்புப்படையின் டி.என்.ஏ (இந்திய ஆதரவு தமிழீழ தேசிய துரோகப் படை) இருந்து தப்பிச் சென்று ஓரிசாவில் தஞ்சம் புகுந்து கண்ட திசை மாற்றப்பட்ட போராளிகளும், தமிழகத்திலிருந்து செயற்பட்டுக் கொண்டிருந்த எல்.டி.டி.இ. போராளிகளும் சிறுபகுதியாகவும் சிறப்பு முகாம்களில் (சிறப்பு சிறைக் கொட்டடி) இந்திய மத்திய மாநில அரசுகளால் 1987 துரோக ஒப்பந்தத்தின் தொடர்போக்கில் இன்று நிறுத்திவைக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

www.tamilarangam.net



"தமிழகத்திலுள்ள தமிழீழ அகதிகள் மனம் விரும்பி இலங்கைக்கு செல்ல தயாராக இருக்கிறார்கள்" என்ற ஒரு நாடகத்தின் மூலம் மத்தியில் நரசிம்மராவும் மாநிலத்தில் ஜெயலலிதாவும் சிறீலங்கா சிங்கள இனவாத அரசிற்கு சார்பாக தமிழீழ அகதி மக்கள் மீது ஒரு 'நிர்ப்பந்த வெளியேற்ற துரோகத்தை அகதிகளை இனவெறிக்கு பலியாக்கும் கொலைக்குற்றத்தை' செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

* * * * * * * * * * * * * * * *

இந்திய விரிவாதிக்க அரசின் சூழ்ச்சிப் பின்னணி

* * * * * * * * * * * * * * * * *

சிறீலங்கா அரசின் தமிழ் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழீழ மக்கள் நடத்தி வரும் தேசிய சுதந்திரப் போராட்டத்தை தனது நயவஞ்சக நோக்கில் இலங்கை மீதான இந்திய விரிவாதிக்க முயற்சிக்கு அப் போராட்டத்தையும் அதிலிருந்து இயக்கங்களையும், இந்திய அரசு தன் தீய நோக்கத்திற்கு ஊக்கியாக அதை பயன்படுத்த நினைத்தது "நண்பன் போல்" போராளி இயக்கத் தலைமைகளுள் ஊடுருவி அனது அநீதியான விரிவாதிக்க நோக்கத்திற்கு தமிழீழ மக்களின் நியாயமான போராட்டத்தை கட்டுப்படுத்தி திசைமாற்ற முயன்று வந்தது. வருகிறது.

இதற்கு தமிழீழகத்திலுள்ள டியூ எல்.எப் போன்ற சமரசவாத சக்திகளும், சொந்த மக்கள் சக்தி மீது முழு நம்பிக்கையற்ற, இந்திய அரசு பற்றிய புரிதலற்ற அல்லது சார்புள்ள, உலக அரசியல், இராணுவ நடப்புகளில் குறுகிய பார்வை கொண்ட ஆயுதப் போராட்ட தலைமைகளும் உடந்தையாக இருந்தனர். இருந்து வருகின்றனர்.

1985ல் நடந்த திம்பு பேச்சு வார்த்தையில் (சிறீலங்கா அரசிற்கும் தமிழீழ போராளிகளுக்குமிடையில்) மத்தியத்துவம் என்பதன் பெயரில் வெளிப்படையாக இந்திய அரசு தனது விரிவாதிக்க நோக்கத்தை நிறுவ முயன்றது. திம்பு பேச்சு முறிவடைந்ததும் இந்திய மத்திய அரசு தமிழீழ போராளி இயக்கத் தலைமைகள் மேல் தனது நேரடி நெருக்குதல்களை கொடுக்க ஆரம்பித்தது. இது ஓரளவிற்கு இந்திய அரசின் சூழ்ச்சியை வெளிப்படையாக தமிழக மக்களுக்கு காண்பித்தது. போராளி இயக்கங்கள் தமக்கிடையிலான மோதல்களால் உள்ளமைப்பு கோளாறுகளாலும் சிதைந்தன. சிறீலங்கா அரசிற்கெதிரான மக்களின் போராட்டப்பலம் சிதறிக் கொண்டிருந்த பொழுது சிறீலங்கா அரசு "போராளிகளை துடைத் தொழிக்கும் யுத்தத்தை" 1987 இல் கட்டவிழ்த்து விட்டது. அவ்வேளையில் இந்திய அரசு "நண்பன் போல் நடிப்பதன் உச்சமாக" உச்சக்கட்ட உணவுப் பொட்டலங்களுடன் தமிழீழ மண்ணில் விரிவாதிக்க எண்ணங்களை நுழைத்தது. தமிழீழ மக்களின் நலன்களை, போராடி வந்த இயக்கங்களை நிராகரித்து, இலங்கை அரசுடன் தனது விரிவாதிக்க கொள்கைகளை முன்நிறுத்தி "இந்திய-இலங்கை துரோக ஒப்பந்தத்தை" கைச்சாத்திட்டது. தமிழீழ மக்கள் மேல் அவ் ஒப்பந்தத்தை திணித்தது. சமாதானம் செய்வதென்ற பெயரில் நுழைந்து ஆக்கிரமிப்பு யுத்தத்தை எல்.டி.டி.ஈ.மீதும் மக்கள் மீதும் தொடக்கியது. இந்நிலையில் எல்.டி.டி.ஈ.தவிர்ந்த ஏனைய விறு முதலாளிய இயக்கத் தலைமைகளும், டியூ.எல்.எப் இந்திய விரிவாதிக்க அரசின் உள்நாட்டு கைக்கூலிகளாக வெளிப்படையாக செயற்படத் தொடங்கினர்.

www.tamilarangam.net



தமிழீழ மக்களின் தேசிய விடுதலை யுத்தம் இந்திய ஆக்கிரமிப்பாளர்களையும் எதிர்த்து ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தமாகவும் மாறியது. தமிழீழ மக்களின் போராட்டம் அது நிலையில் பல சிக்கல்களை தேக்கங்களை சந்தித்த போதும் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கில் அது செல்ல வேண்டிய அரசியல்-இராணுவ இலக்கும் திறமையும் வளர்ந்தது. தமிழீழ மக்கள் நடத்தி வரும் தேசிய விடுதலைப் போராட்டமும் இந்திய ஆக்கிரமிப்பு படையை எதிர்த்த நீதிப் போராட்டமும் இந்திய மக்களை குறிப்பாக தமிழக மக்களை விரைவாக சிந்திக்க வைத்தது. இந்திய அரசின் "நண்பன் போல் நடிக்கும்" வேடித்தை களைந்து உண்மையை வெளிச்சம் போட்டு காட்டியது. \ அதே வேளை "இந்திய அரசின் இன ஒடுக்கல் கொள்கைக்கு எதிராக இந்திய விரிவாதிக்கத்திற்கு எதிராக தமிழக மக்களின் தேசிய உரிமைக் குரல் மீண்டும்புயலாக வீசத் தொடங்கியது. தமிழீழ மக்களுக்கும் தமிழக மக்களுக்கும் இடையிலான உறவுகள் மக்கள் அரங்கில் வளரத் தொடங்கியுள்ளன. தமிழகத்திலுள்ள தமிழீழப் போராளிகள், அகதிகளின் இருப்பு இந்திய அரசிற்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது- மாநில அரசுக்கும். மத்திய அரசுக்கும்

இலங்கைத் தமிழர்களுக்கு தார்மீக ஆதரவு கொடுப்பதாக உலக அரங்கில் காட்ட தமிழீழ அகதிகளை வெளிப்பார்வைக்கு பயன்படுத்தி வந்த இந்திய அரசு போராளிகளுக்கு இராணுவப் பயிற்சி - பணம் - முகாம் அமைத்து கொடுத்து தனது கட்டுக்குள் வைத்திருந்த காலம் மாறி-அதனது கைகளையும் மீறி - மாறி.

தமிழீழ மக்களின் போராட்டமும், எல்.டி.டி.ஈ.யும் வளர்ந்தது. இந்திய சார்பு தமிழ்த் தலைவர்களில் ஒருவரான பத்மநாபாவும் இந்திய இலங்கை துரோக ஒப்பந்தத்தின் நாயகன் ராஜீவும் தமிழகத்தில் அழிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து இந்திய-மத்திய-மாநில அரசுகள் தமிழீழ அகதிகளை தனது நேரடி கண்காணிப்பு கட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. அகதிகளும் போராளிகளும் இந்திய அரசிற்கும் ஆருங் கும்பலுக்கும் வேண்டப்படாத விருந்தாளிகள், ஆகினர். இதனால் இலங்கை இனவாத அரசுடன் கூட்டிணைந்து அதன் இனவெறி கொலைக்கரங்களுக்கு அகதிகளை நிர்ப்பந்தித்து அனுப்பி பலியாக்கிடும் சூழ்ச்சி செயல்களில் ராவும்..........ஜெயும்.........ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கை-இந்திய அரசுகளின் கூட்டுச்சதி

என்ன வேடிக்கை------! இல்லை உண்மை........! சிறீலங்கா அரசின் தரைப்படையும் விமானப்படையும் இரவு பகல் பாராது. குழந்தைகளென்றும் வயதானவரென்றும் பிரித்தறியாமல் அழித்தொழிப்பில் ஈடுபட்டனர். தற்பொழுது ஊரடங்கு உத்தரவை தன்னிச்சையாக போட்டுவிட்டு நமது மக்கள் அழிப்பதில் இன்பம் கண்டு கொண்டிருக்கின்றனர்.

www.tamilarangam.net



இன்று திருகோணமலைக்கும் மன்னாருக்கும் எம்.வி. அக்பர் முதல் டி.எஸ். இராமனுஜமும், தமிழகத்திலிருந்து அகதிகளாக வாழும் நம் மக்களை இப்படித்தான் அழைத்து வருகிறார்கள். இலங்கை கடற்படையின் கன்னி வெடியகற்றும் கப்பலும் இந்திய கடற்படைக் கப்பலும், கட்லோரக் ரோந்துக் காவற் கப்பல்களும் போதாதென்று ஹெலியும் மிகவும் பாதுகாப்பாக அழைத்து வருகின்ற மாயைகளை தோற்றுவிக்கின்றன. இவைகள்தாம் உண்மைகளா? திருமலைப் பகுதியில் குண்டு வெடிப்பு செய்தி கேட்ட அகதிகள் அழுது புலம்பி வர மறுத்துள்ளனர். கடலில் குதித்து இறந்து விடவும், கூடாது. தப்பி வேறு பகுதிகளுக்கு நீந்தி செல்லவும் கூடாது. இத்தகைய வெறியுடன் சிறீலங்காவின் இனவாத அதிகார வர்க்கத்தின் கூலிகளான இராணுவத்தினரிடம் நமது மக்கள் மிகவும் பத்திரமாக இந்திய அரசின் கருவிகளான இவர்களால் ஒப்படைக்கப்படுகின்றனர்.

தமிழீழ மக்களின் போராட்டத்தையும் அதன் உந்து விசையாக செயற்படும் போராளிகளையும் எந்த வகையில் மோசமும் நாசமும் விளைவித்தாவது அழிக்கவே சிறிலங்கா அரசு முயன்று வருகின்றது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பத்தில் இருந்தே தமிழக மக்கள் தமது உதவிகளை தமிழீழ மக்களுக்கு நல்கி வருகின்றனர். இவ்வகை பின்புல உதவிகளை அறுத்தெறிவதில் நாட்டம் காட்டியுள்ளது. இவற்றின் தொடர்ச்சி இன்று இந்திய-மத்திய-மாநில-அரசுகளின் தாமாக முன்வந்து உதவிகளை அறுத்தெறிவதில் ஆரும் சுயநலக் கும்பல்கள் போட்டி போட்டு ஆரோகக் கடமைகளை ஆற்றுகின்றன.

தமிழக மக்களுக்கு துரோகமிழைக்கும் இவர்கள் தமிழீழ மக்களுக்கு அரோகமிழைப்பதில் வியப்பேதுமில்லைதான்! இவ்வகை துரோகத்தின் விளைச்சலை மேலெழுந்தவாரியாக இந்திய விரிவாதிக்க எதிர்ப்பைக் காட்டிய சிறீலங்கா அரசாகட்டும் இனவாதிகளாகட்டும், அவர்களுடன் இணைந்தே இருகரம் கூப்பி பிரேமதாசரும் வரவேற்றுள்ளார்.

தமிழகத்திலுள்ள தமிழீழ அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்றுவதும் இலங்கை அரசிடம் ஒப்படைப்பதும், என்பதன் அடிப்படையில் "இலங்கை-இந்திய கூட்டுச்சதி- ஒப்பந்தம்" மானது இரு அரசுகளாலும் இரகசியமாக செய்யப்பட்டுள்ளது. இலங்கை வெளியுறவு மந்திரி ஹெறரால்டும் இந்திய உள்நாட்டு மந்திரி சவானும் செய்து கொண்ட "அகதிகளைப் பரிமாற்றும் ஒப்பந்தம்" மானது (அகதிகளை நிர்ப்பந்தப்படுத்தி வெளியேற்றும்- பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம்) இதன் அடிப்படையில்தான் இன்று அத்தனையும் நடைபெறுகின்றது.

தமிழகத்திலுள்ள 2,60,909 தமிழீழ அகதிகளில் 1,11,000 அகதிகள் 189 திறந்தவெளி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் வெளியிடங்களில் தங்கியுள்ளனர். சிறப்பு சிறைக் கொட்டடிகள் (சிறப்பு முகாம்களில்) போராளிகளுக்கென்றே அமைக்கப்பட்டுள்ளன. புதுக்கோட்டையில் டெலோ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயக்கத்தவர், சேலம் தம்மம்பட்டியில் ஈ.என்.டி.எல்.எப். இயக்கத்தவரும், எம்.ஜி.ஆர்.மாவட்டம் புழல் முகாமில் ஈ.பி.ஆர்.எல்.எப். மற்றும் டெலோ இயக்கத்தவரும், வேலூரில் எல்.டி.டி.ஈ.இயக்கத்தவரும் ஆதரவாளர்களும் அடைக்கப்பட்டுள்ளனர். தமிழக உளவுத்துறையின் கணிப்பீட்டின்படி திறந்த வெளி அகதி முகாம்களில் உள்ளவர்களை முதற் கட்டமாக இலங்கைக்கு அனுப்புவது: அதனால் ஏற்படும் சாதகபாதகங்களைப் பொறுத்து அடுத்த கட்டமாக சிறப்பு முகாம்களிலுள்ள போராளிகளை அனுப்புவது என்ற திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பாக சிறப்பு முகாம்களில் ஒரு இரகசியாக கருத்தறியும் வேலையை உளவுத் துறையினர் நடாத்தி உள்ளனர். இவற்றைக் கொண்டே, அகதிகளை நிர்ப்பந்தப் படுத்தியும் ஆசை காட்டியும் முப்பதினாயிரம் அகதிகளளவில் தயார் படுத்தப்பட்டு இந்திய மறுவாழ்வுத் துறை அதிகாரிகள் வசம் உள்ளன.

இவற்றை உறுதிப் படுத்தும் வகையில் "கோவை மனித உரிமை பாதுகாப்பு மன்றம்" நேரடியாக தமிழீழ அகதிகளைச் சந்தித்து, அகதிகள் நிர்ப்பந்தப்படுத்தியும் ஏமாற்றப்பட்டு வெளியேற்றப்படுவதையும், முகாம்களின் காவல்துறையினரின் அத்துமீறல்களையும் அவர் வாழ் நிலைக் கஷ்டங்களையும், மறுவாழ்விற்கான ஐக்கிய நாடுகளின் பிரதிநிதிகள் செல்வதை ஜெ-அரசு தடுத்துள்ளதையும் கோவை-பெரியார் மாவட்டங்களில் நேரடி ஆய்வு செய்து அம்பலப்படுத்தியுள்ளமை கவனிக்கத் தக்கது.

தமிழீழ அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றி பெற்றுக் கொள்ளும் திட்டத்தின் முதற் கட்டமாக எட்டாயிரம் அகதிகளை பெற்றுக் கொள்ள இலங்கை மறுவாழ்வுத்துறைச் செயலர் கிறிஸ்டி சில்வா ஒப்புக் கொண்டுள்ளனர். இவர்களுக்காக ஐக்கிய நாடுகளின் அகதி நலன் பிரிவுடன் சிறீலங்கா அரசு மூன்று அகதிகள் முகாம்களை திருமலையிலும் மன்னாரிலும் திறந்து வைத்துள்ளது. தமிழகத்திலிருந்து வந்த முதற் பிரிவு அகதிகளை அமைச்சர் ஜயரத்ன உணவுப் பொட்டலங்கள் கொடுத்து வரவேற்றுள்ளார். இலங்கை-இந்திய அரசுகளின் இக்கூட்டுச் சதிக்கு அகதிகளின் ஏழ்மை நிலையையும், அமைதிக்காக ஏங்கும் மன நிலையையும் இச்சதிகாரர்கள் நன்கு பயன்படுத்தியுள்ளனர். தமிழகத்திலிருந்து அகதிகள் வெளியேற்றப்படும் பொழுது ஒரு குடும்பத்திற்கு தலா ரூபா இரண்டாயிரம் கொடுப்பதாக ஜெ-அரசும், இலங்கை அரசும் அகதிகளைப் பெற்றுக் கொள்ளும் பொழுது, தலா ரூபா இரண்டாயிரம் கொடுப்பதாக ஆசை காட்டிவிட்டு, நடைமுறையில் இரண்டு அரசுகளும் மொத்த தொகையில் எட்டிலொன்று அதாவது ஐநூறு ரூபாய் மட்டுமே கொடுத்து ஏமாற்றி விட்டன.

தமிழகத்திலிருந்து இங்கு கொண்டு வரப்படும் அகதிகளை இங்குள்ள முகாம்களில் சில தினங்களுக்கு மட்டும். தங்க வைத்து விட்டு, அகதிகளுக்கு எல்லாவிதமான வசதிகளும், உணவும், பொழுது போக்குகளும், அமைதியான சூழ்லும் கிடைப்பதாக மாயைகளை உருவாக்கி நடிக்க வைத்து வீடியோ பதிவு செய்கின்றனர். இவற்றை தமிழகத்திலுள்ள அகதிகளுக்கு காண்பித்து பொய்மையான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்காலிக மனமாற்றத்தை ஏற்படுத்திட இலங்கை-இந்திய அதிகாரிகள் முயல்கின்றனர். அகதிகளை பண ஆசை காட்டியும், ஏமாற்றியும், மனமாற்றத்தை ஏற்படுத்தியும், இந்திய-இலங்கை அரசுகள் இக்கூட்டுச் சதியை நிறைவேற்றுகின்றன என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மியான்மாரில் நடக்கும் இராணுவ சர்வாதிகார ஆட்சியும் அதன் தேசிய இன ஒடுக்குமுறை கொடூரங்களுக்கும் இடையில் சிக்கி வாழும் இந் நாட்டு மக்கள் பயந்தும் தப்பித்தும் நாட்டை விட்டு வெளியேறுகின்றார்கள். வெளியேறும் அகதிகளை மியான்மாரின் எல்லைக் காவற்படை சுட்டதில் அண்மையில் நூற்று ஐம்பது பேருடன் படகு கடலில் மூழ்கடிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கான அகதிகள் கடல் வழியாக தப்பி இந்திய பகுதிகளுக்குள் வருகிறார்கள். அதே போல் வங்க தேசத்தின் 53 ஆயிரம் அகதிகளும் நாகாலந்தில் அகதிகளாக இருக்கிறார்கள். இத்தகைய அகதி மக்களை போலி அனுதாபம் தெரிவித்து சாமரம் வீசி கிழக்கில் வரவேற்கும் இந்திய அரசும் ஆளும் கும்பல்களும் தென்னகத்தில் தமிழீழ அகதிகளை மட்டும் நிர்ப்பந்தித்து இலங்கை இனவெறி அரசின் இராணுவத்திடம் ஒப்படைக்கிறார்கள்.

இந்திய விரிவாதிக்க வாதிகளின் போலியான அகதி நலனுக்கும், சர்வ தேச அகதி நலன் உரிமை மீறலுக்கும் போலி சனநாயகத்தின் தன்மைகளுக்கு இதை விடவும் உதாரணம் வேண்டுமா!

இந்திய விரிவாதிக்க அரசு வடக்கில் அசாம், பஞ்சாப், காஷ்மீர், நாகலாந்து, திரிபுரா மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை தனது அரசு இயந்திரத்தையும் ஆக்கிரமிப்பு இராணுவத்தையும் கொண்டு அடக்கி ஒடுக்க முயற்சிக்கிறது. ஆனால் மக்களின் போராட்டங்கள் அதையும் மீறி வளர்ந்து வருகிறது. இரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் உடைவைத் தொடர்ந்து புதிய உலக நியதியை உருவாக்கியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு சர்வதேச கைக்-கூலியாக உருவாக்கும் முதல் செயற்பட்டு வரும். இஸ்ரேலையும் அதனை கொலைப்-படையையும் அதன் உளவு நிறுவனமான மொசாத்தையும் இந்திய விரிவாதிக்க அரசு புதிதாக நுழைக்கு அழைப்பதற்கு முயன்றுள்ளது. இஸ்ரேலின் அரச பயங்கரவாத நிபுணத்துவத்தை அனுபவத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு மக்களினதும் அயல்நாட்டு மக்களினதும் போராட்டங்களை ஒடுக்க ராவ் அரசு முயற்சிகள் மேற்கொண்டுள்ளது.

இவ் யூத வெறி சியோனிச இஸ்ரேலும் அதன் அரச கொலைப்படை மொசாத்தும் 1984 இல் பாலஸ்தீன* ஷியா முஸ்லீம்களின் அகதி முகாம்கள் மீது ஜெட் விமானங்களைக் கொண்டு தாக்குதல் நடாத்தி தன யூத வெறியையும் அரசு பயங்கரவாதத்தையும் உலக மக்களுக்கு எடுத்துக் காட்டி உள்ளது. தமிழீழ அகதிகளும் இவற்றை மறந்து விடவில்லை.

சிறீலங்கா சிங்கள இனவெறி அரசிற்கும் இஸ்ரேலிய யூத வெறி அரசிற்கும் இடையே நிலவிவரும் இனவெறி அரசபயங்கரவாத இணக்கத்தையும், இந்திய விரிவாதிக்க அரசிற்கும் இஸ்ரேலுக்கு மிடையில் ஏற்பட்டு வரும் அரச பயங்கரவாத இணக்கத்தையும் தமிழீழ-தமிழக மக்கள் இனம்கண்டு கொள்வதுடன் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும்.

- - - - ----------------

* மக்களின் சப்ரா-சாட்டில்லா அகதி முகாம்களை தாக்கி அழித்தும் விட்டன. அண்மையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மத்தியில் ராவும் மாநிலத்தில் ஜெயும், இணைந்து தமிழீழ அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கு எந்தப் பாராளுமன்ற முதலாளித்துவ அரசியல் கட்சிகளிடமிருந்தும் போலிக் கம்யூனிஸ்டுகளிடம் இருந்தும் எதிர்ப்பு கிளம்பவில்லை. ஆதிக்க நலன்களுக்கும் ஆட்சிக் கட்டில் மீதான அதிகாரத்திற்கும், பதவி-வெறி பிடித்து அலையும் * மக்களையும் மண்ணையும் ஏகாதிபத்தியங்களுக்கும் ஏகபோக நிறுவனங்களுக்கும், தாரை வார்த்து காட்டிக் கொடுக்கிறார்கள். இவர்கள் தாம் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர நலனுக்காக குரல் கொடுப்பார்கள். என்று நாம் எதிர்பார்க்க இயலாது.

*நாற்காலி சுகவாசிகளான இவர்களுக்கு சொந்த

தமிழீழ மக்களின் உண்மையான நண்பர்கள் இந்திய மக்களும் குறிப்பாக தமிழக மக்களும், மக்களின் நலனுக்காகவும் விடியலுக்காகவும் போராடிடும் முற்போக்கு ஜனநாயக விடுதலை இயக்கங்கள்தாம், இவர்களே நமக்காக நமது நலன்களுக்காக இறுதிவரை குரல் கொடுப்பார்கள்.

சிறீலங்கா இனவாத அரசு தமிழீழ மக்கள் மீது தொடுத்துள்ள மூர்க்கத்தனமான யுத்தத்தை அதன் அழிவுகளை சர்வதேச அளவில் மறைக்க, தமிழீழத்தில் அமைதி நிலவுவதாக காட்டிட, ராவினரும், ஜெயினரும் "தமிழீழ அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றும் திட்டத்தை" பிரேமதாசா தந்திரத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

இந்திய அரசு போராளிகள் மீதும் அகதிகள்மீதும் தொடுத்து வரும் நெருக்கடிகளை சாதகமாகப் பயன்படுத்தி 1987ம் போன்றே தமிழீழ மக்கள் மீதும் எல்.டி.டி.ஈ. மீதும் மேலும் "ஒரு துடைத் தொழிக்கும் யுத்தத்தை" சிறீலங்கா அரசு முடக்கி விட்டுள்ளது. தமிழீழ-தமிழக மக்களுக்கிடையிலான உறவுகளை அறுத்து அல்லது தடுத்து, யுத்த நடவடிக்கைகளினால் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறாது தடுப்பதன் மூலம் அரசின் அக்கிரமச் செயல்கள் அனைத்தையும் மூடி மறைத்து "மூடப்பட்ட முற்றுகை யுத்தத்தை நடத்துவதன் மூலம்" தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்கிவிட முயல்கிறது, சிறீலங்கா இனவெறி அரசு.

எல்.டி.டி.ஈ.யுடன் நடக்கும் யுத்தத்தில் அரசு துருப்புக்கள் கைப்பற்றிய பகுதிகளில் அல்லது கண்காணிக்கக் கூடிய இடங்களிலிருந்து முன்னர் நாட்டை விட்டு வெளியேறிய அகதிகளை இந்திய அரசிடமிருந்து சிறீலங்கா அரசு பெற்றுக் கொள்கிறது. அதிலும் அகதிகளாகவுள்ள அரச ஊழியர்களை முதன்மைப்படுத்தி பெற்றுக் கொள்கிறது. காரணம் அரச துருப்புக்களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் சீர் குலைந்துள்ளது. அரசு அமைப்பிற்கு சேவை செய்யக் கூடியவர்கள் அங்கு இல்லை. எனவே சிவில் நிர்வாகத்தை புனர் அமைப்பதும், மீண்டும் அரசிற்கு சேவகம் செய்யக் கூடியவர்களை இனங் காண்பதற்குமான தேவை அரசுக்கும் இராணுவத்திற்கும் ஏற்பட்டுள்ளது. இதனால்தான் இந்தியாவிலுள்ள தமிழீழ அகதிகளுக்கு இந்திய அரசு கொடுக்கும் நெருக்கடிகளால் "இந்தியாவில் இருப்பதை விட லங்கைக்குச் சென்று சாவதே மேல்" என்று விரக்திநிலையடைந்து அகதிகள் மனநிலையில் சோர்வை

www.tamilarangam.net

அடைகின்றனர். இவ்வகை பலவீனங்களை அரசுகள் பயன்படுத்தி அகதிகளை மோசடி செய்கின்றன. பல சலுகைகள் விளம்பரப்படுத்தப்படுகின்றன. உயிர் நீத்த குடும்பம், காயமடைந்த குடும்பம், ஏழைக்குடும்பம் எனப் பிரித்து பலவித தொகை தவணைகளில் வழங்குவதாக விளம்பரப் படுத்துகின்றனர்.

இவ்வகை ஆர்ப்பாட்ட அறிவிப்பெல்லாம் ஒரு குண்டு வெடிப்பைக் கவனம் காட்டி காற்றில் பறக்க விடப்படும். பதிலுக்கு அகதி முகாம்களை ஒட்டிய பகுதிகளில் அல்லது அகதிகள் குடியேறும் இடங்களை ஒட்டி எல்.டி.டி.ஈ. உடன் நடக்கும் மோதலில் இழப்பையையும் தோல்வியையும், இராணுவம் சந்திக்க நேரிடுகையில் மக்கள் மீதும் அகதி முகாம்களின் மீதும் இராணுவம் நுழைந்து தனது வெறியை எல்லா வகையிலும் தீர்த்துக் கொள்ளும் என்பதை கடந்த கால வரலாற்றில் இருந்து நமது மக்கள் அனுபவ ரீதியாகக் கண்டுள்ளனர்.

"அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றிப் பெற்றுக் கொள்ளும்" இலங்கை இந்திய கூட்டுச்சதி பற்றி தமிழீழ மக்கள் மத்தியிலுள்ள இயக்கங்கள் திட்டவட்டமான எதிர்ப்பைத் தெரிவிக்காதது மிகவும் வேதனைக்குரியது. துரோக இயக்கங்களையும் டியூ.எல்.எப்.ம், இவற்றைப்பொறுத்த வரை அவர்களின் இந்திய இலங்கை அரச சார்பு நிலை அவர்களது வாயை திறக்கவிடாது. சனநாயகம், மனித உரிமை, அகதி நலன் பற்றி பிதற்றும் இவர்கள் அகதிகள் துன்புறுத்தப்படுவதைக் கூட காணாது நியாயம் அநியாயம்காட்சிகளை அரங்கேற்றி மக்கள் மத்தியில் மேலும் அம்பலமாகியுள்ளனர். டெலோ, ஈ.என்.டி.எல்.எப். இயக்க தலைவர்கள் "அகதிகளுக்கு ராஜீவ் இறந்தபின் தமிழக காவல்துறை நிர்ப்பந்தம் கொடுப்பதாக" கூறியுள்ள போதும் அதன் அடிப்படை காரணங்களையும் இந்திய அரசின் நெடிய நோக்கங்களை மக்களுக்கு மறைத்திருப்பதும் வேதனைக்குரியதே. வேடிக்கைக்குரியதே.

"மக்கள் மீது அரசு நடத்தும் எல்லா மோசடிகளையும் ஏமாற்றுக்களையும் தாக்குதலையும் மக்களின் நீண்ட கால நலனில் இருந்து கண்டு மக்களுக்கு எதிரியின் முழுத் தோற்றத்தை இனங்காட்டுவதும் போராடுவதும்தான் சரியான மக்கள் இயக்கத்தின் கடமையாகும்".

சிறீலங்கா அரசை எதிர்த்து நின்று போராடிவரும் எல்.டி.டி.ஈ. இயக்கம் கூட அகதிகள் நிலைமை குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கு பி.எப்.எல்.டி. சார்பில் ஒரு வேண்டுகோள் விட்டதுடன் நிறுத்திவிட்டது. அகதிகள் மீதான அக்கறை அதிகம் தென்படுவதில்லை. யுத்தத்திற்கு தேவை மனித பலம், அவற்றையும் பெற சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு கடந்த காலங்களில் போராட்டத்திற்கு பெற்றுத் தந்த மதிப்புமிக்க இழப்புகளிலிருந்து விடுதலைப்புலிகள் கற்றிருக்க வேண்டும். மீண்டும் தாய் மண்ணுக்கு கொண்டு வரப்படும் அகதிகளை எல்.டி.டி.ஈ. இன் நடவடிக்கைகள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீண்டும் தாய் மண்ணிலிருந்து அன்னியப்படுத்திட எம்மிடத்திலும் அரசுகளுக்கு உதவுவதாக அமையக் கூடாது. அமைந்தால் எதிரிகளின் தந்திரங்களுக்கு எல்.டி.டி.ஈ.யும், கூடவே மக்களும் பலியாவதாகவே அமையும்.

இந்நிலையில் தாய் மண்ணுக்குள் இறக்கப்படும் அகதிகளுக்கு முன்புள்ள கேள்வியும் வழியும் இரவாக அமையின் நல்லதே.

தாங்கள் பிறந்து வளர்ந்த மண்ணிலிருந்து வாழ்ந்த இடத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டும் அதற்கு காரணமான இனவெறி அரசுகளும் கூலிப் படைகளும் அழித்தொழிக்கப்பட்டனவா? இல்லவே இல்லை. அரசும் படைகளும் தமது இனவெறிக் கொள்கை தமிழீழ அழிப்பு காட்டுமிராண்டித்தனங்களிலிருந்து மாறிவிட்டார்களா? இல்லவே இல்லை. ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போதும், இன்று அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றும் போதும் இந்திய விரிவாதிக்க அரசின் "சமாதானமுகமூடி" "நண்பன் போன்ற நடிப்பு" அம்பலப்பட்டுள்ள இவ்வேளையில் எதிரிகளே அகதிகளை அவர்களின் தாய் மண்ணுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள் என்றால், முன்னரைவிட நூறுமடங்கு தந்திரத்துடன் தமிழீழ மக்கள் மீது தமது அடக்கு முறையை தொடரப் போகிறார்கள் என்பதே உண்மை. ஓநாய்கள் ஆடுகளை காப்பது ஏன் என்பதை அகதிகளாகிய நம் மக்கள் நன்கே அறிவார்கள்.

இங்கு வந்துள்ள அகதிகள் சொந்த வாழ்விடங்களுக்கு திரும்பியதும் "அகதிகள்" என்ற அடையாளம் நீக்கப்பட்டு விடலாம். ஆனால் சிறீலங்கா அரசின் இனவாத அரசியல், பொருளாதார, கலாச்சார ஒடுக்கு முறைகள் தமிழின அழிப்புகளை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். அகதிகளுக்கு முன்னுள்ள வழி தமது சொந்த இடங்களில் வாழ்ந்து கொண்டே இனவாத அரசை எதிர்த்து போராடக் கற்றுக் கொள்வதற்கு தமது சொந்த இடங்களில் வாழ்ந்து கொண்டே இனவாத அரசை எதிர்த்து போராடக் கற்றுக் கொள்வதற்கு தமது மண் உரிமை நிலைநாட்டுவதற்கு பதில் தமது சொந்த இடங்களையும் இழந்தால் நிற்கக்கூட மண்ணின்றி எதிரிகளால் மீண்டும் மீண்டும் அலைக்கழிக்கப்படுவோம். படுவார்கள், அவர்கள் விரும்பும் பொழுது உத்தரவு உசாவில்லா படுகொலைகள் நம் மக்களையும் தீண்டும் என்பதை நினைவில் நிறுத்த வேண்டும்.

எனவே நாம் எதிரிகளின் அச்சுறுத்தல்களுக்கு பயந்தும், அழிப்பிற்கு முகங்கொடுக்க முடியாமலும் தாய் மண்ணை விட்டு நகர்ந்து விடக் கூடாது. நமக்கு முன்னிருந்த இருக்கின்ற சிறு முதலாளிய சுத்த ராணுவ இயக்கங்கள் தேசத்தின் முழு மக்களையும் உணர்வு ஊட்டி எதிரியை எதிர்த்து அணி திரட்டிப் போராடவில்லை. இதற்காக சிறீலங்கா அரசு தனது அடக்கு முறையை பரந்து பட்ட மக்கள் மீது ஏவுவதை குறைக்கவும் இல்லை—விடவும் இல்லை.

www.tamilarangam.net



நாமிருந்த மண்ணின் மீது நமக்குள்ள உரிமையை-பிடிப்பைநிலை நிறுத்த வேண்டுமானால் உண்மை உணர்வும், உருக்குலையா துணிவும் மட்டுமல்ல, உண்ண உணவும் உடுக்க துணியும் உழைக்க வேலையும் அனைத்து உரிமைகளும் பெற்று நிம்மதியாக வாழ வேண்டுமானால்,

இவற்றை தர மறுக்கும் அனைத்து எதிரிகளுக்கும் எதிராக "தேச பக்த புரட்சிகர பாதையில் இணைந்து போராடுவதே விடியலுக்கான வழியாகும். தாய் மண்ணைவிட்டு அகல்வதற்குப் பதில் தேசத்தை மீட்கும் புரட்சிகர மக்கள் யுத்தத்தில் மரணத்தை தழுவுவோம்.

எமது போராட்டமும் மரணமும் எங்கள் சந்ததிக்கு விடிவை கொடுக்கட்டும். இல்லையேல் வாழும் வரை போராட கற்றுக் கொடுக்கட்டும்.

— பூங்குயிலன் —

* * * * * * * * * * * * * * * * *

## 'தேசிய சக்தி பற்றிய சில பிரச்சினைகள்

* * * * * * * * * * * * * * * * *

இன்றைய யுத்தத்தில் புலிகளை எவ்வாறு மதிப்பிடுவது என்பது தொடர்பாக பல வாதப்பிரதிவாதங்கள் கடந்த சில காலமாகவே நடைபெற்று வருகின்றன. ஒரு பகுதியினர் புலிகளை பாசிச சக்தியாக இனங் கண்டு அதனை அழிப்பதே பிரதான பணி என்ற வகையில் செயற்படுகின்றார்கள். இன்னோர் பகுதியினர் புலிகளின் போராட்டத்தில் உள்ள தேசிய அம்சங்களைக் கருத்திற்கெடுத்து அதனை தேசிய சக்தியாக இனங்கண்டு அதனைப் பலப்படுத்தும் அளவிற்கு செல்கிறார்கள். இந்த இரண்டு நிலைகளுக்கும் இடைப்பட்ட நிலைப்பாடுகளை பல்வேறு சக்திகள் மேற்கொள்கின்றன. இன்று தீவிரம் அடைந்து வரும் யுத்த நிலைமையில் ஒவ்வொரு அமைப்பும் தனது செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு முன்பு புலிகள் பற்றிய தனது நிலைப்பாட்டை வகுத்துக்கொள்வது அவசியம் என்பதால் தேசிய சக்தி தொடர்பான பலதரப்பட்ட வாதப்பிரதிவாதங்களையும் பரிசீலிப்பது அவசியமானது. தேசிய சக்தி தொடர்பான பல்வேறு நிலைப்பாடுகளையும் பரிசீலிப்பதற்கு முன்பு தேசியம் என்பது பற்றி ஒரு தெளிவான வரையறையை கொண்டிருப்பது அவசியம் என்பதால் நாம் முதலில் முகம் கொடுக்கும் பிரச்சினை, தேசியம் என்பது என்ன? என்பதாகும். தேசியம் என்பது ஒரு வரலாற்றுப் பூர்வமான நிகழ்வாகும். முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் உருவாகும் விரிவான பண்ட உற்பத்தியானது ஒரு பாரிய சந்தையை வேண்டி நிற்கிறது. இதனால் அதுவரையில் நிலவிவந்த சிறுபண்ட உற்பத்தியிற்கு பொருத்தமான குறுகிய தன்னிறைவு கிராமிய பொருளாதார முறையும் அதனுடன் இணைந்த சமூக இனங்காணலும் சிதைந்து புதிய வகையிலான இனங்காணல் உருவாகிறது. பரந்த விரிவான பிரதேசத்தில் தொடர்ச்சியாக வாழும், ஒரே மொழியையும், பொதுவான கலாச்சாரத்தையும் கொண்ட மக்கள் பழைய கிராமிய இனங்காணலை கடந்து தேசிய இனங்களாக தம்மை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனங்களாக முனைகின்றன. இதுவே தேசியத்தின் தோற்றமாகிறது. இவ்வாறு முதலாளித்துவத்தின் ஆரம்பகால கட்டத்தில் தேசிய இனங்கள் விழிப்படைகின்றன. இந்த தேசிய எழுச்சியானது நடப்பில் இருந்து வரும் நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறை, ஆதிக்க முறைகளுக்கும், நிலப்பிரபுத்துவ சமூகத்தின் குறுகிய உணர்வுகளுக்கும் எதிரானது என்பதால் இது இயல்பாகவே நிலப்பிரபுத்துவ எதிர்ப்புத்தன்மை கொண்டதாகவும், முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியை நோக்கி இட்டுச் செல்வதால் வரலாற்றில் முற்போக்கானபாத்திரம் வகிப்பதாகவும் இருக்கிறது.

முதலாளித்துவமானது இன்னும் வளர்கையில் மூலதனமும், சந்தையும் குறிப்பிட்ட தேசிய இனத்தின் எல்லைகளை கடந்து ஏனைய தேசிய இனங்களின் மூலதனம், உழைப்பு, சந்தை ஆகியவற்றுடன் கலக்கும் நிலைமை உருவாகிறது. இந்தவகையான பொருளாதாய நிலைக்கு பொருத்தமான சமூக உணர்வாக தேசிய இனங்கள் ஒன்று கலப்பது எனும் நிகழ்வு தோன்றுகிறது.

ஆகவே தேசியம் என்பது முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன் இரண்டு திட்டவட்டமான இயக்கப்போக்குகளை காட்டுகிறது. முதலாளித்துவத்தின் ஆரம்பகாலத்தில் தேசிய இனங்கள் விழிப்படைவது ஒரு கட்டம். முதலாளித்துவம் முதிர்ந்த நிலையில் தேசிய இனங்கள் ஒன்று கலப்பது இன்னோர் கட்டம் ஆகும்.

காலனித்துவத்திற்கு உட்பட்ட நாடுகளின் தேசிய எழுச்சியானது முதலாளித்துவம் இயல்பாக தோன்றி வளர்ந்த நாடுகளில் ஏற்பட்ட தேசிய எழுச்சியில் இருந்து வேறுபட்டதாகும். காலனி ஆதிக்கத்தை முன்னெடுக்கும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளின் உடனடி நோக்கம் ஏனைய நாடுகளை சுரண்டுவதும் கொள்ளையடிப்பது-மேயாகும்இந்த நோக்கத்திற்கு பொருத்தமான விதத்தில் ஆதிக்க நாடுகள் காலனி நாடுகளின் பொருளாதார அமைப்புகளை, தனக்குச் சேவை செய்யும் விதத்தில் மாற்றியமைக்கின்றன. காலனி நாடுகளில் முதலாளித்துவம் சுயமாக வளர்வதை தடுத்து காலனிநாடுகள் தனது முதலாளித்துவ உற்பத்திக்கு சேவையாற்றும் விதத்தில் மலிவான மூலப்பொருட்களை விநியோகிக்கவும், தனது உற்பத்திப் பொருட்களுக்கு இலாபகரமான சந்தையாகவும் அமையும் விதத்தில் மாற்றி விடுகின்றன. உள்ளூர் உற்பத்தி முறைகள் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றன. தமது உற்பத்திப் பொருட்களான சந்தையை செயற்கையான முறையில் உருவாக்கப்படுகின்றன. இதன் மூலம் காலனி நாடுகளின் பொருளாதாரத்தை தனது நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் பலவந்தமாக பிணைத்து விடுகின்றனர். இப்படியாக ஆதிக்கநாடுகளின் நலன்களுக்கு கீழ்ப்பட்ட விதத்திலேயே உள்ளூர் முதலாளித்துவம் தோன்றவும், வளரவும் ஆதிக்க நாடுகள் அனுமதி அளிக்கின்றன.

இப்படிப்பட்ட சாதகமற்ற நிலையிலேயே காலனிநாடுகளில் முதலாளித்துவம் தோன்றி மெதுவாக வளர்கிறது. இவ்வாறு மெதுவாக வளர்ந்து வரும் முதலாளித்து-வமானது தனது வளர்ச்சியின் ஒரு கட்டத்தை அடைகையில் அது ஆதிக்க நாடுகளின் நலன்களுடன் நேரடியாக முரண்படத் தொடங்குகிறது. இந்த நிலையில் ஆதிக்க

www.tamilarangam.net



நாடுகளின் பிடியிலிருந்து விடுதலை பெறுவது காலனி நாடுகளின் முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு அவசியமாகிறது. இதனால் தேசிய முதலாளித்துவ வர்க்கமானது ஆதிக்க சக்திகளின் சுரண்டலினாலும், ஒடுக்கு முறையினாலும் பாதிக்கப்பட்டு ஏற்கனவே வெறுப்புற்றிருக்கும் ஏனைய வர்க்கங்களையும் இணைத்துக் கொண்டு காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் குதிக்கிறது. காலனி நாடுகளில் தேசியமானது ஆதிக்க நாடுகளுக்கு எதிரான போராட்டத்தில் பிறக்கிறது. இந்த நிலையில் ஆதிக்க நாடுகளில் பொருளாதாரத்துடன் தம்மை நெருக்கமாக பிணைத்துக் கொண்டுள்ள உள்ளூர்தரகு முதலாளிகளைப் பொறுத்தவரையில் ஆதிக்க நாடுகளை எதிர்ப்பது என்பது அதன் பொருளாதார நலன்களுக்கு முரணானது என்பதால் இந்த வர்க்கமானது ஆதிக்க நாடுகளுக்கு விசுவாசமாக செயற் படுகிறது. இதனால் தேசிய சக்திகளின் இலக்குகளில் ஒன்றாகிறது. நிலப்பிரபுத்துவ வர்க்கங்கள் ஆதிக்க நாடுகளால் பாது-காக்கப்படும் வர்க்கங்களாக இருப்பதனாலும், தேசிய எழுச்சியின் மூலம் தேசிய முதலாளி வர்க்கமும் ஏனைய சுரண்டப்படும் வர்க்கங்களும் தமது ஆதிக்கத்திற்கு முடிவு கட்டிவிடும் என்பதாலும் இந்த வர்க்கமும் தேசிய விடுதலைக்கு எதிரான நிலைப்பாட்டை எடுக்கிறது. ஆகவே தேசிய விடுதலை இயக்கத்தில் தேசிய முதலாளிகள் குட்டி முதலாளிகள் புத்திஜீவிகள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் பிரதான இயங்கு சக்திகளாக இருக்கின்றன. தரகு முதலாளித்துவம் நிலப்பிரவுத்துவம் என்பன போராட்டத்தின் இலக்குகளாகின்றன.

இலங்கையில் தேசிய எழுச்சியானது இந்தியாவின் தேசிய எழுச்சியிலும் பார்க்க அடிப்படையில் வேறுபட்ட சில அம்சங்களைக் கொண்டதாகும். இந்தியாவில் போலன்றி இலங்கையில் முதலாளித்துவ சக்திகள் போதியளவு பலம்பெற்றதாக விளங்கவில்லை. மிகவும் பலவீனமாக முதலளித்துவமானது மிகவும் பலவீனமான தேசியத்தையே தோற்றுவித்து. இலங்கையில் சாராயக் குத்தகை, காரியக்கரங்கம் போன்ற துறைகளில் மூலதனமிட்டு வளர்ந்து வந்த பலவீனமான முதலாளித்துவ சக்திகள் பிரித்தானிய முதலாளித்துவ சக்திகளுடன் மோதுமளவிற்கு பலம்பெற்று விளங்கவில்லை. இந்த சக்திகளது போட்டியாளர்களாக விளங்கியது பிரித்தானிய முதலாளிகள் அல்ல. மாறாக உள்ளூரில் ஏற்கனவே வியாபாரம் போன்றவற்றில் ஈடுபட்டு வந்த தமிழ், முஸ்லீம், இந்திய வியாபாரிகளேஇவர்களது முதல் இலக்காக இருந்தார்கள். சிங்கள, பௌத்த தேசிய வாதத்தை முன்னெடுத்த இவர்கள் பிரித்தானிய காலனி ஆதிக்கத்துடன் மோதுவதற்குப் பதிலாக ஆரம்பத்திலேயே சிறுபான்மை இனங்களை நசுக்கும் வடிவத்தை பெறலானார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் உருவான முற்போக்கான சிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் ஜனநாயகப் புரட்சியின் ஒரு பகுதியாக அமைந்த தேசியத்திற்குப் பதிலாக இலங்கையில் ஏகாதிபத்தியத்திற்கு சேவை செய்யும் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக பிற்போக்கு அம்சங்களை முன்னெடுக்கும், ஜனநாயகத்தை மறுக்கும் 'குறுகிய' தேசியவாதமே தோற்றம் பெற்றது.

ஒரு நாட்டில் தோன்றும் தேசிய இயக்கம் எந்த அளவிற்கு பலம் பெற்றதாக

www.tamilarangam.net



விளங்குகிறது என்பது இரண்டு முக்கிய காரணிகளில் தங்கியிருக்கிறது. முதலாவது, அந்த நாட்டில் தோன்றும் முதலாளித்துவ பலம் எப்படிப்பட்டது என்பது, பலமான முதலாளித்துவ வளர்ச்சி முற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது. பலவீனமான முதலாளித்துவமானது பிற்போக்கான தேசியத்தை தோற்றுவிக்கிறது.

இரண்டாவது, தேசியம் என்பதில் அந்த சமூகத்தின் பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் பிரதிபலிக்கச் செய்கின்றன. தேசிய எழுச்சியில் இணைந்து கொள்ளும் ஒவ்வொரு வர்க்கமும் தத்தமது நலன்களை மனதில் கொண்டே செயற்படுகின்றன. எந்தவர்க்கம் தேசிய இயக்கத்தை தலைமை தாங்குகிறது என்பதைப் பொறுத்து தேசிய இயக்கத்தின் முற்போக்கான தன்மை அமைகிறது.

தமிழ் தேசியமானது சிங்களப் பேரினவாதத்திற்கு எதிரான போராட்டத்திலேயே உண்மையில் தோற்றம் பெற்றது. சுதந்திரத்திற்குப் பின்பு அதிகாரத்திற்கு வந்த சிங்களத் தரகு முதலாளித்துவ வர்க்கம் இனவாத கண்ணோட்டத்துடன் முன்னெடுத்த பல்வேறு இனஒடுக்குமுறை நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய இனத்தின் பல்வேறு வர்க்கங்களையும் வர்கத் தட்டுக்களையும் தேசிய இயக்கத்தில் குதிக்குமாறு தூண்டியது. மலையகமக்கள் பிரஜா உரிமை. வாக்குரிமை பறிப்பு. தமிழ்ப் பிரதேசம் திட்டமிட்ட விதத்தில் பொருளாதார ரீதியாக பாகுபாட்டுடன் நடத்தப்படல். குடியேற்றம் சிங்களம் மட்டும் என்ற மொழிக் கொள்கை, கல்வி வேலை வாய்ப்புக்களில் காட்டிய பாரபட்சம் போன்றவை இறுதியில் இனக் கலவரம், இனப் படுகொலை எனும் வடிவங்களை எட்டிய பின்பு தமிழ்த் தேசிய இனத்தில் ஒவ்வொரு வர்க்கமும், வர்கத்தட்டும் தேசியத்தை நோக்கி தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகியது.

நவகாலனித்துவ பிடியில் சிக்கியுள்ள குறைவிருத்தி நாடுகளில் தேசிய முதலாளிவர்க்கம் இருக்கமுடியுமா? என்ற பிரச்சினையுடன் கூடவே சிங்கள தரகு முதாளித்துவ அரசு இனவாத கண்ணோட்டத்துடன் கடைப்பிடித்த தமிழ்ப் பிரதேசத்தை கைத்தொழில் ரீதியாக வளரவிடாமல் தடுக்கும் கொள்கையின் காரணமாகவும் தமிழ்ச் சமுதாயத்தில் குறிப்பிடத்தக்க பலத்துடன் தேசிய முதலாளி வர்க்கம் என்ற ஒன்று காணப்படவில்லை. அல்லது மிகவும் பலவீனமாகவே இருக்கிறது. அப்படி யாராவது இருப்பின் அவர்கள் சிறு உற்பத்தியாளர்கள் என்ற வகையில் தான் உள்ளார்கள். இவர்கள் சிறீலங்கா அரசின்பேரினவாத ஏகாதிபத்திய சார்பு நிலைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்கள். இதனால் தமிழ்த் தேசியத்தின் ஆதரவாளர்கள். ஆனால் வர்க்கம் என்ற வகையில் குறிப்பிடத்தக்க பங்காற்றும் அளவிற்கு இவர்கள் பலமானவர்கள் அல்ல.

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் தரகு முதலாளி வர்க்கத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றிய தமிழ்த்தரகு முதலாளிகள் சுதந்திரத்திற்கு பின்பு அரசினால் படிப்படியாக ஒதுக்கப்பட்டு வந்துள்ளார்கள். அடுத்தடுத்து வந்த இனக் கலவரங்கள் இவர்களை இன்னும் பலவீனமடையச் செய்துள்ளது. இவர்கள் சிங்கள தரகு முதலாளி வர்க்கத்துடன்

www.tamilarangam.net



சந்தையை பங்கு போட்டுக் கொள்வதற்காக போட்டியிடுகின்றார்கள். ஆனால் அரசும் பேரினவாதமும் இவர்களைத் தடுக்கிறது. இதனால் இவர்கள் சிங்கள பேரினவாத தரகு முதலாளித்துவ அரசுக்கு எதிராக தமிழ்த் தேசியத்தை ஆதரிக்கிறார்கள். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தை அரசுடன் பேரம் பேசும் சாதனமாக பயன்படுத்தப் பார்க்கிறார்கள். பேரம் பேசலின் மூலம் தமக்குரிய பங்கைப் பெற முடியாத விடத்தில் தமிழ்ச் சந்தையை தனியே பிரித்தெடுத்து அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு முயல்கிறார்கள். ஏகாதிபத்திய எதிர்ப்போ, இந்திய மேலாதிக்க எதிர்ப்போ இவர்களது நிலைப் பாடல்ல. தனது சித்தாந்த அரசியல் செல்வாக்கை தேசிய விடுதலைப் போராட்டத்தில் நிலை நாட்ட இந்த வர்க்கம் பல வழிகளிலும் தொடர்ந்து முயற்சி செய்யும்.

குட்டி முதலாளிகள் புத்தி ஜீவிகள் போன்றோர் அரசின் பேரினவாத நடவடிக்கைகளான மொழிக் கொள்கை, கல்வி, வேலை வாய்ப்பிலான பாரபட்சம், குடியேற்றம், இன ஒழிப்பு நடவடிக்கைகள் போன்றவற்றால் தேசிய இயக்கத்திற்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். தேசிய இயக்கத்தின் முக்கிய சக்தியாக இவர்கள் இருப்பினும் ஒரு உறுதியான, புரட்சிகரமான நிலைப் பாட்டைத் தொடர்ந்து முன்னெடுக்க மாட்டாதவர்கள். ஊசலாட்ட சக்திகள் முதலாளித்துவ சித்தாந்தத்தின் பலமான காவிகள். தேசிய இயக்கத்தில் ஏற்படும் ஊசலாட்டங்களுக்கு பெரியளவில் காரணமானவர்கள் ஸ்ரீ லங்கா அரசின் குடியேற்றம், திறந்த பொருளாதாரக் கொள்கைகள் காரணமாகவும் இன ஒழிப்பு நடவடிக்கைகள் காரணமாகவும் விவசாயிகள், நிலப்பிரபுத்துவ சக்திகள், பணக்கார விவசாயிகள் நடுத்தர, வறிய விவசாயிகள், விவசாயக் கூலிகள் போன்ற அனைவரும் உள்ளடங்கலாக சிங்கள பேரினவாத, தரகு முதலாளித்துவ அரசிற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார்கள். தேசிய விடுதலை என்பது ஒரு வகையில் நிலம் பற்றிய பிரச்சினையாகவும் இருப்பதால் இவர்கள் தேசிய விடுதலையின் முக்கிய ஆதரவாளர்கள். குறிப்பாக இதன் அடித்தட்டுக்கள் பலமான ஆதரவாளர்களாவர். தேசிய விடுதலை இயக்கத்திற்கு பெருமளவிலான போராளிகள் இவர்கள் மத்தியில் இருந்தே தோன்றுகிறார்கள்.

தொழிலாளி வர்க்கமானது இலங்கையின் குறைவிருத்தி காரணமாகவும், வடக்கு கிழக்கில் தொடர்ந்து இடம் பெற்ற பொருளாதார பாரபட்சம் காரணமாகவும் தமிழ்ப் பிரதேசத்தில் கைத்தொழில் விருத்தி மிகவும் குறைவு. இதனால் தொழிலாளர் வர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். சிங்கள பேரினவாதத்தால் இவர்களும் பாதிக்கப்படவே செய்கிறார்கள். பொதுவாகவே பேரினவாத ஒடுக்கு முறையின் கொடுமையை சுரண்டும் வர்க்கங்கள் சுரண்டப்படும் வர்க்கங்களின் தலையில் சுமத்தி விடுவதால் சுரண்டப்படும் வர்க்கங்களே அதிகளவில் துன்பத்திற்குள்ளாகின்றன. இந்த வகையில் சுரண்டப்படும் வர்கங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பலமான பங்காற்றக் கூடியவை. ஆனால் ஒரு வர்க்கம் என்ற வகையில் இது எண்ணிக்கையில் சிறிதாகும். ஏனைய வர்க்க சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போயிருப்பது இதன் பிரதான குறைபாடாகும். தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஒரு பலமான பாட்டாளி வர்க்க கட்சி தோன்றாததற்கான காரணங்களை பாட்டாளி வர்க்கத்தின்

www.tamilarangam.net



பலவீனமான நிலையுடன் இணைத்துப் பார்க்கையில் புரிந்து கொள்ளக் கூடியதே.

ஆகவே தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு வர்க்கங்களின் நலன்களும் பிணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வர்க்கமும் தன்னுடைய வர்க்க நலன்கள் என்ற கண்ணோட்டத்திலிருந்தே இதனை அணுகுகின்றன. தேசிய விடுதலைப் போராட்டத்தில் எழும் பல்வேறு திருப்பு முனைகளின் போது பலதரப்பட்ட கோரிக்கைகளை புரிந்து கொள்ள வேண்டுமாயின் அந்த கோரிக்கைகளின் பின்னால் ஒழிந்திருக்கும் நலன்கள் எந்த வர்க்கத்திற்குரியவை எனக் கண்டறிய வேண்டும். தேசிய இயக்கத்தில் ஏற்படும் முன்னேற்றங்களையும், பின்னடைவுகளையும் அந்தந்த காலகட்டத்தில் போராட்டத்தில் தலைமை கொடுக்கும் வர்க்கங்களை இனம் கண்டு கொள்வதன் மூலமே விளக்க முடியும். இவ்வாறு தமிழ்த் தேசியத்தின் பலம், பலவீனங்கள், முற்போக்கான பிற்போக்கான அம்சங்களைப் புரிந்து கொள்வதற்கும் தமிழ் சமுதாயத்தில் ஏற்படும் முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி நிலையும் போராட்டங்களுக்கு தலைமை தாங்கும் வர்க்கங்களின் தன்மையையும் புரிந்து கொண்டாலேயே விளக்க முடியும்.

தமிழ்த்தேசியத்தின் குறிப்பான தன்மைகள் எவை?

நிலப்பிரபுத்துவ கட்டுக் தளைகளிலுள் தோன்றி வளரும் முதலாளித்துவமானது ஒரு முன்னேற்றகரமான உற்பத்தி முறையாகும். இந்த முதலாளித்துவ உற்பத்தி முறையானது அதன் வளர்ச்சிக்கு அவசியமான பல முற்போக்கான சமூக வடிவங்களை மதிப்பீடுகளை படைக்கிறது. இதனால் நிலப்பிரபுத்துவத்தின் பிற்போக்கான மதிப்பீடுகளை தகர்த்தெறியும் தேசிய இயக்கமானது பலமுற்போக்கான அம்சங்களை கொண்டிருக்கிறது. முற்போக்கான தேசியவாதம் என்பது பல விருவான மானுட விழுமியங்களையும் படைப்பதாக இருக்க வேண்டும். பழைய நிலபிரபுத்துவ மதிப்பீடுகள் கடந்து வருவது பிரதேச, சாதி, மத தடைகளை கடந்து இனம் காண முற்படுவது என்பது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களுள் ஒன்றாகும். தேசிய இனப் பிரச்சினை என்பது அடிப்படையில் இனங்களுக்கிடையிலான ஜனநாயகம் பற்றிய பிரச்சினைகளாகும். முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு பண்டங்களை மட்டுமல்ல உழைப்பை விற்பதிலும் மூலதனத்தை இடுவதிலும், சந்தையில் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் போட்டியிடும் நிலைமை இருப்பது அவசியமானது. இதனால் முதலாளித்துவ வர்க்கமானது சுதந்திரப் போட்டிக்கு அவசியமான ஜனநாயகத்தை வலியுறுத்துகிறது. எந்தவொரு தேசிய இனப்பிரச்சினைக்கும் முதலாளித்துவத்தினுள் முரணற்ற ஜனநாயகத்தின் மூலம் தீர்வு காணலாம். ஆகவே தேசிய விடுதலைப் போராட்டம் என்பது கூட தன்னளவில் ஜனநாயகத்தை கொண்டிருப்பது அவசியமானது. தமிழ்த் தேசியத்தை இந்த வெளிச்சத்தில் பரிசீலித்தால் அதன் முற்போக்கான, பிற்போக்கான அம்சங்களை இனம் காண முடியும். தமிழ்த் தேசியமானது சிங்கள பேரினவாதத்திற்கும் தரகு முதலாளித்துவ அரசுக்கும் எதிரானது என்ற வகையில் நடப்பிலுள்ள சமூக அமைப்பை எதிர்த்துப் போரிடும் முற்போக்கான அம்சங்களைக் கொண்டதாகும். ஏகாதிபத்தியத்தின் நலன்களுடனும், இந்திய மேலாதிக்க நலன்களுடனும் இது ஏற்கனவே முரண்பட்டுள்ளமை இதன் முற்போக்கான பாத்திரத்தின் வெளிப்பாடாகும். ஆனால் தமிழ்த் தேசியமானது பல் குறுகிய மதிப்பீடுகளை கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கதாகும். யாழ், யாழ், இந்து, சாதிய எல்லைக்குள்

www.tamilarangam.net



இன்னும் சிக்கிக் கொண்டிருக்கிறது. பிரதேச சாதிய மத எல்லைகளைக் கடந்த ஒரு விருவான தேசியமாக இதனால் வளர முடியும்..

ஜனநாயகம் என்பது தேசிய இனப் பிரச்சினையில் அடிப்படையிலான பிரச்சினையாக இருக்கையில் தேசிய விடுதலை அமைப்பே பாசிச வடிவம் பெறுவது என்பது இன்னோர் முரண்பாடாகும். புலிகள் மட்டுமல்ல கடந்த காலத்தில் அநேகமாக எல்லா அமைப்புகளுமே மக்களுக்கும் சொந்தத் தோழர்களுக்கும் எதிராக ஒரு தடவையேனும் ஆயுதத்தைத் திருப்பாமல் இருக்கவில்லை. ஆகவே பாசிசவடிவம் இல்லையென்றாலும் ஜனநாயமின்மை என்பது எல்லா அமைப்புக்குள்ளும் ஊடுருவியது எப்படி? ஏனைய சிறுபான்மை இனங்களை அனைத்துக் கொண்டு செல்வது தேசியத்தின் முற்போக்கான அம்சங்களில் ஒன்றாகும். ஆனால் முஸ்லீம் மக்களுக்கு எதிரான செயற்பாடுகள் எதனைக் காட்டுகின்றன.

தமிழ்த் தேசியமானது பல்வேறு பிரதேச, சாதிய பிரிவினரையும் மதசிறுபான்மையினரையும் அணைத்துச் செல்லும் அளவிற்கு விரிவானதாக பரந்ததாக இல்லை என்பதுதான் உண்மை. இந்த அர்த்தத்தில் இரு குழுவியதே (மனிதம் ஏாண்டில் ஆகிய இரண்டும் ஒரே கருத்தையே கொண்டிருப்பினும் இதனை இந்தப் பதத்தால் குறிப்பிடுவது பெருந்தேசியம் என்பதா? குறுந்தேசியம் என்பதா? என்பதிலேயே முரண்படுகிறார்கள்).

தமிழ்த் தேசியத்தில் காணப்படும் இந்த பலவீனமான பிற்போக்கு அம்சங்களை எப்படி விளக்குவது?

இந்த கேள்விக்கான விடையை காண்பதற்கு முதலில் இரண்டு தத்துவ பிரச்சினைகளை தெளிவுபடுத்திக் கொள்வது அவசியமானது. முதலாவது பிரச்சினை. குறிப்பிட்ட ஒரு சமூக அமைப்பையும் அதில் தோன்றும் பல்வேறு பிரச்சினைகளையும் அச்சமுதாயத்தில் நடப்பில் இருக்கும் பல்வேறு கருத்துப் போக்குகளையும் புரிந்து கொள்வதற்கான வழிமுறை என்ன? என்பதாகும். ஸ்தூலமான நிலமையில் ஸ்தூலமான ஆய்வு என்பதே இதற்கான ஒரே வழிமுறையாகும். குறிப்பிட்ட சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை சரியாக இனங்காணுதல், உற்பத்தி சக்தியின் வளர்ச்சி நிலை, அதிலிருந்து தோன்றும் பல்வேறு வர்க்கங்கள், இந்த வர்க்கங்கள் குறிப்பான நலன்கள், அவை அரசியலில் பிரதிபலிக்கும் விதம் போன்றவ வற்றை புரிந்து கொண்டால் மட்டுமே ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் எழும் பல்வேறு சமூக சக்திகளின் அரசியல் போக்குகளை புரிந்து கொள்வதும் சரியான அரசியல் நிலைப்பாட்டை வகுத்துக் கொள்வதும், அச்சமுதாயத்தை புரட்சிகரமாக மாற்றியமைப்பதும் சாத்தியப்படும்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் சம்பந்தப்படும் பல்வேறு சக்திகளை மதிப்பிடுவது எப்படி? என்ற விவாதத்தில் ஏாண்டில் தமிழ் சமுதாயத்தில்

www.tamilarangam.net



தேசிய முதலாளிகள் இல்லாவிட்டாலும் பல உறுதியான தேசியம் உருவாக்கலாம் என நிருபிக்க முனைகையில் குறிப்பிட்ட ஒரு கருத்தானது சமூகத்தில் அது பிரதிபலிக்கும் குறிப்பிட்ட ஒரு சமூக சக்தி தோன்றும் முன்பே உருவாகலாம் எனக் கூற முனைகிறார். தனது நிலைப்பாட்டை இன்னும் உறுதிப் படுத்தும் வகையில் ஜான்டில் மார்க்சியத்தின் தோற்றமானது பாட்டாளிவர்க்கத்தின் தோற்றத்திற்கு முன்பே நடைபெற்றது எனும் கருத்தப்பட கூற முனைகிறார். ஆகவே சமூக சக்திகளுக்கும் அவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கருத்துக்களுக்கும் உள்ள தொடர்பு என்ன என்பதை முதலில் தெளிவு படுத்திக் கொள்வது அவசியமாகும்.

கருத்துக்கள் என்பவை ஒரு சமூக உருவாக்கமாகும். சமூக நடைமுறைகளின் அனுபவங்கள் தொகுக்கப்பட்டு பொதுமைப்படுத்தப்பட்டு அவற்றை ஒரு ஆக்கமப்-படுத்தப்பட்ட வடிவத்திற்கு வளர்த்தெடுக்கையில் தத்துவமாகிறது. மீண்டும் இந்தத் தத்துவமானது சமூக நடைமுறைகளை இன்னும் சிறப்பாக முன்னெடுக்க வழிகாட்டுகிறது. இந்த விதத்தில் கருத்தானது சமூக நடைமுறையிலிருந்து பிறப்பிப்பது. குறிப்பிட்ட வரலாற்றுச் சக்தியின் உருவாக்கத்தின் பின்பே குறிப்பிட்ட கருத்துக்களும் தத்துவங்களும் உருவாகின்றன.

கருத்துக்கள், தத்துவங்கள் வெறும் பிரதிபலிப்புக்கள் மட்டுமல்ல இவை நடைமுறையை பாதிக்ககூடியவை செல்வாக்கு செலுத்தக்கூடியவை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இந்த செல்வாக்கு செலுத்தும் நிலை என்பது குறிப்பிட்ட சமூக சக்திகள் இன்றியே கருத்துக்கள் உருவாக்கலாம் என வலியுறுத்தும் அளவிற்கு போய்விடக்கூடாது.

முதலாளித்துவ உற்பத்தி முறை 16ம் 17ம் நூற்றாண்டுகளில் சிறிது சிறிதாக ஆரம்பித்தாலும் 1760களை அடுத்த வரும் 50 ஆண்டுகளில் நடைபெற்ற கைத்தொழில் புரட்சியின் மூலம் தான் முதலாளித்துவ உற்பத்தி முறை பிரதான உற்பத்தியாக ஆனது. கைத்தொழில் புரட்சியானது அதுவரையில் நடப்பில் இருந்து வந்த சமூக அமைப்பில் உற்பத்தி முறை வர்க்கங்கள், வர்க்க அமைப்புகள், அரசியல் அதிகாரம், வியாபாரம், முதலீடு, வெளிநாட்டுக் கொள்கை, போன்ற அனைத்திலுமே பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியது. பெருமளவில் பாட்டாளிகள் தோன்றி நகரங்களில் தொழிற்சாலைகளை அண்டி குடியேறினார்கள். இவ்வாறு நகரங்களில் திரட்டப்பட்ட பாட்டாளிகள் தமது மோசமான வாழ்க்கை நிலை வேலை நிலமைகள் சுரண்டல் போன்றவற்றை எதிர்த்து பகிரங்கமாகவே போராடினார்கள். இந்த போராட்டமானது ஆரம்பத்தில் தனிப்பட்ட சிறு களவுகள் அபகரிப்புகள் என ஆரம்பித்து (களவு என்பது சொத்துடமை உறவின் புனிதத்தன்மையை மீறுவது என்ற அர்த்தத்தில் இது தன்னளவில் உள்ளார்ந்த வகையில் சுரண்டலுக்கும், நடப்பிலுள்ள சொத்துடமை உறவுகளுக்கும் எதிரானதாகும். வர்த்தக விரோத உணர்வின் முரட்டுத்தனமான வெளிப்பாடாகும்) முதலாளித்துவத்தின் உற்பத்தி இயந்திரங்களை உள்ளடக்கும் வடிவத்திற்கு வளர்ந்து அடுத்த கட்டத்தில் தொழிற்சங்க அமைப்பாக திரண்டு, தொழிலாளர்களது திட்டவட்டமாக வடிவமைக்கப் பட்ட போராட்டமாகிறது. தொழிற்சங்க போராட்டங்கள் கூட ஆரம்பத்தில்

www.tamilarangam.net



வெறும் பொருளாதாரக் கோரிக்கைகளுடன் தொடங்கி அரசியற் கோரிக்கைகளாக பரிணமித்தன. இந்த போராட்டங்களின் போது பல கற்பனாவாத சோசலிசக் கருத்துக்கள் தொழிலாளர்களிடையே செல்வாக்கு செலுத்தத் தொடங்கின. தொழிலாளர்களுடைய இந்த உயிர்த்துடிப்புள்ள போராட்டங்களை 1845இல் ஏங்கல்ஸ் இங்கிலாந்தில் தொழிலாளர்கள் வர்க்கத்தின் நிலமை எனும் நூலில் படம் பிடித்து காட்டினார். இந்த நூலின் இறுதியில் தொழிலாளர் விரைவிலே புரட்சி மூலம் தனிச் சொத்துடமை உறவுகளுக்கு முடிவு கட்டி சோசலிசத்தை அமைப்பார்கள் என உறுதியாக கூறினார். இந்த நூல் வெளியாகி மூன்று வருடங்களின் பின்பு தான் அதாவது 1846 இல் தான் கொம்யூனிஸ்டு கட்சியின் அறிக்கை எனும் மார்க்சியத்தின் முக்தியமான கொள்கைப் பிரகடனம் வெளி வந்தது. அதே ஆண்டிலேயே பிரஞ்சு கட்சியின் பிரான்ஸ் நாட்டின் பாட்டாளி வர்க்கம் தனது போர்க்குணாம்சத்தை இன்னொரு தடவை நிருபித்தது. 1867 இல் மூலதனத்தின் முதல்பாகம் வெளிவந்தது. இதற்கு 4 ஆண்டுகளின் பின்பு பிரெஞ்சுத் தொழிலாளர்கள் தமது நாட்டில் பாரிஸ் கொம்யூனை நிறுவி பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்றால் என்ன என்று நிருபித்தார்கள்.

இவை காட்டுவது என்ன? மார்க்சிசம் என்பது பாட்டாளி வர்கத்தின் தோற்றத்திற்கு முன்பே தோன்றியது அல்ல என்பதுதானே. பாட்டாளி வர்கத்தின் போராட்ட அனுபவங்களை பொதுமைப் படுத்தி அதனை ஒரு உயர்ந்த தத்துவ-மட்டத்திற்கு மார்க்சியம் வளர்த்தெடுத்து இதனால் அடுத்தடுத்த நடவடிக்கைகளில் பாட்டாளிவர்கத்தின் செயலுக்கு வழிகாட்டும் தகுதியை பெற்றது என்பது தானே.

இவ்வாறாக ஏனைய கருத்துக்களும் சமுதாயத்தின் வரலாற்றுப்போக்கில் தோன்றி வளர்ச்சியுற்றதைத் காணமுடியும். உதாரணமாக நில பிரபுத்துவ சமூக அமைப்பில் அரசானது பிரபுக்களின் கரங்களில் இருப்பதை தெய்வீக உரிமை கோட்பாட்டின் மூலம் நியாயப்படுத்தப்பட்டது. முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தெய்வீக உரிமைக் கோட்பாடு சமுதாய ஒப்பந்தக் கோட்பாட்டின் மூலம் பிரதியீடு செய்யப்பட்டது. புதிததாகதாக தோன்றிய முதலாளிவர்க்கம் அரசதிகாரத்தின் பங்கு கேட்க முனைந்ததன் தெளிவான வெளிப்பாடு இது இந்த சமுதாய ஒப்பந்தக் கோட்பாடானது பின்பு சொத்துடையவர்களின் வாக்குரிமை எனவும் அனைத்து மக்களின் வாக்குரிமை எனவும் இன்னும் விரிவு பெற்றது. இப்படியாக சமுதாய அரங்கில் புதிதாக தோன்றி வளர்ந்து வரும் ஒரு வர்க்கம் அல்லது சமூக சக்தி தனது நலன்களைக் காத்துக் கொள்ள புதிய கருத்துக்களையும் புதிய அரசியலையும் முன்னெடுக்கிறது. 1760களில் தோன்றிய கைத்தொழில் புரட்சியின் மூலம் பலம் பெற்ற முதலாளித்துவ வர்க்கம் 1789 இன் பின்பு பூர்சுவா ஜனநாயகப் புரட்சியின் மூலம் அரசியல் அதிகாரத்தை தனது கரங்களில் எடுத்துக் கொண்டது.

இப்படியாக வரலாற்றில் குறிப்பிட்ட சமூக சக்திகள் தோன்றி பலம் பெற்று வளரும் போதுதான் அவற்றின் நலன்களை வெளிப்படுத்தும் அரசியற் கோரிக்கை அரங்கிற்கு வருகின்றன. ஆகவே எந்த ஒரு அரசியல் கோரிக்கையையும் சரியாக

www.tamilarangam.net



புரிந்து கொள்ள வேண்டுமாயின், அந்தக் கோரிக்கையின் பின்னால் மறைந்திருப்பது எந்த வர்க்கத்தின் நலன்கள் என தெளிவாக இனங்கண்டு கொள்ள வேண்டும். எந்த ஒரு சமூக இயக்கத்தையும் புரிந்து கொள்ள, அது எந்த சமூக சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. என புறநிலையாக வைத்து மதிப்பிட வேண்டும் இதற்கு மாறாக கருத்துக்களை சமூக சக்திகளில் இருந்து பிரித்துப் பார்ப்பதோ அல்லது சமூக இயக்கங்களை தனி நபர்களின் சித்தத்தின் வெளிப்பாடாக காண்பதோ மார்க்சிய அணுகுமுறையாகாது. இது அகநிலைக் கண்ணோட்டமாகும். இவ்வாறா சமூக சக்திகளை மதிப்பிடுவதில் இழைக்கும் அகநிலை தவறானது அடுத்த கட்டத்தில் தேசிய முதலாளிகள் இன்றியே பலமான தேசியம் இருக்கலாம் என்று நாண்டிலை கூறவைக்கிறது. ஆனால் இந்த வாதத்திற்கு போதிய ஆதாரங்களை வழங்க நாண்டில் தவறி விடுகிறது.

தமிழ்த் தேசியத்தை இனம் காண்பதற்கு முன்பு தீர்வு கண்டாக வேண்டிய அடுத்த தத்துவார்ந்த பிரச்சினை முதலாளித்துவத்தின் பண்புகள் பற்றியதாகும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு சக்திகளையும் மதிப்பிடுவது தொடர்பா விவாதங்களின் போது முதலாளித்துவம் தேசிய முதலாளித்துவ வர்க்கம் பூர்சுவா ஜனநாயகம் என்ற ஒரு சூத்திரத்தை சுற்றிய பலரது வாதங்களுக்கும் அடிக்கடி வலம் வருவதை அவதானிக்க முடிகிறது. ஆதலால் இந்த சூத்திரம் பற்றி சற்று பரிசீலிப்பது அவசியமாகும்.

முதலாளித்துவ உற்பத்தி முறையை பிரதான உற்பத்தி முறையாகக் கொண்டுள்ள சமூகங்களை பொதுவாக முதலாளித்துவ சமுதாயங்கள் என்கிறோம். இவை பல்வேறுபட்ட அரசு வடிவங்களைக் கொண்டுள்ளன. லிபரல் ஜனநாய அரசு, சமூக ஜனநாயக நலன்புரி அரசு, பாசிச அரசு, இராணுவ சர்வாதிகார அரசு... இப்படிப்பட்ட பல வடிவங்களை குறிப்பிடலாம். அந்த நாட்டில் உள்ள முதலாளித்துவ உற்பத்தி முறையின் வளர்ச்சி நிலை, அந்த நாட்டின் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் கூடவே காணப்படும் வேறு உற்பத்தி முறைகள், இந்த உற்பத்தி முறையிலிருந்து தோன்றும் வர்க்கங்கள், சர்வதேச மூலதனத்துடன் இந்நாட்டு மூலதனம் கொண்டுள்ள உறவு, ஆட்சி அதிகாரம் எந்த வர்க்கத்தின் கையில் இருக்கி சுரண்டப்படும் வர்க்கங்களின் பலம், அந்நாட்டில் குறிப்பான வரலாற்று நிலைமைகள் போன்ற பல அம்சங்கள் அரசின் வடிவத்தைக் தீர்மானிப்பதில் பங்கு வகிக்கின்றன.

ஐரோப்பிய முதலாளித்துவத்தின் தோற்ற காலத்தில் அங்கு தோன்றி வந்த முதலாளித்துவ சக்திகள் தாம் தேசியத்தை முன்னெடுத்தது என்பது உண்மையே. ஆனால் இது சர்வ வியாபகமான விதியாகிவிடமாட்டாது. காலனி ஆதிக்கத்திற்கு உள்ளான நிலையில் அந்த நாட்டில் உள்ள பல்வேறு வர்க்கங்களின் (தரகு ... முதலாளித்துவ நிலபிரபுத்துவ வர்க்கங்கள் தவிர்ந்தவர்களினைய வர்க்கங்களின்) அபிலாசைகளை தேசியமானது பிரதிபலிக்கிறது. இதற்கு தேசிய முதலாளிகள் ... தாங்குவதுண்டு. ஆனால் பல்வேறு ஏகாதிபத்தியங்கள் முட்டி மோதிக் கொள்ளும் நிலையில் காலனி நாட்டிலுள்ள ஒரு ஏகாதிபத்தியத்தைச் சார்ந்த தரகு

www.tamilarangam.net



**முதலாளி வர்க்கமானது இன்னோர் ஏகாதிபத்தியத்தின் மேலாதிக்கத்திற்கு எதிரான** போராட்டத்தில் தேசியத்தை சார்ந்து நிற்கவோ அல்லது சிறுவேலைகளில், தேசிய இயக்கத்திற்கு தலைமை தாங்கவோ செய்யலாம். நவகாலனித்துவ நாடுகளில் முதலாளி வர்க்கங்கள் தமது வரலாற்றுப் பாத்திரத்தை இழந்து விட்ட நிலையில், அந்த நாட்டின் ஜனநாயப் புரட்சியின் கடமைகள் பாட்டாளி வர்க்கத்தின் தலைமேல் விழுந்த நிலையில், பாட்டாளி வர்க்கமானது தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க நேருகிறது. இது போன்றே ஹிட்லரின் பாசிசமானது ஆசிய, ஜெர்மனிய தேசிய வாதக் கவலையாகவே வெளிப்பட்டது. இங்கு ஏகபோக முதலாளிகள் குறிப்பான வரலாற்று நிலைகளின் கீழ் தமது நலன்களை தேசியத்தின் பேரால், தேசியத்துடன் இணைந்து முன்னெடுத்தார்கள். இதன் மூலம் ஜெர்மானிய பாட்டாளி வர்கத்தையே தமது தலைமையின் கீழ் அணிதிரட்ட இவர்களால் முடிந்தது.

இன ஒடுக்குமுறையானது இனப் படுகொலை எனும் வடிவத்தை பெற்ற பின்பு சிறுபான்மை தேசிய இனத்தைச் சேர்ந்த ஒவ்வொரு வர்க்கமும் கூட தமது உயிர் வாழ்க்கைக்காகவே போராடியாகவேண்டிய நிலையில் உள்ளது. தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள், நில பிரபுக்கள், பெரும் வார்த்தகர்கள், பணக்கார விவசாயிகள். மீனவ முதலாளிகள். குட்டி முதலாளிகள், விவசாயிகள், தொழிலாளர் போன்ற பல்வேறு வர்க்கங்களும் சமூகத் தட்டுக்களும் தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்தன. இவ்வாறு பல்வேறு வர்க்கங்கள் தேசியத்தை முன்னெடுத்த போதிலும் அவை ஒவ்வொன்றும் தமது வர்க்க நிலைப்பாட்டில் நின்றே அதனை முன்னெடுத்துச் செல்கின்றன. தேசிய முதலாளி வார்க்கமானது சுயசார்பு, பொருளாதாரம் பூர்சுவா ஜனநாயகம், ஏகபதிபத்திய சார்பாக கொண்டிருக்கிறது. நிலபிரபுத்துவ வர்க்கமானது பழமை வாதம், ஜனநாயகமறுப்பு கண்ணோட்டத்துடன் முன்னெடுக்கிறது பாட்டாளி வர்க்கமானது சோசலிசம், பாட்டாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கிறது. ஆகவே தேசியம்–தேசிய முதலாளி வர்க்கம் பூர்சுவா ஜனநாயகம், என்ற சூத்திரத்தை யாந்திரியமாக நாம் உருவாக்கிக் கொள்ளக் கூடாது, குறிப்பிட்ட வகைத் தேசியத்தை அல்லது குறிப்பிட்ட ஒரு அமைப்பின் கோரிக்கைகளான ஸ்தாலமாக ஆராய்வதன் மூலம் அது எந்த வர்க்கத்தை பிரதிபலிக்–கின்றன என்று கண்டறிய வேண்டும் அந்த சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்கள் அவற்றின் புறநிலையான நலன்கள். பல்வேறு தேசிய, அரசியல் கோரிக்கைகளில் இந்த நலன்கள் பிரதிபலிக்கப்படும் விதம் போன்றவைற்றை சரியாக இனம் காண்பதன் மூலம் குறிப்பிட்ட அமைப்பானது எந்த சமூக சக்தியை, எந்த வர்க்கத்தை பிரதிபலிக்கிறது என உறுதியாக கூறமுடியும். மாறாக, தேசியத்தில் உறுதியாக நிற்பதால் குறிப்பிட்ட ஒரு அமைப்பானது தேசிய முதலாளி வர்க்கத்தை பிரதிநிதிப்படுத்துவதாக கூறுவதோ, அல்லது ஜனநாயகம் இல்லாததால் தரகு முதலாளி வர்க்கத்தை பிரதிநித்துவப்படுத்துவதற்காக கூறுவதோ முழுமையான சமூக கண்ணோட்டமாகாது. இது பெருமளவில் தலைகீழான அகநிலை கண்ணோட்டங்களை தன்னுள் கொண்டிருக்கும் அணுகுமுறையாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியம் என்றவுடன் தேசிய முதலாளி வர்க்கத்தை முன்னனுமானிப்பதும், தேசிய முதலாளிவர்க்கம் என்றதும் பூர்சுவா ஜனநாயகத்தை முன்னனுமானிப்பதும் இலகுவான சூத்திரம் தான். ஆனால் இது யதார்த்தத்தின் நிலையை புரிந்து கொள்ள உண்மையில் உதவப் போவதில்லை. முதலாளித்துவம் பற்றிய விரிவான புரிதலும் அந்த புரிதலின் அடிப்படையில் தமிழ்ச் சமுதாயம் பற்றிய சமூக பொருளாதார ஆய்வும் அதன் வெளிச்சத்தில் பல்வேறு வர்க்கங்களையும், அவற்றின் நலன்களையும், இந்த நலன்கள் அவற்றின் அரசியலில் தேசியத்தில் பிரதிபலிக்கப்படும் விதத்தையும் கண்டறிவது மட்டுமே தீர்வுகளை முன்வைக்க கூடிய, சரியான புரிதலை உருவாக்க உதவும் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் தத்துவார்த்த வறுமையும், தமிழ்ச் சமூகம் பற்றிய சமூக பொருளாதார ஆய்வுகள் இன்மையில் இந்த திசையில் நாம் முன்னேற பெருந்தடைகளாகும். இருப்பினும், இந்த தடைகளை இனம் காண்பதே குறுகிய வரட்டுச் சூத்திரத்தில் அடைபட்டு கொள்ளாமல் இருப்பதற்கும், அடுத்து முன்னேற வேண்டிய திசையை இனங்காணவும் உதவும்.

இப்பொழுது நேரடியாக பிரச்சினைக்கு வருவோம். புலிகளின் அரசியலை எப்படி புரிந்து கொள்வது? எந்த சமூகசக்தியின் நலன்களை அவர்கள் பிரதிபுத்துவ படுத்துகிறார்கள்? புலிகளின் அரசியலை ஏதோ ஒரு விதத்தில் புரிந்து கொள்வதும் பின்பு இந்த அரசியலை வைத்துக் கொண்டு அதன் வர்க்க பின்னணியை ஊகிப்பதுமானஅணுகு-முறை எமது வாதங்களிடையே பரவலாக காணப்படுகிறது. புலிகள் தேசியத்தில் உறுதியாக இருப்பதாக அனுமானித்துக் கொண்டு இந்த அனுமானத்தின் அடிப்படையில் அவர்களை தேசிய முதலாளித்துவ சக்திகளை அப்படி ஒரு வர்க்கம் தமிழ் சமூகத்தில் இல்லாத போதிலும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக 'தூண்டில்' கூறுவது இவன் ஒரு வகையாகும். இதற்கு மாறாக 'சமர்' நாட்டில் தேசிய முதலாளிகள் இல்லாமல் இருப்பதும், புலிகள் முதலாளித்துவ சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதால் அவர்கள் தரகு முதலாளிகளை பிரதிநிதித்துவப்படுத்துவ தாகவும், புலிகளின் பாசிசமானது இதன் குறிப்பான குணங்குறி என்பது இன்னோர் வாதமாகும். இவை தலைகீழான அகநிலை அணுகுமுறைகளாகும். மாறாக புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளவே தமிழ்ச் சமுதாயம் பற்றிய வர்க்கப்பகுப்பாய்வும், குறிப்பிட்ட வர்க்கங்களின் நலன்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் எப்படி பிரதிபலிக்கின்றன என இனம் காண்பதும் முக்கியமானதாகும்.

ஒரு குறிப்பிட்ட அமைப்பானது எந்த வர்க்கத்தை அல்லது எந்த சமூக சக்தியை பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பதை இனங்காண இரண்டு வழிகள் உள்ளன.

முதலாவது, அந்த அமைப்பின் வர்க்க மூலத்தை கண்டறிவதாகும் புலிகளைப் பொறுத்தளவில் மட்டுமல்லாமல் அநேகமாக எல்லா விடுதலை அமைப்புக்களிலுமே பெரும்பலாக முன்னனி அங்கத்தவர்கள் குட்டி முதலாளித்துவ வர்க்க பின்னனிகளைக் ( கொண்டவர்கள். அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், மீனவர்கள் போன்ற குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். இத்துடன் சில அமைப்புகள் வல்வெட்டித்துறையுடன் கொண்டுள்ள உறவுகளையும் கருத்திற்கெடுத்துக் கொண்டால் கள்ளக்கடத்தலில் ஈடுபடும்

உதிரிமுதலாளிகளின் பிரிவொன்றும் சில இமைப்புகளுடன் கொண்டுள்ள தொடர்புகளும் கவனத்திற்கு கொள்ள வேண்டியவையாகும். அமைப்புக்களின் வளர்ச்சிப் போக்கில் அதன் முன்னணி அங்கத்தவர்களின் வர்க்க நிலைகள் மாறலாம் என்பதாகும். சமூக அளவில் பலம்பெற்ற வர்க்கங்கள் இப்படிப்பட்ட குட்டி முதலாளித்துவ வர்க்க சக்திகளை இலகுவில் தமது செல்வாக்கிற்கு உட்படுத்தலாம் என்பதாலும் குறிப்பிட்ட அமைப்பால் பிரதிநிதித்துவப் படுத்தப்படும் வர்க்கத்தை இனங்காண இந்த அணுகுமுறை பொருத்தமானதல்ல.

இரண்டாவது முறை சமூகத்திலுள்ள பிரதான வர்க்கங்களையும் அவற்றின் பொருளாதார நலன்களையும் சரியாக இனம் கண்டு பல்வேறு அமைப்புகளின் அரசியல் கோரிக்கைகளின் பின்னால் மறைந்திருக்கும் நலன்கள் எந்த வர்க்கத்தினுடையவை என இனம் காண்பதன் மூலம் அந்த அமைப்பானது எந்த வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது என்ற முடிவிற்கு வருவது, இந்த அணுகுமுறை முன்னைய அணுகுமுறையிலும் பார்க்க பொருத்தமானதாகும். ஆகவே தமிழ்ச் சமுதாயத்தில் பிரதான வர்க்கங்களை அவற்றின் பொருளாதார நலன்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் வெளிப்படக்-கூடிய வழி முறைகளையும் இனம் காண முயல்வோம்.

இலங்கையில் நூற்றாண்டுகளாக நீடித்த காலனித்துவ ஆட்சியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட நவகாலனித்துவ சுரண்டலாலும் உள்ளூரில் தேசிய முதலாளித்துவ வர்க்கத்தை வளர விடாமல் செய்து விட்டது. இத்துடன் சுதந்திரத்திற்குப் பின்பு சிங்கள பெரும் தேசிய வாதமானது பொருளாதாரத்துறையில் காட்டி வந்த இனரீதியான பாகுபாட்டின் காரணமாக தமிழ்ப்பிரதேசத்தில் தொழிற் துறைகள் பெருக்கவோ தமிழ்த் தேசிய முதலாளிவர்க்கம் வளரவோ வாய்ப்பற்றுப் போய் விட்டது. இதனால் தமிழ்ச் சமுதாயத்தில் தேசிய முதலாளிவர்க்கம் என்ற ஒன்று குறிப்பிடத்தக்கதாக இல்லை. அப்படி இருப்பினும் மிகவும் பலவீனமானதாக சிறு உற்பத்தியாளர் என்ற அளவிலேயே காணப்படுகின்றனர். இந்த நிலையில் தனது பொருளாதார நலன்களை தானே முன்னெடுப்பதோ, தனித்து நின்று காற்-பாற்றுவதோ, இந்த வர்க்கத்திற்கு சாத்தியமில்லை. சுயசார்பு உற்பத்தி அந்நிய, ஏகாதிபத்திய எதிர்ப்பு உறுதியான தேசியம், பூர்சுவா ஜனநாயகம் போன்றவை இந்த வர்க்கத்தின் பொருளாதார நலன்களில் இருந்து பிறக்கக்கூடிய அரசியல் நிலைப்பாடுகளாகும்.

காலனித்துவ ஆட்சியில் தோன்றி வளர்ந்து வந்த தரகு முதலாளித்துவ வர்க்கமானது சுதந்திரத்திற்கு பின்பு இனரீதியாக பிளவுபட்டுள்ளது. மறுப்பதனால் தமிழ் தரகு முதலாளித்துவ வர்க்கமான்று. தேசியத்தை முன்னெடுக்க நேர்ந்துள்ளது. ஏகாதிபத்திய ஏகாதிபத்திய. அந்நிய சார்பு என்பது இதன் குறிப்பான தன்மையாகும். தேசிய வாதத்தை பேரினவாத அரசிற்கு நெருக்கடி கொடுக்கவும், அதன்மூலம் சந்தையை மறுபங்கீடு செய்யவும் பயன்படுத்த முனையும். இந்த வர்க்கமானது இது சாத்தியப்படாத இடத்து பிரிவினையின் மூலம் தனது சந்தையை தனித்து எடுத்துக் கொள்ளவும் முனையும் பேச்சு வார்த்தை மூலம் சமரசம்

www.tamilarangam.net



செய்வதையே முன்பு அதிகளவில் விரும்பிய இந்த வர்க்கமானது. சிங்கள பேரினவாதம் இலகுவில் தன் பங்கை கொடுக்கமாட்டாது. எனக் கண்டு கொண்ட நிலையில் பிரிவினையை ஆதரிக்கிறது. ஆனால் எப்போதெல்லாம் பேரினவாதம் இறங்கி வந்தாலும் அதனுடன் சமரசம் செய்ய தயாராகவுள்ளது. சிங்கள பேரின வாதத்தை எதிர்த்தாலும் கூட இன்றும் கூட தனது பிழைப்புக்காக பல தொடர்புகளை அரசுடன் இது கொண்டுள்ளது.. அரசுடன் சமரசம் செய்து வைக்க முனையும். தொடர்பாளர்களாகச் செயற்படும் கொழும்பிலுள்ள பிரமுகர்கள் குறிப்பாக இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள். சிங்கள அரசை இவர்கள் எதிர்த்தாலும் ஏகாதிபத்தியங்களையோ அதன் சுரண்டல்களையோ எதிர்க்க மாட்டார்கள்.

நிலப்பிரபுத்துவ சக்திகள் தமிழ்ப்பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு இல்லை. அப்படி இருந்தவர்களும் அரசினால் கொண்டு வரப்பட்ட நிலச்சவரம்புச்சட்டம் போன்றவற்றாலும் பசுமைப்புரட்சியுடன் விவசாயத்தில் நவீன முறைகள் நுழைந்தானாலும் இவர்கள் முதலாளித்துவ உற்பத்தி முறையுடன் இணைந்து விட்டார்கள். பணக்கார விவசாயிகள், பணக்கார மீனவர்கள் (மீன்வ முதலாளிகள். சம்மாட்டிகள்) போன்றோரும் நவீன உற்பத்தி முறைகள் காரணமாக ஏகாதிபத்திய பொருளாதார வலைப் பின்னலுடன் நெருக்கமாக பிணைந்துள்ளார்கள். இவர்கள் தரகு முதலாளிவர்க்கத்திற்கு நெருக்கமானவர்கள் பெரிய கடைக்காரர்கள் திறந்த பொருளாதார கொள்கையின்கீழ் ஏகாதிபத்தியத்தில் இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்தே வாழ்பவர்கள் இவர்களும் தரகு முதலாளிகளுக்கு மிகவும் நெருக்கமானவர்களே.

முதலாளித்துவ பெருவீத உற்பத்தி மிகவும் பலவீனமாக இருக்கும் நிலையில் தமிழ்ப் பிரதேசத்தில் பாட்டாளி வர்க்கத்தின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். வறிய விவசாயிகள், வறிய மீனவர்கள் போன்றோர்களும் பேரினவாத ஒடுக்கு முறையினாலும், ஏகாதிபத்திய சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படுபவர்களாகும். தொழிலாளர் வர்க்கத்தின் உறுதியான கூட்டாளிகளாக அமையக் கூடியவர்கள் இவர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இவர்களது நலன்களும் உறுதியாக பிணைந்துள்ளன. முதலாளித்துவ சித்தாந்தத்திற்கு பலியாகிப் போயுள்ள நிலையில் இவர்கள் தமக்கென ஒரு வர்க்க தாபனத்தையோ, தனியான அரசியல் கோரிக்கைகளையோ முன்னெடுக்காது தரகு முதலாளித்துவ சக்தினையே பலப்படுத்தி வருகின்றன. எதிர்காலத்தில் தோன்றும் எந்த ஒரு புரட்சிகர அமைப்பும் இவர்களையே போராட்ட சக்திகளாக கருதி செயற்பட வேண்டும்.

முதலாளித்துவம் பலமாக வளராத நிலையில் குட்டி பூர்சுவா வர்க்கம் அதிகளவில் காணப்படுகிறது. இத்துடன் எமது நாட்டில் அரசு சேவைத் துறையே பிரதான வேலை வழங்கும் துறையாக இருப்பதனால் அரச கீழ் நடுமட்ட ஊழியர்களாகவும் இதன் எண்ணிக்கை மிகவும் பெரியதாகவுள்ளது. நடுத்தர விவசாயிகள், மீனவர்களும் இவர்களுடன் ஒப்பிடக் கூடியவர்களே. அரசின் பேரினவாத ஒடுக்கு முறையினாலும் ஏகாதிபத்தியத்தின் சுரண்டலினாலும் அதிகம் பாதிக்கப்படும் இவர்கள் ஒரு மாற்றத்தை விரும்பினாலும் [illegible] தயாரற்ற இவர்களது வாழ்நிலை காரணமாக ஊசலாடுகிறார்கள். குறுகிய சமூக கண்ணோட்டம் இவர்களது பிரதான குறைபாடாகும். போராட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்புகளில் முன்னணி அங்கவத்தவர்களுள் பெரும்பாலானோர் இந்த வர்க்கத்தை சேர்ந்தவர்களாக இருப்பதனால் அமைப்புகளின் பல குறைபாடுகளுக்கு இந்த வர்க்கம் நேரடி காரணமாகிறது.

தமிழ்ப் பிரதேசத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கள்ளக்கடத்தல் என்பது ஒரு குறிப்பிடத்தக்க தொழிலாகவே நடைபெற்று வந்தது. கடந்த காலத்தில் தமிழ்ப்பிரதேசத்தில் பொருளாதார நடவடிக்கைகளில் இதன் பங்கு என்ன? இந்த உதிரி முதலாளிகள் சமுதாயத்தில் வகித்த இடம் என்ன? போன்றவை தெளிவற்றதாகவே உள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்டமானது இந்தியாவை பின்தளமாக பாவித்தனால் வள்ளி ஓட்டத்திற்காகவும் பின்பு நிதித் தேவைக்காக அமைப்புகள் போதைப் பொருட்களை கடத்தவும், ஆயுதங்களை கடத்திவர முயன்ற போது பல்வேறு அமைப்புகளும் இந்த வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தும் அவசியம் ஏற்பட்டது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தில் உதிரிப்பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த பலர் இயக்கங்களால் அவர்களது சமூக விரோத நடவடிக்கைகளுக்காக வெட்டையாடப்பட்டார்கள். பிற்காலத்தில் இந்த வர்க்கம் அமைப்புக்களுக்குள்ளேயே பிரதான அடியால் கூட்டமாக உருவெடுத்தது குறிப்பாக கவனிக்கப்பட்ட வேண்டியதாகும். எமது போராட்டத்தில் தோன்றிய பல சமூக விரோத போக்குகளுக்கு இவர்களது செல்வாக்கு காரணமா என்று நுணுக்கமாக பரிசீலிப்பது அவசியமாகும்.

எமது போராட்டத்தில் தோன்றிய பல்வேறு அரசியல் போக்குகளையும் இப் போது இனம்காண முயல்வோம். தமிழ்த் தேசியத்தின் ஆரம்பமானது பூர்சுவா ஜனநாயகப் போராட்ட வடிவங்களாக இருந்தன. பாராளுமன்ற வாதம், அகிம்சைப் போராட்டங்கள் பேரம் பேசும் பேச்சு வார்த்தைகள், அரசுடன் இணக்கம் காணுதல், அரசு உறுதி மொழிகளை கைவிடுதல் மீண்டும் போராட்டம் எனத் தொடங்கிய ஆரம்பகால தேசியமானது 70 களில் ஆயுதப் போராட்ட வடிவம் பெற்றது. ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பகால நடவடிக்கைகள் பூர்சுவா ஜனநாயக அரசியல் தலைமைகளை பலப்படுத்தும் விதத்திலும் அதற்கு துணையாகவுமே அமைந்த போதிலும் பிற்காலத்தில் ஆயுதப் போராட்டமானது சட்ட ரீதியான போராட்ட வடிவங்களில் இருந்து விலகின. பின்பு சட்டவடிவங்களான அகிம்சைப் போராட்டங்களை பின்தள்ளிவிட்டு பிரதான வடிவம் பெறவும் தொடங்கின. 80 களில் இந்திய அரசிடம் இருந்து இளைஞர் அமைப்புகள் உதவி பெறவும் இந்திய அரசின் விருப்பத்திற்கு ஏற்ப போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முனைந்தன. 86 இல் புலிகள் ஏனைய அமைப்புக்களை தடைசெய்ய தொடங்கியது தடை செய்யப்பட்ட அமைப்புகளில் பெரும்பாலானவை இந்திய, இலங்கை, அரசுகளுடன் ஒத்துழைத்து செயற்பட தொடங்கின. தமிழீழ கோரிக்கைகளை முற்றாக கைவிட்டன. புலிகள் தமிழீழ கோரிக்கைகளில் ஒப்பீட்டளவில் உறுதியாக இருந்தாலும் அவ்வப்போது பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளவும், மாற்றுத் திட்டங்களை பரிசீலிக்கத் தயாராகவும் இருந்தது. புலிகள் மக்களையும், சக அமைப்புக்களையும், முற்போக்கு எண்ணமுடைய தனிநபர்களையும் நசுக்கி தனது அரசியல் ஏக போகத்தை நிறுவிக்

www.tamilarangam.net



கொண்டன. பல சந்தர்ப்பங்களில் தனது ஏகபோகத்தை அங்கீகரிக்கும் படி வலியுறுத்திய அளவில் அரசியல் கோரிக்கைகளை வலியுறுத்தாமல் விடுவதும் கவனிக்கத் தக்கது. இந்திய, இலங்கை அரசுகளுடன் தேவைக்கேற்ப பேசவும், உதவிகளைப் பெறவும். பின்பு மூர்க்கத் தனமாக எதிர்த்து போராடவும் செய்கிறது. சிங்கள, முஸ்லீம் மக்களை படுகொலை செய்கிறது. பெருமளவில் இளைஞர்களை திரட்டி தற்கொலை வடிவங்களையும் பயன்படுத்தி இராணுவத் தாக்குதல்களை ஒருவித வெறித்தனத்துடன் மேற்கொண்டு செல்கிறது. இந்த வகைகளில் தமிழ்த் தேசியத்தை பலவித குறைபாடுகளுடன் தான் என்றாலும் முன்னெடுத்துச் செல்லும் ஒரே அமைப்பாக புலிகள் திகழ்கின்றனர்.

இந்த பல்வேறு அரசியல் போக்குகளையும் புறநிலையான வர்க்கங்களின் நலன்களுடன் இனம் காண முயல்வோம். ஆரம்பகால தேசியமானது தமிழ்த் தரகு முதலாளித்துவ வர்க்கங்களின் நலன்களையே பிரதிநிதித்துவம் செய்தது என்லாம். அரசுடன் சமரசம் செய்தல், சலுகை பெறுதல் போன்றவையும் ஏகாதிபத்திய சார்பு நிலைப்பாடுகளும் இதனையே காட்டுகின்றன. தேவைக்கேற்ற விதத்தில் போராட்டத்தை தீவிரப்படுத்தும் விதத்தில் குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கோரிக்கைகளையும் முன்னெடுத்து வெகுஜன போராட்டமாக மாற்றின. ஆனால் இந்தப் போராட்டங்களின் இறுதி நோக்கம் சலுகைகளை பெறுவதாகவே இருந்தது. 72 இல் தரப்படுத்து தலை அடுத்து குட்டி பூர்சுவா வர்க்கம் பின்னணியைக் கொண்ட மாணவர்களது போராட்டங்கள் ஓரளவு சுயதீனத்தன்மையுடன் வெளிப்பட்டன. பின்பு இந்த குட்டி பூர்சுவா வர்க்கப் பின்னணிகளை உடைய தீவிர இளைஞர்கள், தீவிர இளைஞர்கள் தரகு முதலாளித்துவ வர்க்கத்தின் மிதமான போக்குடன் முரண்பட்டதே இளைஞர் அமைப்புக்கள் தோன்றுவதற்கு காரணமாயின. இந்த இளைஞர் அமைப்புக்களே ஆயுதப் போராட்டத்தையும் முன்னெடுக்கலாயின. இளைஞர் அமைப்புக்கள் குட்டி பூர்சுவா நலன்களையும், அம்சங்களையுமே பிரதானமாக வெளிப்படுத்தின. நீண்டகால, தெளிவான கண்ணோட்டமின்மை சுயமான அரசியல் இன்மை, சாகச மனோபாவம், மக்களின் பாத்திரத்தை புரிந்து கொள்ளாமை. போலிப் பெருமை, பழமை வாதத்தை கைவிடாமை, இலட்சியவாத வாழ்க்கை முறைப் பிரேரித்தல் போன்றவற்றில் குட்டி பூர்சுவா மனோபாவமே வெளிப்பட்டது. இளைஞர் அமைப்புகள் வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் தமக்குள் மோதிக் கொள்ள ஆரம்பித்து இன்று புலிகள் தமது மேலாதிக்கத்தை நிலை நாட்டிக் கொண்டுள்ளார்கள்.

புலிகள் இந்த போராட்டங்களில் ஒப்பீட்டளவில் உறுதியாக நிற்கின்றனர். இவர்களது ஜனநாயக மறுப்பானது 'பாசிச' வடிவத்தை பெற்றுள்ளது. மக்கள் மீதும், ஏனைய அமைப்புகள் மீதும் சொந்த அங்கத்தவர்கள் மீதும் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் அதிகார வர்க்கமாக இதன் தலைமை ஆகிவிட்டது. இவர்களது தேசியமானது ஏனைய சிறுபான்மை இனங்களை ஒடுக்கும் அளவிற்கு குறுகியதாகி விட்டது. சுய உற்பத்தி போன்றவற்றில் எந்த அக்கறையும் காட்டாத இவர்கள் இறக்குமதியாகும் அல்லது தென்னிலங்கையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு வரிவிதிப்பதையே தமது பிரதான வருமானமாக கொண்டுள்ளார்கள். தங்க வசூலிப்பாகவும், வியாபார நிறுவனங்களில் மூலதனத்தில் பங்கு கேட்பதன் மூலமும்

www.tamilarangam.net



ஓரளவு வசதியானவர்களை பயம் வைத்தும், கப்பம் கேட்டும் இவர்கள் செய்யும் மூலதனத் திரட்டலானது இன்று பெட்டிக் கடைக்காரர்களைக்கூட விட்டு வைக்கவில்லை. தமிழ்ப்பிரதேசத்தில் தமது மூலதனங்களைப் போட்டு தொழில் புரிய விரும்பும் தேசிய உணர்வுள்ள ஒரு சிறு உற்பத்தியாளர்கள் புலிகள் தமது சொத்துக்களை அபகரித்துவிடலாம் என்ற அச்சத்தினாலேயே அவ்வாறு செய்யாமல் விடுகிறார்கள். பேரினவாதத்திற்கு எதிராக போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் மக்களது அபிலாசைகளை ஓரளவு வெளிப்படுத்தும் புலிகள் அதே சமயத்தில் மக்களை அடக்குவதிலும், அவர்களது ஜனநாயக அடிப்படை உரிமைகளை நசுக்கியும், பலவிதத்தில் கட்டையப்படுத்தியும் பலவந்தப்படுத்தவும் தமது தேவைகளுக்கு சேவை செய்ய வைத்தும், மக்களது அடிப்படை நலன்களைப் பற்றிக்கூட கவலைப்படாது அவர்களைக் கசக்கிப் பிழிந்து வரிவசூலித்தும் ஒரு விதத்தில் மக்களை விட்டுப் பிரிந்த மக்களுக்கு மேலானவர்களாக புல்லுருவித்தனத்துடன் செயற்படுகிறார்கள். அதுவும் தமிழ் மக்களின் பெயரால், அவர்களின் ஏகபோக பிரதிநிதிகள் என்று கூறிகொண்டு செயற்படுகிறார்கள். இவர்களிடம் திட்டவட்டமான உறுதியான ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடு கிடையாது. தமது குழு நலன்களுக்கு ஏற்ப இந்திய அரசையோ, இலங்கை அரசையோ, இஸ்ரேல் போன்ற ஏகாதிபத்தியத்தின் எடுபிடிகளையோ, காலத்திற்கு காலம் சார்ந்து நின்று தம்மைப் பலப்படுத்துவதில் மிகவும் கவனமாகவும், திறமையாகவும் செயற்படுகிறார்கள். இப்படியாக அந்நிய சக்திகளை சார்ந்து செயற்படும் போதே தனது குழுநலன்கள் பாதிக்கப்படுகையில் அவர்களுடனான உறவுகளை துண்டித்துக் கொள்வதையும் காண்கிறோம். புலிகளுக்கு ஆதரவாக வெளிநாடுகளில் செயற்படும் சில சக்திகள் திட்டவட்டமாக அமெரிக்க ஏகாதிபத்திய சார்புடையவர்கள் என்பது கவனிக்கத்தக்கது. இப்படியாக புலிகள் பலவிதத்திலும் முன்னெடுக்கும் தமது அரசியல் மூலம் வெளிப்படுத்தும் நலன்கள் எந்த வர்க்கத்தினுடையவை?

தேசியமானது இன்று தமிழ்ச்சமுதாயத்தின் எல்லா வர்க்கங்களினாலும் பொதுவா[illegible] தேவையாகிவிட்ட நிலையில் புலிகளது தேசியத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுடன் இனங்காண்பது சாத்தியமற்றது. தேசியம் என்றொரு அம்சத்தை விட புலிகள் ஏனைய அம்சங்களில் சுயசார்பு பொருளாதாரம், 'ஏகாதிய 'பத்திய எதிர்ப்பு, பூர்சுவா ஜனநாயகம் போன்றவற்றில் தேசிய முதலாளிவர்க்கத்தின் நலன்களுக்கு, பண்புகளுக்கு எதிராகவே உள்ளார்கள். ஆரம்பத்தில் புலிகள் குட்டி முலாளிவர்க்க[illegible], குணாம்சங்களை பெரிதும் கொண்டிருப்பதாலும் இன்று அவற்றில் சிலவற்றைக் கொண்டிருப்பினும் பெருமளவில் அவர்கள் இந்த குட்டி முதலாளித்துவ பண்புகளைக் கடந்து வளர்ந்து விட்டார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. அமைப்புரீதியாக பலம்பெறும் போது அமைப்பின் பலத்தையும், செல்வாக்கையும் பயன்படுத்திய தலைமையானது மூலதனத்தை பெருமளவில் திரட்டியுள்ளது. இதற்கு மேல் இவர்களது வர்க்க நிலைமையும், கண்ணோட்டமும் 'ஆரம்பத்தில் இருந்தது போல இருக்க போவதில்லை. தமிழ் சமூகத்தில் பலம் பெற்றுநிற்கும் வர்க்கங்கள் இவர்களை தமதுசித்தாந்த செல்வாக்கிற்குக் கொண்டு வருவதுகஷ்டமானதல்ல. தனித்துவமான சித்தாந்தம் என்று ஒன்று புலிகளிடம் இல்லாதபோது இது சிரமமானதல்ல.

பொதுவாக எமது சமுதாயத்தில் முதலாளித்துவ சித்தாந்தே மேலா[illegible] செலுத்துகிறது. இந்தநிலையில் புலிகள் தேசிய முதலாளித்துவ வர்க்க நலன்களை

www.tamilarangam.net

பிரதிபலிக்கவில்லை என்பதனால் தரகு முதலாளி வர்க்க நலன்களைத்தான் சட்டாயம் பிரதிபலித்தாக வேண்டும் என்ற கருத்தொன்று சிலரது வாதங்களில் தொனிக்கிறது. இந்த வாதத்தை முன் வைப்பவர்கள் புலிகளிடம் தேசிய முதலாளிவர்க்க அம்சங்கள் இல்லை என்ற ஆதாரங்களை முன்வைக்கும் அளவிற்கு 'தரகு முதலாளிவர்க்க நலன்களை எப்படி குறிப்பாக வெளிப்படுத்துகிறார்கள். எனபோதிய சான்றுகள் மூலம் நிருபிப்பதில்லை. புலிகளின் மூலதனத்திரட்டு நடவடிக்கைகள் பெட்டிக் கடைக்காரர்களையோ விட்டு வைக்காத போது தரகு முதலாளிக்கு மட்டும் வாய்ப்பாகத்தான் இருக்கிறது. என்பதில்லை இன்று தமிழ்ப்பிரதேசத்தில் நிலவும் அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடானது பெரிய வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்க உதவவே செய்கிறது. இதனை புலிகளும் அனுமதிக்கவே செய்கிறார்கள். என்பது உண்மையே. ஆனால் இதற்கு பிரதியுபகாரமாக புலிகள் கடைக்காரரின் மூலதனத்திலேயே அரைப் பங்கைக் கேட்கிறார்கள். இது இந்த வர்க்கத்திற்கு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை.

தமிழ்ச்சமுதாயத்தில் தேசிய முதலாளிகள், தரகு முதலாளிகள் என்ற இரண்டு ஆளும் வர்க்கங்கள் மட்டுமே இருக்கின்றன. ஆனால் புலிகள் தேசிய முதலாளிகள் இல்லையென்றால் கட்டாயமாக தரகு முதலாளிகளாகத்தான் இருக்க வேண்டும் என்ற ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் முடிவுகட்டத் தேவையில்லை. இதனை விட இன்னும் பல சாத்தியக்கூறுகள் மூலமும் புலிகளின் அரசியலை புரிந்து கொள்ளும் வாய்புகள் இருக்கவே செய்கின்றன.

குட்டி பூர்சுவா வர்க்கத்தைச் சேர்ந்த புலிகள் தமது குழு நலன்களில் காட்டிய அந்த அக்கறை காரணமாக ஏனைய குழுக்களை அழித்து, பலம்பெற்று இன்று ஒரு தனியான வர்க்கமாக உருவாகி வருகிறார்கள் என்பது ஒரு விளக்கமாகும். புலிகளின் 'பாசிசத் த' தாபனத்திலும், மக்களுடனும் உள்ள உறவுகளில் ஜனநாயக-மின்மையை குட்டி பூர்சுவா வர்க்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட மறுக்கும் தனிநபர் வாதத்தின் தீவிரமான எதிர் நிலையாக சிலர் குறிப்பிடுவது கவனமாக பரிசீலிக்க வேண்டியதாகும்.

சமுக நலன்களின் அக்கறையின்மை தரகு முதலாளிகளிடம் கூட இலக்கும் காண முடியாத தன்மை போதைப் பொருள் மற்றும் பலவித சமுக விரோத நடவடிக்கைகளுடன் ான தொடர்பு போன்ற அம்சங்கள் இவர்களது வர்க்க மூலங்களில் ஒன்றான உதிரி முதலாளி வர்க்கத்தின் தன்மைகள் என்பது இன்னோர் விளக்கமாகும். சில சந்தர்ப்பங்களில் புலிகளின் சில செயற்பாடுகள் மாபியா கும்பல்கள் சர்வதேச போதைப்பொருள்கள் கடத்தல்களுடனும் இனம் காணத்தக்கதாக இருப்பதும் கவனத்துக்குரியது.

குட்டி முதலாளித்துவ அமைப்பாக தோன்றிய புலிகள் வளர்ந்து விட்டநிலையில் தமது சமுக அந்தஸ்து அதிகாரம் காரணமாக பெருமளவு மூலதனத்தைத் திரட்டிக்கொண்டு தரகு முதலாளி வர்க்கமாக வளர்ந்து வரும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த மாறும் கால் கட்டமே இவர்களை இனம் காண்பதிலுள்ள குழப்பங்களுக்கான காரண-மாகும். இவர்கள் ஒரு போராட்டச் சூழலில் அதுவும் போராட்டத்திற்கு தலைமை தாங்கும் ஒரு அமைப்பாக இருப்பதனால் சமுதாயத்தில் சமுகமான உற்பத்தி உறவுகளை இன்னும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால் தமது வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில் இவர்களது நலன்கள் இன்னும் தெளிவாக வெளிப்படும். அதாவது தமது பலத்தை இன்னும் உறுதியாக கெட்டிப்படுத்திய பின்பு தமிழீழத்தை விடுவித்த பின்பு அல்லது வடக்கு கிழக்கில் பெரும்பகுதியை தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்த நிலையில் இலங்கா

www.tamilarangam.net



அரசுடன் பலமான நிலையில் நின்று பேரம் பேச முனைகையில் இந்த அம்சங்களை தெளிவாக இனம் காணலாம் என்பது இன்னோர் விளக்கமாகும்.

இப்படியாக இன்னும் பல சாத்தியக்கூறுகள் இருப்பதால் புலிகளின் அரசியல் தேசிய முதலாளி தரகு முதலாளி என்ற இரண்டு சருவங்களுள் ஒன்று மட்டுமே என்று பார்க்காமல் வேறும் பலவிதமான வாய்ப்புக்களையும் பரிசீலிப்பது அவசியமானது. அப்போது தான் புலிகள் தொடர்பான தமது சொந்த நிலைப்பாடுகளையும் எதிர்கால வேலைமுறைகளையும் திட்டமிடுவது புரட்சியாளர்களுக்கு சாத்தியப்படும். ஆகவே இந்த திசையில் எமது தேடல்களை இன்னும் ஆழப்படுத்துவது உடனடி அவசரப் பணியாகிறது.

இந்த நிலையில் புலிகளை தேசியசக்தி என்று குறிப்பிடுவது எந்த அர்த்தத்தில் சரியானதாகும்?

தேசிய சக்தி எனும் பிரச்சினை இந்திய தலையீட்டுடனேயே தொடங்கியது. இந்தியா தென்னாசிய பிராந்திய வல்லரசு என்பதிலும், அது ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிடுவது தனது மேலாதிக்கத்திற்காகவே என்பதையும் முதலில் புரிந்து கொள்வது அவசியமானது. இவ்வாறு இந்திய அரசும், அதன் ஆளும் வர்க்கங்களும் தமது நலன்களுக்கு சாதகமாக இலங்காவின் இறைமைக்கும், தமிழ் மக்களின் போராட்டத்திற்கு குந்தகமான விதத்திலும் இலங்கா அரசுடன் ஒரு உடன்பாட்டை தமிழ் மக்களின் எந்தவித ஆலோசனையும் கலக்காமல், தமிழ் மக்களது சம்மதத்தையும் பெறாமல் செய்துவிட்டு, அதனை தமிழ் மக்கள் மீது திணிக்கமுற்பட்ட போது, இந்திய அரசு தனது நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு தமிழ்மக்களுக்கு எந்தவிதமான உருப்படியான தீர்வுகளையும் வழங்காது தமிழ் மக்கள் தமது போராட்டத்தை கைவிடும்படி நிர்ப்பந்தித்த நிலையில் இந்திய அரசுடன் முரண்பட்டு மோதுவது தமிழ்த் தேசியத்தை பொறுத்த வரையில் தவிர்க்க முடியாததாகிறது. இந்த வகையில் புலிகள் விரும்பியோ, விரும்பாமலோ முழுமனதுடனோ அரைகுறை மனதுட- னோ இந்திய இராணுவத்துடன் மோதியதன் மூலம் தமிழ்த்தேசியத்தையே பிரதிநிதித்துவம் செய்தார்கள். இப்படிப்பட்ட யுத்தம் நடைபெறும்போது இந்த யுத்தத்தில் யார் பக்கத்தில் நியாயம் இருக்கிறது என்ற பொறுப்படையான கேள்விக்கு பதிலாக புலிகள் ஒரு தேசிய சக்தியென்று குறிப்பிடுவது சரியானதே. இதன் மூலம் நாம் இந்திய அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ முடியாது என்ற நிலைப்பாடு உருவாகிறது.

இவ்வாறே 1990 ஜூனில் ஆரம்பித்த யுத்தமானது புலிகளின் தலைமையில் தனிப்பட்ட விருப்பு வெறுப்பிலிருந்து பிறந்ததல்ல. 70 களில் தொடங்கி 80 களில் தீவிரப்பட்ட போராட்டமானது யாரோசில தனிப்பட்ட நபர்களது விருப்பு வெறுப்புகளில் இருந்து இருந்து பிறந்ததல்ல. இப்படி கருதுவது மார்க்சிய அணுகுமுறையுமாகாது. தமிழ்தேசிய இனத்தின் மீதான பேரினவாத ஒடுக்கு முறைகள் சாதாரண அரசியல் வழி முறைகளினால் அகற்றப்பட முடியாமல் போனதால், அந்த அரசியலின் தொடர்ச்சியாகவே இந்த ஆயுதப் போராட்டம் வெடித்தது, பின்பு இந்தியப் படைகள் தலையிட்டபோது புலிகள் ஒரு கட்டத்தில் இலங்கா அரசுடன் பேசத் தொடங்கினர். இந்தப் பேச்சு வார்த்தைகளில் எந்தவிதமான உருப்படியான தீர்வையும் இலங்கா அரசு முன்வைக்கவில்லை. இன்றுவரையும் தனது தீர்வை முன்வைக்க முடியாத வங்குரோத்து நிலையிலேயே அரசு இருக்கிறது. இந்த நிலையில் தமிழ்த் தேசியமானது மீண்டும் வன்முறை வடிவம் பெற்று போ- ராக வெடித்து தவிர்க்கமுடியாததே. புலிகள் மட்டுமல்ல வேறெந்த சக்தி அந்த நிலையில் இருந்தாலும் சற்று விரைவாகவோ அல்லது சற்று தாமதமாகவோ இப்படிப்பட்ட ஒரு மோதலில் ஈடுபட்டிருக்க வேண்டி ஏற்படுவது அது தமிழ்தேசியத்தின் நலன்களைக் கைவிட்டு எதிரியிடம் சரணடையாத வரையில் தவிர்க்க முடியாததே. ஆகவே இந்த யுத்தத்தில் புலிகள்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள்என்பதே உண்மை நிலையாகும். இந்த நிலையில்ஸ்ரீலங்கா அரசை ஆதரிப்பதோ, பலப்படுத்துவதோ, தமிழ்த் தேசியத்திற்கு எதிராக செயற்படுவதாகவே அர்த்தப்படும்.

இப்படியான ஒரு யுத்தத்தில் நியாயம் எந்தப்பக்கத்தில் இருக்கிறது என்று பொதுப்படையான கேள்விக்கு விடையளிக்கும் வகையில் புலிகளை தேசிய சக்தியாக இனம் காண்பது சரியானதே. ஆனால் இதற்கு மேலாக இன்னும் குறிப்பாகவும், கறாராகவும் இதனைப் பரிசீலிப்போமாயின் எமது அடுத்தகடமை என்னவென்று புலனாகும். மிகவும் பொதுப்படையான, மிகவும் மேலெழுந்த அர்த்தத்தில் பார்க்கையில் புலிகள் இந்த யுத்தத்தில்தமிழ்த்தேசியத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதாக தோன்றினாலும் மிகவும் குறிப்பான, மிகவும் கறாரான பரிசீலனையில் புலிகளிடம் தமிழ்மக்களுக்கு விரோதமான உண்மையான் தமிழ்த் தேசியத்திற்கு விரோதமான அம்சங்களும் காணப்படுவது புலப்படும்.

தமிழ்த்தேசியத்தை முன்னெடுப்பதில் புலிகள் தமிழ்மக்களுக்கு உடன்பாடான அம்சத்தைக் கொண்டிருந்தாலும் அடிப்படையில் இவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான பல அம்சங்களை கொண்டுள்ளார்கள். தேசியம் என்பதைத் தவிர தமிழ் மக்களின் மற்றெல்லா அபிலாசைகளுக்கும் இவர்கள் முரண்பட்டவர்களே. தேசிய இனப்பிரச்சினை என்பது அடிப்படையில் ஒரு ஜனநாயகப் பிரச்சினை. ஆனால் தேசிய விடுதலையை முன்னெடுப்பதாகக் கூறும்புலிகள் அடிப்படையிலேயே பாசிசத்தன்மைகளைக் கொண்டிருப்பது ஒரு பெரிய முரண்பாடாகும். தேசிய விடுதலையானது இவர்களது அர்த்தத்தில் மக்களது விடுதலை அல்ல. இன்னும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்களது பாத்திரத்தை மறுப்பதன் மூலமும் இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்களை பகைமையுடன் கடத்துவதன் மூலமும், இதுபோன்ற இன்னும் பல தொலை நோக்கற்ற நடவடிக்கை நீண்ட காலத்தில் தமிழ்த்தேசியத்தில் நலன்களுக்கு விரோதமாக, தமிழ்த்தேசியத்தை பலவீனப்படுத்தும் விதத்திலேயே செயற்படுகிறார்கள்.

ஆயினும் பேரினவாதம் மிகவும் மோசமான வடிவம் எடுத்து இனப்படு-கொலை எனும் வடிவத்தைப் பெற்றுள்ளதனாலும், தமிழ்மக்களின் அபிலாசைகளை புரிந்து கொண்டெந்த விதமான குறைந்த பட்ச, ஜனநாயகப் பூர்வமான தீர்வுகளையும் முன்வைக்க முடியாத சிங்கள தரகு முதலாளிவர்க்கம் இனவாதத்திற்குள் சிக்கி போயுள்ளதாலும் யுத்தம் தொடர்கிறது. இந்த யுத்தத்தில் தமிழ்த் தேசியத்தின் பக்கத்தில் நின்று அரசபடைகளை முகம் கொடுக்கும் ஒரே சக்தியாக புலிகள் இருக்கும் வரை மக்களைப் பொறுத்தவரையில் சிங்களப் பேரினவாதத்திற்கும் தமிழ்த்தேசியத்திற்கும் இடையிலான முரண்பாடு பிரதான வடிவம் பெறுவதனால் புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான முரண்பாடு இரண்டாம் பட்சமாக உள்ளது.

ஆகவே புலிகளின் அரசியலில் உள்ள இரண்டு முக்கிய அம்சங்களை சரியாக இனம் காணவேண்டும்.

1) தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை பிரதிநிதித்துவப் படுத்துவதால் தமிழ் மக்கள் சார்பானது.

www.tamilarangam.net



2) தமிழ் மக்களின் மீது மோசமான அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவதனால் தமிழ்மக்களின் நலன்களுக்கு விரோதமானது.

இவற்றுள் ஏதாவது ஒரு அம்சத்தை மட்டும் பார்க்கவோ அல்லது ஒன்றை மட்டுமே முதன்மைப்படுத்தி மற்றையதைப் பற்றி பாராமுகம் காட்டுவதோ புலிகள் பற்றிய முழுமையான மதிப்பீடாகாது.

புலிகளை தேசியசக்தியாக இனங்காணும் சிலர் அதனைப்பலப்படுத்த முனைகையில அவர்கள் முதலாவது அம்சத்தை மட்டுமே முதன்மைப்படுத்தி இரண்டாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். புலிகளை தோற்கடிப்பதே உடனடிப்பணி என்று கூறி இலங்கை இந்திய அரசுகளுடன் கூட்டு சேர்பவர்கள் இரண்டாவது அம்சத்தை முதன்மைப்படுத்தி முதலாவது அம்சத்தை மறந்து விடுகிறார்கள். இன்னோர் விதத்தில் பார்த்தால் புலிகளைப் பலப்படுத்துபவர்கள் புலிகள் தமிழ்மக்களை ஒடுக்குவதற்கு மறைமுகமாக துணைபோகிறார்கள். இலங்கை, இந்திய அரசுகளுடன் இணைந்து புலிகளுக்கு எதிராக போராட முனைப்பவர்கள் மறைமுகமாக தமிழ்த்தேசியத்தை ஒடுக்குவதிலும் பங்கெடுக்கிறார்கள்.

ஆகவே புரட்சியாளர்களின் நிலைப்பாடுஎன்னவாக இருக்க முடியும்?

தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புடைய புரட்சியாளர்களின் கடமை, இந்தியாவில் அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சிகர சக்திகளுடைய கடமை போன்று மேலெழுந்த வாரியானதும் பொதுப்படையானதுமான முடிவுகளுக்கு வருவதும், எவர் சரி, எவர் பிழை என்று கூறுவது மட்டுமல்ல. மாறாக தமிழ் புரட்சியாளர்கள் இந்த யுத்தம் தொடர்பாக மிகவும் குறிப்பான, ஆழமான, சரியான நிலைப்பாடுகளை மேற்கொண்டுஅதன் பின்னணியில் தமது திட்டங்களை வகுத்து செயற்படுவதன் மூலம் வரலாற்றுப் போக்கில் தலையிட்டு செயற்படுவது அவர்களது கடமையாகிறது. ஆகவே சரியான மாற்றை முன்வைக்கும் புரட்சிகர கடமை தமக்கு உண்டு என்ற கரிசனையுடன் பொறுப்புணர்வுடன் இந்த பிரச்சினையை அணுகுவது அவசியமானது.

இந்தியாவில் உள்ள அல்லது தென்னிலங்கையில் உள்ள புரட்சியாளர்கள் புலிகளை தேசியசக்தி என இனங்கண்டு தமிழ்த்தேசியத்திற்கு எதிராக செயற்படும் இந்திய ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப்படுத்துவது சரியானதே. ஆனால் இதற்கு அப்பால் போய் புலிகளைப் பலப்படுத்த முனைகையில் அவர்கள் தமிழீழப்புரட்சியாளர்களை பலவீனப்படுத்தும் வேலைகளையும் செய்கிறார்கள். தமிழீழ புரட்சியாளர்கள் புலிகளைத் தேசிய சக்தி என்று இனம் கண்டுஇந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை அம்பலப் படுத்துவது சரியானதே. ஆனால் அதற்கப்பால் போய்புலிகளைப் பலப்படுத்த முனைகையில் தமிழ்மக்களுக்கு சரியான மாற்றுத்தலைமையை கொடுக்க வேண்டிய தமது பொறுப்பைதட்டிக் கழிப்பவர்கள் ஆகிறார்கள். தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளுக்கு எதிராகவே இந்திய, ஸ்ரீலங்கா அரசுகள் யுத்தத்தை மக்கள் மீது திணிக்கிறார்கள் என்றவகையில் இந்திய, ஸ்ரீலங்கா அரசுகளை எதிர்ப்பது தமிழ்மக்களின் நலன்களை பிரதிநிதித்துவப் படுத்த முனையும் ஒவ்வொருவரது கடமையாகும். இந்தக் கடமையை தவறவிட்ட எவருமே தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதோ, அவர்களை சரியாக வழிநடத்துவதோ சாத்தியப்படாது. இவ்வாறு செய்வதன் மூலம் இவர்கள் தமிழ்மக்கள் மத்தியில் புலிகளின்தலைமையை பலப்படுத்தவே மறைமுகமாக உதவுகிறார்கள். புலிகளை அதன் பாசிச அடக்குமுறைகளை உண்மையிலேயே

www.tamilarangam.net

பலவீனப்படுத்த விரும்புபவர்கள் எவருமே தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை இன்னும் பலமாக இன்னும் புரட்சிகரமான வழியில் அதிக ஜனநாயகத்துடன் முன்னெடுப்பது முன்நிபந்தனையாகிறது. இதன்மூலம் தான் தமிழ் மக்களுக்கு சரியான மாற்று புரட்சிகர அரசியலை, மாற்று அமைப்பை, மாற்று புரட்சிகர போராட்ட வழிமுறைகளை கொடுக்கலாம். இதன்மூலம் புலிகளை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தவும் சாத்தியப்படும். புரட்சிகர தத்துவத்தின் வழிகாட்டுதலில் பாட்டாளிவர்க்க தலைமையில் பரந்துபட்ட மக்களின் யுத்தமாக தமிழீழ விடுதலைப்போராட்டத்தை முன்னெடுப்பதே சரியான மாற்றாக அமையும்.

புரட்சியாளர்கள் இவ்வாறு செயற்படுவதை புலிகள் அனுமதிக்கப்போவதில்லை. எந்தவொரு சரியான சக்தியின் வளர்ச்சியையும் அனுமதிப்பதும் புலிகளை பொறுத்தவரையில் 'தற்கொலை முயற்சியே' ஆதலால் இந்த வகைப் பட்ட எந்தவொரு முயற்சியையும் அதன் முளையிலேயே கிள்ளிவிட புலிகள் தமது சக்திகள் அனைத்தையும் திரட்டி அவதூறுகளைப் பரப்பியும் எதிரியின் உளவாளிகள் என்று குற்றஞ்சாட்டியும், சதித்தனமான நடவடிக்கைகளினாலும், நேரடியாக இராணுவ ரீதியாக தாக்குதல்களினாலும் முயல்வர். இப்படிப்பட்ட நிலையில் தன்னை தற்காத்துக் கொள்ளும் நியாயமான உரிமை எந்தவொரு புரட்சிகர சக்திக்கும் உண்டு. எதிரியினதும் எதிர்ப் புரட்சிகர சக்திகளினதும் அங்கீகாரத்தை பெற்றுத்தான் புரட்சியாளர்கள் செயற்பட வேண்டும் என்று யாரும் கருதக் கூடாது. ஆகவே இது போன்ற தாக்குதல்களை முன்னரே எதிர்பார்த்து தயாராக செயற்படும் போது புலிகளின் இத்தகைய முயற்சிகள் எதுவும் புரட்சிகர சக்திகளை அழித்துவிட மாட்டாது. மாறாக சரியான அரசியல் திட்டத்தையும், அமைப்பு வடிவத்தையும், போராட்டவழிமுறைகளையும் மக்கள் முன்வைத்து மக்களை ஜனநாயக பூர்வமாக அணிதிரட்ட முயலும் ஒரு புரட்சிகர அமைப்பை தாக்குவது என்பது புலிகளைத்தான் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தும். ஒரு புரட்சிகர அமைப்பு தனது கொள்கைகளை மக்கள் முன்வைத்து செயற்படும் நிலையில் புலிகள் அந்த அமைப்பின் மீது அவதூறுகளைப் பொழிவது கூட புலிகளையே அம்பலப்படுத்தும்.

புலிகள் மிகவும் பலம் பெற்று விளங்கும் இன்றையநிலையில் புலிகளின் தாக்குதல்களை முகம் கொடுத்து சமாளிப்பது ஒருசிறிய புரட்சிகர அமைப்பிற்கு கஷ்டமானது தான். இப்படிப்பட்ட நிலமைகளில் நேரடியாக மோதலைத் தவிர்ப்பதும் தலைமறைவாக இரகசியமாக செயற்படுவதும் சிறிய அமைப்புகளுக்கு சாத்தியமானதே. இந்த வழிமுறைகளில் புரட்சியாளர்கள் கவனம் செலுத்தி தம்மை பலப்படுத்திக் கொண்டால் தங்களை தற்காத்துக் கொள்வது முடியாததல்ல. எந்தவொரு போராட்டத்திலும் பிரதான, தீர்க்கமான சக்தி மக்களே அன்றி கருவிகள் அல்ல. புலிகளை விட பலமாக விளங்கும் அரசை எதிர்த்துப் போக தயார் எனக் கூறும் புரட்சியாளர்கள் போராட்டத்தினுள் எழும் புலிகள் போன்ற சக்திகளை கையாளவும் கற்று கொள்வது அவசியமானது.

புலிகள்பற்றிய மிதமிஞ்சிய எதிர்ப்புணர்வானது சில அமைப்புக்களை ஸ்ரீலங்காவின் பாசிசத்தை மறக்கும் அளவிற்கு செய்துள்ளது. அரசின் கைக்கூலிகளாக ஆக்கியுள்ளது. புலிகளின் அடக்கு முறைகளை எதிர் கொள்ள முடியாத இயலாமையில் இருந்து பிறக்கும் துரோகத்தனம் இது வாகும். புலிகளின் அடக்கு முறைகளுக்கு முகம் கொடுக்கும் சரியான ஒரே வழி சரியான ஒரு புரட்சிகர தாபனத்தை கட்டியமைத்து போராட்டத்தை இன்னும் உறுதியாக முன்னெடுப்பதேயாகும். இதற்கு மாற்றாக வேறு குறுக்கு வழி எதுவுமே கிடையாது.

ஸ்ரீலங்கா அரசு எமது எதிரி என்பதை எந்தக் கணத்திலும் மறந்து விடக்கூடாது. இன்று புலிகளை பலவீனப்படுத்துவதாக கருதிக் கொண்டு எதிரியைப் பலப்படுத்துவதானது எதிரி நாளை புரட்சியாளர்கள் மீது தாக்கத் தொடங்கும் போது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனைப்பாஸ்தின் தொடர்ச்சி......

ஈழத்து மலையிலும் தமிழகத்திலும்
வாழும் மக்களை மிதித்து சென்று
டெல்கியும் கொழும்பும் கையெழுத்திட்ட
முதல் ஒப்பந்தமே இப்படி நாளும்.

**********
* ஜெயபாலன் *
**********

(ஒரு அகதியின் பாடல்)

* ----- *

**வெறும் சமாதியல்ல நான்**

எனதருமை தேசமே...
என் வயிற்றினுள்
உன் புதல்வன் ஒருவன்
உயிரின்றி உறங்குகிறான்.

புதைத்து விட்டதாக எண்ணி
விதைத்து விட்டுச்
சென்றவர்கள்
அவன்
விருட்சமாக
வளருவதை
அறியவில்லை.....

எந்தமண்ணை நேசித்தானோ
அந்த மண்ணே அவனை
மூடியிருக்கிறது.... அதுவும்
தனக்கு பெருமைதானாம்.

என் தேசமே
அவன் உணர்வுகளின்
வெப்பத்தை நான்
உணருகிறேன்
உறுதியான அவன் கால்கள்
வலிமையாக என
வயிற்றைக்
கிழிக்கின்றன...

www.tamilarangam.net



மரணத்துக்கு பின்னும்
வாழ்க்கையுண்டாம்
இன்றைய இழப்புக்கள்
நாளைய புதிய பிறப்புக்களின்
பிரசவ வேதனையாம்...

அவனது அஞ்சலிக்காக
எனது தலையில் குத்தப்பட்ட
"ஏ.கே"
தன்னை மீண்டும் திசை
மாற்றி விட வேண்டாம் எனத்
தவம் செய்கிறது.

அவன் அன்றாடம்
என்னுடன் பேசுகிறான்
போராட்டத்தில் இழப்புக்கள்
சகஜம் என்றவர்கள்...
வாழ்வதற்குத்தான்
போராட்டம் என்பதை
அறியவில்லை என்கிறான்...

கோஷங்கள் போடும்
முற்றங்களை விட
கோட்டான்கள் கத்தும்
மயானங்கள் அதிகமாகின்றன
என்கிறான்...

தன் வார்த்தைகளின் சீற்றம்
வாழ்ந்து கொண்டிருப்பவர்களைச்
சிந்திக்க வைக்கும்
என்கிறான்...

எனதருமை தேசமே
என் வயிற்றில் விரிசல்கள்
தோன்றுகின்றன... அந்த
விரிசல்களிடையே
விடியலை நோக்கி அவன்
கைகள்
வேகமாக
எழுகின்றன...

www.tamilarangam.net

ஓ... அந்தக்
கைகளுக்குத்தான்
எத்தனை வலிமை
செம்மண் பிரண்ட
செழிப்பான கைகள்,
சுட்டு விரலை எட்டத்தூக்கி
சூரியனை உதிர்க்கச்
சொல்கின்றன...

எனது தேசமே
நான் பூரித்துப் போகிறேன்
இவ்வளவு காலமும்
நானோ வெறும் சமாதி...

உயிரற்ற உடல்கள் உறங்க
வைப்பதற்கு மட்டுமே
பயன்பட்டு வந்தேன்...
ஆனால் இப்போது
உன்மைகளை மீண்டும்
உயிர் பெற வைக்கும்
நிறைமாதக் கர்ப்பிணி நான்...

போராடும் தமக்கு உரிமை
மட்டுமே
என்றவர்கள் கூட,
இறப்புக்கள் மட்டுமே
தியாகம்
என எண்ணி இடையிடையே
அழிந்து போகிறார்கள்.

அப்போது மட்டும் நான்
ஏனோ கருவுற மறுத்து
மலடியாகி விடுகிறேன்...

என் தேசமே...
உடல்களுக்கு மட்டுமே
சமாதி...
உணர்வுகளுக்கு அல்ல...

www.tamilarangam.net

ஓ...
எமது இன்னொரு மைந்தனின்
வலிய கரங்கள் என்
வயிற்றைக்
கிழித்துக் கொண்டு
வானத்தை நோக்கி
மேலே எழு கின்றன...

நான் காதலிக்கும் என்
தேசமே...
நாளைய புதிய பிறப்புகளுக்கு
இன்றே உன்னை தயாரிப்
படுத்திக் கொள்...

சபாவசந்தன்

* ----- *

**இலங்கையில் மட்டுமா...**
**இந்தியாவிலும் இனவெறிக்கு பலி**

காவிரி நதி பாயும் மாநிலங்களுக்கு இடையிலான நதிநீர்ப்பங்கீட்டுப் பிரச்சினையை தீர்க்கவென்று இந்திய மத்திய அரசு நியமிக்க "நடுவர் மன்றம்" ஓர் இடைக்காலத் தீர்ப்பை அறிவித்தது. இடைக்காலத் தீர்ப்பை அரச வர்த்தமானியில் வெளியிடக் கூடாது என்றும், தீர்ப்பை எதிர்த்தும் 1991 மார்கழி 13-ந்திகதி "காவிரி பந்த்" ஒன்றை நடாத்த அனைத்து கட்சிகளுக்கும் கர்நாடக மாநில காங்கிரசு அரசு அழைப்புவிட்டது. "பந்த்" தைப் பயன்படுத்தி காங்கிரசு அரசு மாநிலத்தின் அரசு இயந்திரங்களை நன்கு பாவித்து கர்நாடகத்தில் வாழும் தமிழர்கள் மீது ஒரு இனவெறிக் கலவரத்தை-தாக்குதலை நடத்தியுள்ளது. 12,13,14,-ந் திகதிகளில் இது கர்நாடக மக்களின் வரலாற்றில் கறுப்பு மார்கழியாகிவிட்டது.

ஐநூறுக்கும் மேற்பட்ட வீடுகள் சாம்பலாக்கப்பட்டது. சில பத்துப் பச்சிளம் குழந்தைகள் எரியும் நெருப்பில் போடப்பட்டனர். பல தமிழ்ப்பெண்கள் இனவெறியர்களின் பாலியல் வன்முறைக்கும், படுகொலைகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர். படுகொலை செய்யப்பட்டவர்கள், நிர்ப்பந்தம் மூலம் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை இதுவரை சரிவர கணக்கிடப்படவில்லை? கல்விக் கூடங்களும் தொழிற்சாலைகளும் விவசாய விளை பொருள்களும் அடித்து நொறுக்கி தீயிடப்பட்டது. இப்படியாக நூறு கோடிக்கும் மேலான

www.tamilarangam.net



சொத்துக்கள் அழிக்கப்பட்டன. இலட்சங்களில் ஏழைத் தமிழர்கள் வீடுவாசல் இழந்து சொந்த நாட்டில் அகதிகளாகக்கப்பட்டார்கள். தமிழகத்துக்குள்ளும் அகதிகளாக நுழைந்தனர்.

சிறீலங்கா சிங்கள இனவெறி அரசு தமிழீழ மக்கள் மீது 1983 யூலை இனப்படுகொலையின் போது நடத்திய இனவெறிக் கொடூரங்கள், சம்பவங்கள் அப்படியே மீண்டும் கண் முன்னே கர்நாடகத்தில் நிலை நிறுத்தப்பட்டது. கன்னட இனவெறியர்களும் ஆட்சியாளர்களும் சிங்கள இனவெறியர்களிடம் இருந்து இவற்றை கற்றுக்கொண்டிருக்கிறார்கள் போலும்.

கர்நாடகத்தில் வளர்ந்து வரும் இனவெறி அமைப்புகளும் "கன்னட சாளுவாலி இயக்கம்" (கன்னட போராட்டக் கட்சி), "ரணதீரப்படை", கன்னட சக்தி கேந்திரா", முறையே வாட்டாள் நாகராஜ் என்கின்ற தெலுங்கராலும் நடிகர் ராஜ்குமார், சிவநந்திரப்பா போன்றவர்களால் தலைமை தாங்கப்படுகின்றது.

இவ் அமைப்புகளும் ஆளும் பங்காரப்பா தலைமை காங்கிரசு கட்சியும் கூடி திட்டமிட்டு "காவிரி சிக்கலை ஒரு சாயாக காட்டி" கர்நாடகத்தின் அனைத்து மக்களுக்கும் அவப்பெயரை கொடுக்கும் விதத்தில் கன்னட இனவெறிக் கலவரத்தை தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

காவிரி நீர் பாயும் மாநிலங்களின் விவசாயப் பெருமக்களின் உயிர்வாழ்வுப் பிரச்சினையான காவிரிச் சிக்கல் இன்று நேற்றல்ல 1974-ல் தொடங்கி 17 ஆண்டுகளில் 27 தடவை மாநிலங்களுக்கு இடையில் பேச்சு நடத்தியும் தீர்வு காணப்படாத நிலையில் 1990-இல் இந்திய அரசியல் சட்டத்தையும் அரசு அதிகார அமைப்புக்களையும் மனப்பூர்வமாக ஏற்றுள்ளதாக தெரிவிக்கும் பங்காரப்பா அரசு, இடைக்கால நடுவர் மன்ற தீர்ப்பை எதிர்ப்பதன் மூலமாக, தனது கட்சிக்குள் நிலவும் அதிகாரப் போட்டியை, ஊழலை, அரசு மேல் மக்கள் கொண்டுள்ள எதிர்ப்புணர்வை திசை திருப்ப முயன்றது. கர்நாடகத்தில் மூன்று தலைமுறைகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் சிறுபான்மை மக்களான தமிழர்கள் மீது "காவிரியை ஒரு கல்லாக்கி" இனவெறிக் கலவரத்தை ஏவிவிட்டதன் மூலம் அரசும், கன்னட வெறியர்களும் கர்நாடக மக்கள் முன் அம்பலப்பட்டுள்ளனர். அரசின் இருப்புக்கு மேலும் நெருக்கடியை தேடிக் கொண்டுள்ளனர்.

"தமிழீழ மக்களின் பாதுகாப்புக்காக தமிழக மக்களின் நலன்களை அடகுவைக்க முடியாது" என வீரவசனம் பேசி தமிழீழ அகதிகளை நிர்ப்பந்தித்து வெளியேற்றும், போராளிகளை நெருக்கடிக்குள்ளாக்கி வரும் பார்ப்பனீய ஜெ. கும்பல் காவிரிப் பிரச்சினையில் தமிழகத்தின் உரிமையை நிலை நாட்ட முயற்சிப்பதிலோ அல்லது கர்நாடகத் தமிழர்களுக்கு ஆதரவு தெரிவிப்பதை விட்டு விட்டதுடன், கர்நாடகத்தில் தாக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆதரவாக குரல் கொடுத்து ஆதரவு போராட்டம் நடத்திய தமிழக மக்களை முற்போக்கு சனநாயக சக்திகளை தடியடி நடத்தியும், சுட்டு சாகடித்ததன் மூலமாகவும் மீண்டும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேச்சுவார்த்தை நாடகத்தை தொடங்கியதன் வாயிலாக தமிழக விவசாயிகளின் உரிமையை தாரை வார்த்து தமிழக மக்களை காட்டிக் கொடுத்தன .

"கர்நாடகத்திலிருந்து வந்த அகதிகளை ஏமாற்றியுள்ளது. மொத்த தமிழ் மக்கள் முன்னும் வேடம் கலைந்து நிற்கிறது. "1983 யூலை ஈழ இனப்படுகொலையைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் நிலவிய ஈழ ஆதரவு எழுச்சி நிலையை பார்ப்பனீய ஏடுகளும் தலைவர்களும் தொடர்ச்சியான அவதூறு பொய்ப்-பிரச்சாரத்தின் மூலம் ஈழ எதிர்ப்பு - வெறுப்பு அலையாக மாற்றியுள்ளனர். அதே மாதிரியான வேலையை அவர்கள் இப்போது தொடங்கிவிட்டனர். காவிரி ஆற்று நீரில் தமிழக உரிமையைக் கோரியும் கர்நாடகாவில் தமிழர்களுக்கு தாக்குதல் ஏற்பட்டதை எதிர்த்தும் இங்கே ஏற்பட்ட எழுச்சியை தகர்ப்பதற்காக தமிழ் மக்கள் அனைவருக்கும் எதிரான பொய்ப் பிரச்சாரத்தை பார்ப்பனீய ஏடுகளும் தலைவர்களும் வெகு விரைவாக நடத்துகின்றனர்."* (புதிய ஜனநாயகம்)

இன்றைய இந்திய ஆளும் வர்க்க அரசும் அரசியல் கட்சிகளும் ஏகாதிபத்தியங்களுக்கு அதன் ஊடுருவல் அமைப்புகளின் கைகளுக்கு இந்திய முன்னையும் அதன் வளங் கொழிக்கும் இயற்கை வளங்களையும் அடகுவைத்து வருகின்றது. கர்நாடக தமிழக மாநில அரசுகளும் ஆளும் கட்சிகளும் அதற்கு துணை போகின்றது. கன்னட, தமிழ் தேசிய இனம் என ஒவ்வொரு தேசிய இனங்களின் சுய பொருளாதார வளர்ச்சிக்கும் அரசியல் இறையாண்மைக்கும் சுதேசிய கலாச்சாரத்திற்கும் இந்த ஆளும் வர்க்கங்களும் நிலவும் அரசமைப்பும் தடை ஏற்படுத்தி வருகிறது. ஒவ்வொரு தேசிய இனமக்களும் தமக்கு முன்னுள்ள தடையை நீக்கி சுதந்திரமாக நல்வாழ்வு வாழ விரும்புவதையும், அதற்காக போராடுவதையும் ஒப்பிற்போக்கு அரசியல் கட்சிகளும் அதிகார அமைப்பும் தடுத்தி நிறுத்தி, தேசிய இனங்களுக்குள் மக்கள் பிரிவுக்குள் மோதல்களை தூண்டி/விடக் கூடிய சமூகப் பிரச்சினைகளை நிரந்தரமாக பேணி வருகின்றது. இதனால் காவிரிச் சிக்கலாகட்டும் மற்றும் இந்தியாவிலும் இருக்கின்ற கிருஷ்ணா நதி நீர்ச் சிக்கல், ரவி-பியாஸ் நதி நீர்ச் சிக்கல், நர்மதா, துங்கபத்ரா நதி நீர்ப் பிரச்சினை எதுவானாலும் அதில் சம்பந்தமுள்ள மாநில மக்களின் தேவைகளை நலன்களை பாரபட்சம் இன்றி கவனத்தில் கொண்டு ஒரு சுமுகமான தீர்வை இந்திய நடுவன் அரசு ஏற்படுத்தமாட்டாது.

அதற்கு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளும் ஏமாற்று அரசியல் கட்சிகளும் தமது ஆட்சி அதிகார சுயநலத்திற்காக ஒத்துழைக்க மாட்டாது. தீர்வு காணவிட மாட்டார்கள், என்பது மறக்க இயலாத உண்மையாகும். இது காவிரியின் வரலாற்றை நன்கு தெரிந்தவர்களுக்கு தெரியும்.

காவிரியைக் காட்டி நடத்தப்பட்ட கன்னட இனவெறி கலவரத்தின் போதும், அதன் பின்பும் வெளிப்பட்ட நிகழ்வுகளில் இருந்து கண்டு கொள்ள வேண்டியுள்ளது. கர்நாடக மக்களை குறிப்பாக பெரும்பான்மை கன்னட தேசிய இன மக்களை வளர்ந்து வரும் தேசிய உணர்வும், கர்நாடகத்தில் வாழ்ந்து வரும் கன்னடர் அல்லாத ஏனைய மொழி சிறுபான்மை மக்கள் (தெலுங்கர், மலையாளிகள்,

---

/* வருகின்றது. மக்கள் தமது அடிப்படைத் தேவைகளுக்கு ஒன்றுபடாதவாறு பிரித்தாள்கிறது. அதற்காக மக்களிடம் மோதல்களை, பிரித்தாளுதலை

www.tamilarangam.net



மராட்டியர்...) குறிப்பாக தமிழர்கள் முகங்கொண்டுள்ள சிக்கலையும் சுருக்கமாக புரிந்து கொள்வது அவசியமாகவுள்ளது.

கன்னட தேசிய இனமக்கள் தாங்கள் சமூக பொருளாதார, அரசியல், கலாச்சாரத் துறைகள் அனைத்திலும் பின்தங்கியதாக – வளர முடியாமல் இருப்பதாக அறிகின்றனர். இதை தொழிற்துறை, விவசாயம் போன்றவற்றில் தாம் வளரமுடியாமல் இருப்பதைக் கொண்டும், கல்வி – கலாச்சாரம் வேலைவாய்ப்பில் நிலவும் குறை விருத்தியின் மூலமும் காணலாம். இப்பிரச்சினைக்கு காரணமான நிலவும் இந்திய ஏக பொருளாதார கட்டமைப்பும் அதன் அரசியல் அதிகார கட்டுமானமும் இவற்றை கட்டிக் காக்கும் ஆளும் வர்க்கத்தையும் அதன் அரசியல் கட்சிகளையும் இவற்றுக்கு எல்லாம் பின்நிற்கும் சர்வ வல்லமை கொண்டு விளங்கும் ஏகாதிபத்தியங்களையும் கண்டுகொள்ள வேண்டியுள்ளது. இதை கர்நாடக மக்களுக்கு அவர்களின் செல்வத்தை சுரண்டிக் கொழுக்கும், ஏமாற்றும் ஆளும் வர்க்கமும் அரசியல் கட்சிகளும் கூறுவார்களா? இல்லை எனில் அவர்கள் ஏன் செய்வார்கள். உண்மையான பிரச்சனையை அதற்கான தீர்வை திசை திருப்புபவர்கள். இதுதான் நடந்தது, நடைபெறும். அப்படியானால் யார் இதை செய்வார்கள்... கர்நாடக மக்களின் நல்வாழ்வின் மீதும் ஒற்றுமையின் மீதும் பொருளாதார அரசியல் சுதந்திர வளர்ச்சியின்பால் உண்மையான பற்று கொண்ட மக்கள் இயக்கங்கள்தாம். இவற்றை செய்திட வேண்டும் - செய்ய இயலும்.

ஆகவே, கன்னட தேசிய இன உணர்வும் கர்நாடக தேசிய சுதந்திரம் போராட்டமும் அவர்களது சுதந்திரத்திற்கும் வளர்ச்சிற்கும் தடையாகவுள்ள மேற்கூறப்பட்ட மக்களின் எதிரிகளை நோக்கி திட்டவட்டமான பாதையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் பெரும்பான்மை – சிறுபான்மை மக்களை மோதவிடும் பிரித்தாளும்செய்கைகள் நிறுத்தப்படும். கர்நாடக தேசிய சுதந்திர எழுச்சியும் போராட்டமும் ஆரோக்கியமான பாதையில் வளர இயலும். பெரும்பான்மை கன்னட உழைக்கும் மக்களும் சிறுபான்மை மொழி உழைக்கும் மக்களும் ஒன்றுபட்டிருக்கவும் சமத்துவம் கொண்ட வாழ்க்கை வாழவும் உத்தரவாதம் கிடைக்கும். இதை தெளிவாகப்புரிந்து கொண்டுதான் கர்நாடகத்திலுள்ள ஒவ்வொரு மக்கள் இயக்கமும் இயங்க வேண்டியுள்ளது.

கன்னடமக்களின் வளர்ந்து வரும் தேசிய இன உணர்வை தேசிய சுதந்திரப் போராட்ட எண்ணத்தை இவ்வாறு சரியான உழைக்கும் பெரும்பான்மை மக்களின் இறுதி இலட்சியத்திலிருந்து ஒழுங்குபடுத்துவதை வளர்ப்பதை, போராட்டத்தை முன்னெடுப்பதை, கர்நாடகத்தின் ஆளும் வர்க்கங்களும் மாநில அரசும் கன்னட பெருந் தேசிய வெறியர்களும், சிறுபான்மை குறுந்தேசிய வெறியர்களும். இந்திய நடுவன் அரசும் மக்கள் விரோத அரசியல் கட்சிகளும் எக்காரணம் கொண்டும் பார்த்து வாளாதிருக்க மாட்டார்கள். அனுமதிக்க மாட்டார்கள். அத்துடன் நிற்காது அவர்கள் இச் சமூக அமைப்பிலுள்ள தமது ஆதிக்க தன்மைகளையும்,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுரண்டல் வடிவங்களையும் அதிகார அமைப்புக்களையும், வாய்ப்பையும் குறுகிய வழிகளையும் பயன்படுத்தி தங்கள் ஆளும் வர்க்க நலனை நிலைநாட்ட தொடர்ந்தும் தக்க வைக்கும் வகையில் கன்னட மக்களின் தேசிய உணர்வை கன்னட பெருந்தேசிய இனவெறியாக மாற்றுவதிலும் கர்நாடக மக்களின் தேசிய சுதந்திரப் போராட்ட வளர்ச்சியை திசை திருப்பி சீரழிப்பதிலும் (பெரும்பான்மை சிறுபான்மை மக்களுக்குள் மோதல்களை திட்டமிட்டு நடத்துவதன் மூலம்) கவனம் காட்டுவார்கள்.

இதற்கு ஒவ்வொரு அரசியல் நிகழ்ச்சிகளையும் கன்னட இனவெறி அமைப்புகள் பயன்படுத்தும். மாநில அரசும் ஆளும் கட்சியும் மக்கள் தம்மீது காட்டும் வெறுப்புணர்வை திசை திருப்பவும் உட்கட்சித் தேவைகளுக்கும் என கால நேரம் பார்த்து பயன்படுத்தும்.

"காவிரிப் பிரச்சனையை" கன்னட தேசிய வெறியை வளர்க்க ஒரு கருவியாகவும், சிறுபான்மை தமிழ் மக்கள் மீது இனக் கலவரத்தை தூண்ட ஒரு காயாகவும், கர்நாடக அரசும் கன்னட இனவெறி அமைப்புகளும் பாவித்திருக்கின்றன. இந்திய நடுவண்அரசு நேரடியாகவும் தமிழக அரசு மறைமுகமாகவும் தங்களின் ஒட்டு மொத்த ஆளும் வர்க்க நலனிலிருந்து, மக்கள் விரோத கொள்கையிலிருந்து ஆதரிக்கின்றன. இதனால்தான் கர்நாடக தமிழக விவசாயிகளையும் மக்களையும் ஏமாற்ற மீண்டும் பங்காரப்பாவும் ஜெயும் – நரசிம்மராவும் பேச்சுவார்த்தை நாடகத்தை தொடங்கியுள்ளனர்.

அடுத்த மக்களின் நலனுக்காக நிற்கின்ற சக்திகளிடம் எழக்கூடிய அல்லது எழுந்திருக்கும் பிறழ்வுகளையும் கண்டு அகற்ற வேண்டி சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். காரணம் தமிழீழ மக்களின் தேசிய சுதந்திர உணர்வை சரியான திசை வழியில் வளர்ப்பதிலும், சிங்கள பெருந்தேசிய வெறியை கண்டிப்பதிலும் இலங்கையின் முற்போக்காளர்களும் கட்சிகளும் இழைத்த தவறுகளையும், அதன் விளைவுகளை நாம் இன்று அனுபவிப்பதால், கர்நாடகத்தில் தோன்றக்கூடிய தவறான ஒரு அணுகுதலை சகோதர மனப்பான்மையுடன் முன்னரே எச்சரிக்க விரும்புகின்றோம்.

கர்நாடக மக்களின் போராட்டம் சரியான பாதையில் வளர உதவுவது ஆதரவாக நிற்பது தமிழீழ தேசபக்த மக்களின் கடமையாகின்றது.

கர்நாடக மக்களின்சமூக பொருளாதார அரசியல் கலாச்சார விடுதலைக்கும் சமூக மாற்றத்திற்கும் தேசிய சுதந்திரத்திற்குமான உழைக்கின்றவர்கள் போராடுகின்றவர்கள் கர்நாடகத்தில் அரசே முன்னின்று நடத்திய இனவெறிக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட தமிழர்களையும் தமிழகத்தில் அங்கொன்று இங்கொன்றுமாக கன்னடர்கள் மீது தன்னெழுச்சியாக நடந்த சிறு பாதிப்புக்களையும் சமப்படுத்தி பார்க்கின்ற தவறையும், இக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழர்களில் பெரும்பாலானவர்கள் தினக்கூலித் தொழிலாளர்களாக இருந்தனர். இவர்கள் தமிழைத் தவிர வேறு மொழிகளை பேசவோ பேசினாலும் படிக்கவோ

www.tamilarangam.net

விடுதலை போராட்ட வரலாற்றுக்கு கர்நாடக தமிழர்கள் பெரும் ஆதரவும் பங்கும் வழங்கியுள்ளனர். தொடர்ந்தும் ஆதரவு வழங்க வேண்டும் என தமிழீழ மக்கள் எதிர்பார்க்கின்றனர். கடந்த காலங்களில் தமிழீழ சில முதலாளித்துவ இயக்கங்கள் "எங்கும் எல்லோரிடமும் ஆதரவையும் உதவியையும் பயன்படுத்துவது" என்ற கொள்கையில் இருந்து ஆதரவும் உதவியும் தரும் சகோதர நாட்டு மக்கள், அவர்களுக்குள்ள பிரச்சினைகளைத் தீர்க்க சுதந்திரமாக வாழ அவர்களையும் போராட்டத் தூண்டுவது, ஆதரவு கொடுப்பது என்ற "பரஸ்பர மக்கள் நல்லுறவுக் கொள்கை" தவறு எனக் கருதி நடந்து கொண்டார்கள். அதையே அம்மக்கள் ஒப்புவிக்கவும் செய்தார்கள். காரணம் பிற்போக்கு மக்கள் விரோத தேசவிரோத அரசுகளிடம் இருந்தும், அந்நாட்டுமக்களிடம் இருந்தும் எல்லாமும் பெற்று தமது காரியத்தை மட்டும் சாதிக்கும் கொள்கையில் குறியாக இருந்தார்கள்" விளைவு மக்கள் விரோத அரசுகள் காலை வாரிவிட்ட பொழுது மக்களிடம் இருந்தும் அன்னியப்பட்டு போனார்கள்.

தமிழீழ மக்களின் தேசியவிடுதலைப் போராட்டத்தை சிறீலங்கா சிங்கள பேரினவாத அரசுக்கும், இந்திய விரிவாதிக்க அரசுக்கும் ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக தேசபக்த புரட்சிகர பாதையில் முன்னெடுத்து செல்லும் நாம், ஒடுக்கப்படும் ஒவ்வொரு தேசிய இன மக்களின் தேசியசுதந்திரப் போராட்டங்களுடனும் சமூக மாற்றத்திற்கான போராடும் ஒவ்வொரு நாட்டுமக்களின்விடுதலைப் போராட்டத்துடனும் தோளோடு தோள் நின்று மக்களது பொது எதிரிகளை தோற்கடிப்பதில், சுதந்திரத்தை வெல்வதில் ஒன்றிணைந்து ஆதரவளித்து நிற்போம் என்று குறுரைக்கின்றோம்.

---- தமிழன்பன் ----

எந்த ஒரு கடமையிலும் ஒரு பொதுவான வியாபகமான அறைகூவல் இருக்கப்படாவிட்டால் பரந்துபட்ட பொது மக்களைச் செயலுக்குத் திட்டியெழுப்ப முடியாது. ஆனால் தலைமைப் பதவிகளில் உள்ளவர்கள் ஒரு பொது அறைகூவலுடன் மட்டும் தம்மைக் கட்டுப்படுத்தி விட்டால் ஸ்தாபனங்கள் சிலவற்றில் அறைகூவல் இருக்கப்பட்ட வேலையில் ஆழமாகவும், ஸ்தூலமாகவும் நேரடியாகவும் சென்று ஒரு தனிமுனையில் உடைத்துப் புகுந்து அனுபவத்தைப் பெற்று இதரபகுதிகளுக்கு வழிகாட்ட இந்த அனுபவத்தை உபயோகிக்காவிட்டால் தமது பொது அறைகூவல் சரியானதா என்பதைப் பரீட்சிக்கவோ அல்லது அதை உள்ளடக்கத்தைச் செழுமைப்படுத்தவோ முடியாது. எனவே இதனால் எவ்வித விளைவும் ஏற்பட முடியாத அபாயம் இருக்கவே செய்கிறது.

- தலைமை முறை பற்றிய சில பிரச்சனைகள் -

- மாவோ -

www.tamilarangam.net



இயலாதவர்கள். இத்தகைய குறிப்பான சூழலில் பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழர்களின் நிலைக்கு ஆதரவான செயற்பாடுகள் சிறியளவில் மேற்கூறிய சக்திகளால் ஆமை வேகத்தில் நடத்தப்பட்டது. அதே வேளை கன்னட மொழியில் அவர்கள் மத்தியில் சரியான நோக்கு நிலையிலிருந்து வேகமாக முடுக்கிவிடப்பட்டது. கன்னட தேசிய இன உணர்வை கன்னடவெறியாக மாற்றும் பிற்போக்கு அரசியல் வாதிகளையும் அரசையும் கண்டித்தனர். கன்னட மக்கள் புரட்சிகரப் பாதையில் அணிதிரளக் கோரினர். ஆனால் தாக்கப்பட்ட சிறுபான்மைத் தமிழர்கள், மற்றும் இனவெறிச் செயல்களை உறுதியாக கண்டிக்கவோ பாதிக்கப்பட்ட ஏழைத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கக் கூடிய விதத்தில் ஆதரவு நடவடிக்கைகளையும் அனுதாபங்களையும் அவர்களது மொழிவழியில் செய்வதற்கு பாரிய கவனம் எடுக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களின் பக்கம் நின்று அவர்களது மொழிவழியில் (தமிழில்) நியாயத்தை—அநியாயத்தை வேறுபடுத்திக் காட்டி சொல்லி செயற்பட்டால் கன்னட மக்களின் தேசிய இன உணர்வுக்கு பங்கம் வந்துவிடும் என்றோ அல்லது கன்னட தேசிய வெறியை நோக்கி இழுக்கப்படும் ஜனரஞ்சகவாத போக்கில் கன்னட மக்கள் தங்களை அன்னியப்படுத்தி விடுவார்களோ என்ற அச்சத்தில் இருந்து இது எழுந்திருக்க வேண்டும்.

இப்பிரச்சினை சரியான பாரபட்சமில்லாத நோக்குநிலையிலிருந்து அணுகப்படாவிட்டால் மக்களது உணர்வுகளை இன்பம்—துன்பம் எதுவானாலும் அவர்களது மொழிவழியில் வெளிப்படுத்த தயங்கினால் காலப் போக்கில் கன்னட தேசிய உணர்வு பிற்போக்கு அரசியல் சக்திகளால், அரசால் அவர்களின் ஆதார நிலைகளின் பலத்தைக் கொண்டும், கன்னட தேசிய வெறியாக ஊட்டப்பட்டு வளர்க்கையில் வெளிப்படுகையில் வளர்ந்துவரும் கன்னட பெருந்தேசிய வெறியிலிருந்து கன்னட மக்களை காப்பதும் கடினமாகி விடும். ஒருக் கால் கன்னட தேசிய வெறிக்கு வால் பிடிப்பதும் தவிர்க்க இயலாததாகிவிடும்.

இதே போல சிறுபான்மை தமிழர்கள் மத்தியிலுள்ள (சிறுபான்மை மொழிகளின் எப்பிரிவிலுமுள்ள) குறுந் தேசியவெறிக் கண்ணோட்டத்தையும் அதனை வளர்க்கும் அமைப்புகளின் கொள்கை நடவடிக்கைகளை அதன் நேரடி—மறைமுக தாக்கங்களை தீய விளைவுகளை தமிழர்கள் மத்தியில் உரைக்கச் செய்ய வேண்டியுள்ளது. புரட்சிகரப் பாதையை நோக்கி சிறுபான்மை மக்களும் நம்பிக்கையுடன் அணிதிரள ஆவன செய்தாக வேண்டும். இல்லையெனில் குறுந் தேசிய வெறியர்களின் செய்கைகள் தமிழர்களை பெருந்துன்பத்துக்குள்ளாக்குவதுடன் மறுபுறம் கன்னட இன வெறியர்களின் கையையும் ஓங்கச் செய்யும். கன்னட மக்களை இன வெறியர்களின்கைகளுக்கு தள்ளிவிடும். இவை எல்லாம் கர்நாடக மக்களின் விடுதலையை சுதந்திரத்தை பெருந்தூரத்திற்குத் தள்ளி பல புதிய சிக்கல்களை உருவாக்கி விடும். இது மக்களின் எதிரிகளுக்கு சாதகமாக போகும். எனவே கர்நாடக தேசபக்தர்களும் புரட்சியாளர்களும் இக் கடினமான பணியை எவ்விதமான குறுக்கு வழியையும் நாடாது நேர்மையான புரட்சிகர வழியில் நாட வேண்டும். இதுதான் ஒருவரை ஒருவர் சுரண்டாத ஆதிக்கம் செலுத்தாத சமத்துவ வாழ்விற்கான விடுதலைப் போராட்ட வழியாகும். தமிழீழ மக்களின் தேசிய

www.tamilarangam.net



## ஐக்கிய முன்னணி எனும் பிரச்சினை பற்றி.....

புலிகள் ஒரு ஐக்கிய முன்னணி அமைக்காத வரையில் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்ற வகையில் கருத்து தெரிவிக்கும் சிலர் புலிகளுடன் ஐக்கிய முன்னணியை அமைப்பதே புரட்சியாளர்களின் உடனடிப்பணி என வலியுறுத்துகிறார்கள். சீனாவில் யப்பானின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தில் மாவோ தெரிவித்த கருத்துக்களின் தாக்கத்தை இவர்களில் காணமுடிகிறது. ஆனால் எமது போராட்ட நிலைமை சீனாவில் அன்றிருந்த நிலைமைகளில் பல அம்சங்கள் வேறுபட்டதாகும்.

முதலாவதாக புலிகளின் இன்றுள்ள நிலையில் போராட்டத்தின் வெற்றியானது ஐக்கிய முன்னணி இன்றேல் சாத்தியப்படவே மாட்டாது என்பது சரியான வாதமல்ல. புலிகள் இன்று அரசபடைகளுடன் கிட்டத்தட்ட சமபலம் வாய்ந்த முறையில் போரிட்டு வருகின்றனர். எதிர் காலத்தில் இந்த இராணுவம் சம்பலத்தில் ( ) புலிகளுக்கு சாதகமாக ஏற்படும் எந்தவொரு மாற்றமும் கூட புலிகள் சிலபகுதிகளை முற்றாக விடுவித்து தமது அரசு அதிகாரத்தை நிறுவுவதை நோக்கியிட்டுச் செல்லலாம் (உதாரணமாக சில கள், சில

இரண்டாவது பிரச்சினை புலிகள் அப்படி ஐக்கிய முன்னணி அமைப்பதற்கு முன்வந்தாலும் யாருடன் ஐக்கிய முன்னணியை அமைப்பது என்ற பிரச்சினையாகும். இன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரே அமைப்பாக புலிகள் மட்டுமே இருக்கின்றனர். ஏனைய பிரதான அமைப்புக்கள் அனைத்துமே பிரிவினைக் கோரிக்கையை கைவிட்டு விட்டு ஸ்ரீலங்கா, இந்தியா அரசுகளிடம் சரணடைந்து விட்டன. ஏனைய புரட்சிகர குழுக்கள் ஒரு சரியான அமைப்பு வடிவத்திலேயே இல்லை. ஆகவே புலிகள் ஐக்கிய முன்னணி அமைப்பதாயினும் கூட அதற்கு தகுதியான வேறு அமைப்பொன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இல்லை என்பதே இன்றைய நிலையாகும்.

மூன்றாவது, சீனாவில் கொம்யூனிஸ்ட்டுக்கள் கட்சி ஒரு பலம் பெற்ற அமைப்பாக இருந்தது. கோமிங்டாங்கும் இது போன்றே பலமான அமைப்பாக இருந்தது. இந்த நிலையில் ஜப்பானிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பு அபாயம் உடனடியாக பிரச்சினையாக எழுந்தபோது அதனைத் தோற்கடித்தல் எனும் பிரச்சினையில் உடன்பட்ட இரண்டு அமைப்புக்கள், பரஸ்பரம் இரண்டு அமைப்புக்களது தலைவர்களையும் பேணிக்கொண்டு ஐக்கிய முன்னணியை அமைத்தன. ஐக்கியமும் போராட்டமும் என்பது ஐக்கிய முன்னணிக்குள்ளும் தொடர்ந்தது. இந்த நிலையில் ஐக்கிய முன்னணி தந்திரோபாயமானது சீன கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் சீனப்புரட்சிக்கும் பாரிய நன்மைகளை ஏற்படுத்தியது. எமது போராட்டத்தில் புரட்சிகர அமைப்புக்கள் எதுவுமே குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அமைப்பு வடிவத்திலும், பலத்திலும் காணப்படவில்லை. புலிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் யாராவது கலந்து கொள்வதாயின் அவர்கள் தங்களோடு நேரடியாக இணைந்து கொள்ள வேண்டும்

www.tamilarangam.net

எனக்கூறி மாற்று அமைப்புக்கள் எதனையும் அங்கீகரிப்பது ஒரு புறம் இருக்க அனுமதிக்கவே தயாராகவில்லை. இப்படிப்பட்ட நிலையில் புரட்சியாளர்கள் வெறுமனே ஐக்கிய முன்னணியைப் பற்றிப் பேசுவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும். மாற்று, புரட்சிகர அமைப்பைக் கட்டும் பணி புரட்சியாளர்களின் முன்னே இருக்க அதனை விட்டு விட்டுஐக்கிய முன்னணி பற்றி பேசுவது புரட்சியாளர்கள் தமது கடமையை புறக்கணிப்பதுடன் புலிகளின் ஏகபோக மனோபாவத்தை பலப்படுத்துவதாகவும் அமைகிறது. ஆகவே புரட்சியாளர்களின் உடனடிப்பணி ஒரு சரியான, புரட்சிகர மாற்று அமைப்பை நிறுவுவதேயாகும் இப்படிப்பட்ட ஒரு அமைப்பானது கட்டியமைக்கப்பட்டுபலம்பெறும் போது தான் ஐக்கிய முன்னணி பற்றி பிரச்சினையே எழும் இவ்வாறான நிலையில் புரட்சிகர அமைப்பின் ஐக்கிய முன்னணிக்கான கோரிக்கையைபுலிகள் நிராகரித்தால் அது புலிகளை அம்பலப்படுத்தவும். தனிமைப்படுத்தவும்செய்யும். அப்படியாக அல்லாமல் புரட்சிகர அமைப்பாக தன்மையே இன்னும் ஒழுங்கமைத்து கொள்ளதாத, தனிநபர்களாக அல்லது சிறுகுழுக்களாக உள்ள சிலர் ஐக்கிய முன்னணி பற்றிய கோரிக்கையை வலியுறுத்துவது புலிகளின் ஏகபோக நிலைப்பாட்டையே பலப்படுத்தும். புரட்சியாளர்கள் தாமே ஒரு அமைப்பாக ஒழுங்கமைத்துக் கொள்ளாத நிலையில் தனிநபர்கள் என்ற முறையில் அவர்கள் புலிகளுடன் நேரடியாக இணைவதே சரியானது என்று புலிகள் தமது ஏகபோக நிலைப்பாட்டை நியாயப்படுத்தவும் இது உதவும்.

ஆகவே இன்று புரட்சியாளர்கள் முன்னுள்ள உடனடிப்பணி ஒரு புரட்சிகர அமைப்பைக் கட்டுவதே அன்றி ஐக்கிய முன்னணி பற்றிய பிரச்சினையல்ல.

************************

## மானுடவாதம் தொடர்பாக.....

************************

விடுதலைப் போராட்டம் என்பது அடிப்படையில் தமிழ்மக்களின் விடுதலைப் பற்றிய பிரச்சினையாக புரிந்து கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்தும் சிலர் மக்களின்விடுதலையைசாதிக்காத ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் முயற்சியினால் விளையும் பயன் என்ன என்று கேட்கிறார்கள். கடந்த காலங்களில் புரட்சியை முடித்து ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய நாடுகளில் இன்று நடப்பவற்றின் வெளிச்சத்தில் இந்தக் கேள்வி இன்னும் அதிக அர்த்தம் பெறவே செய்கிறது.

புலிகளின் அரசியலில் உள்ள தேசியத்தை மட்டும் கருத்திற் கெடுத்து அதனைப் பலப்படுத்த முனைபவர்களுக்கு பதிலாக இந்த வாதம் அமைகையில் இதனுடன் நாமும் முழுமையாக உடன்பட முடியும். ஆனால், இங்கு முக்கியமானது என்னவென்றால் இந்தவகையான விமர்சனத்திற் கூடாக என்ன நிலைப்பாட்டை வந்தடைகிறோம் என்பது தான் இந்த விமர்சனம் புலிகளின் குறுகிய நோக்கங்களை அம்பலப்படுத்தி, தேசிய விடுதலைப் போராட்டத்தை இன்னும் விரிவான அர்த்தத்தில் முன்னெடுக்க வழிகாட்டுமாயின், புரட்சியாளர்கள் மாற்று

www.tamilarangam.net

அமைப்பொன்றை உருவாக்கி போராட்டத்திற்கு தலைமை கொடுக்க வேண்டிய அவசியத்தை கட்டிக் காட்டுமாயின், இந்த விமர்சனம் அர்த்தம் பொதிந்ததே. மாறாக புலிகள் பற்றிய விமர்சனமானது பேரினவாத அரசு பற்றிய மதிப்பீட்டை கைவிடச் செய்யுமாயின், தமிழ் மக்களின் தேசியஅபிலாசைகளின் நியாயமான தன்மையையும், பேரினவாத அரசின் இன ஒழிப்பையும் கருத்திற்கெடுக்க தவறுமாயின் இறுதியில் இந்த விமர்சனம் பிரேமதாசாவை பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிற்கு இட்டுச் செல்லுமாயின் இந்த விமர்சனத்தின் நோக்கம் சந்தேகத்திற்குரியதாகிறது.

மக்களின் விடுதலை, விமோசனம் என்று குறிப்பிடுகையில, நாம் வாழும் சமுதாயம் ஒரு வர்க்க சமுதாயம் என்ற அடிப்படையில் வர்க்கங்கள். அவற்றிக்கிடையிலான உறவுகள் அவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் நிறுவனங்கள், பல்வேறு அமைப்புக்களும் முன்னெடுக்கும் அரசியலின் பின்னால் உள்ள பல்வேறுபட்ட வர்க்கங்களின் நலன்கள் போன்றவற்றின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் நீக்கிவிட்டால் மக்கள் என்பது வெறும் சூட்சுமக் கருத்தே. எந்த விதமான முக்கியத்துவமும் இதற்கு இருக்கப்போவதில்லை.

தமிழ் மக்களின், தமிழ்ச்சமுதாயத்தின் விடுதலை என்று பேசும் போது இலங்கையின் குறைவிருத்திநிலை, இது தோற்றுவிக்கும் வர்க்கங்கள், அமைப்புக்கள் அரசின் தன்மை, இவற்றிக்கிடையிலான உறவில் பேரினவாதத்தின் பாத்திரம் தமிழ் மக்களின் தேசியஅபிலாசைகள், தமிழ்த்தேசியத்தை முன்னெடுக்கும் பல்வேறு வர்க்கங்களின் பாத்திரம் போன்றவை தொடர்பாக ஸ்தூலமான ஆய்வின் அடிப்படையில் திட்டவட்டமான நிலைப்பாடுகளை மேற்கொண்டு இந்நிலைப்பாடுகளின் அடிப்படையில் உறுதியாக செயற்படுவது முக்கியமானது. இதற்கு மாறாக மக்கள் என்ற பொதுப்படையாக பேசுவதோ புலிகளின் ஜனநாயக விரோத நோக்கு என்ற குறிப்பான பிரச்சினையை தமிழ்த்தேசியத்தில் பொதுப்படையான பிரச்சினையாக்குவதோ எந்த உருப்படியான பயனையும் விளைவிக்கப்போவதில்லை. இறுதி ஆய்வில் இவை எதிரியை பலப்படுத்தும் செயலாகவே அமையும். கடந்த காலங்களில் புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவின் முரண்பாடுகள் தீவிரம் அடைந்து புலிகள் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போகும் நிலைமை பல சந்தர்ப்பங்களிலே எழவே செய்தது. ஆனால் அப்போதெல்லாம் புலிகளை எதிப்பதாகவே கூறிக்கொண்டு செயற்பட்ட ஏனையஅமைப்புக்களின்தொலைநோக்கற்ற செயற்பாடுகளே புலிகளைப்பலப்படுத்தவும் புலிகள் தமிழ் மக்களின் பாதுகாவலர் என்று தமிழ் மக்கள் உணரவும் செய்தன. ஆகவே புலிகளை எதிர்ப்பதாக கூறிச் செயற்படும் எந்தவொரு செயற்பாடுமே அதன் நீண்டகால விளைவுகள் பற்றிய கண்ணோட்டத்துடனும் எமது சமூக பொருளாதார அரங்கிலுள்ள பல்வேறு சக்திகள் பற்றிய சுறாரான மதிப்பீட்டுடனும் சேர்ந்ததாக அமையாமல், அகநிலையானதாக, குறுகிய கண்ணோட்டமுடையதாக இருக்கும்போது புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கில் செயற்படும் அதே செயற்பாடுகள் புலிகளை பலப்படுத்துவதாக அமையலாம் என்பதே உண்மையாகும்.

(நன்றி "உயிர்ப்பு")

www.tamilarangam.net

எம்மோடுறவும் கொம்மியா. கிக 1917 சிலைமில் ஒரு பிரமோ

தீப்பொறி அமைப்பைத் தாபித்தவர்களில் ஒருவரான கேசவன் உட்பட மொத்தம் 10 பேர் அண்மையில் புலிகளினால் 'கைது' செய்யப்பட்டுள்ளனர். மே 17 நள்ளிரவு சீருடையிலும், ஆயுதபாணிகளாகவும் காணப்பட்ட புலிகள் கேசவன் தங்கியிருந்த வீட்டைச் சுற்றி வளைத்து கேசவனைக் 'கைது' செய்தனர். இதைத் தொடர்ந்து மே21 நள்ளிரவு மீரா உட்பட 4 பெண்களும், யாழ் பல்கலைக்கழக மாணவர்களான சிறிநிவாசன் (கலைப்பீடம் 2-ம் வருடம்), கோவிந்தராஜன் (கலைப்பீடம் 3-ஆம் வருடம்) ஆகியோரும், இன்னும் 2 மாணவர்களும் (பெயர் தெரியவில்லை) புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டனர். மேலதிக உதவி அரசாங்க அதிபராக இருந்த கோவிந்தன் என்பவரும் புலிகளால் 'கைது' செய்யப்பட்டுள்ளார்.

ஈழத்து தமிழ் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கரான கேசவன் (நோபேட், கோவிந்தன், டொமினிக் என்ற பெயர்களிலும் அழைக்கப்பட்டவர்) மலையகத்தைப் பிறப்பிடமாக கொண்டவர். 70-களில் கலை, இலக்கியப் பத்திரிகைத்துறையில உழைத்தவர். அற்புதமான சிறுகதைகளை "தீர்த்தக்கரை" எனும் பத்திரிகையில் எழுதியவர். 80-களில் புளொட் அமைப்பில் இணைந்துகொண்டு உழைத்தவர். தளப் பொறுப்பாளராகவும் செயற்பட்டவர். பின்னர் புளொட்டின் உட்கட்சி அராஜகம், படுகொலைகளினால் வெளியேறி "தீப்பொறி" அமைப்பினைத் தாபித்தவர். புகழ்பெற்ற "புதியதோர் உலகம்" நாவலையும் இக்காலப் பகுதியிலேயே எழுதினார்.

இவர்களைக் கைது செய்யும்போது "எங்களை மீறி வேலை செய்யக் கூடிய எவரையும் நாம் விட்டுவைக்க மாட்டோம். தீப்பொறியை முக்கியமான சக்திகளில் ஒன்றாகக் கருதுகிறோம். எனவே உங்களைக் கைது செய்கிறோம்" எனப் புலிகள் கூறியுள்ளனர். பல்கலைக் கழக மாணவர்களைக்கைது செய்த பின்னர் பல்கலைக்கழகத்தில் புலிகள் கூட்டமொன்றை கூட்டினர். அங்கு பேசிய புலிப் பிரமுகர் ஒருவர் 'கைதான' மாணவர்கள் மீது பொய்க் குற்றச்சாட்டுகள் பலவற்றைக் கூறினார். பின்னர் கூட்ட முடிவில் "கைதானவர்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும்?" என மாணவர்களைக் கேட்டார். நீண்ட நேர மௌனத்தின் பின் மாணவர் ஒருவர் துணிச்சலுடன் எழுந்து "இவர்களை மன்னித்துவிட முடியாதா?" எனக் கேட்டார். இதற்கு எதுவித பதிலுமில்லாமலேயே கூட்டம் முடிக்கப்பட்டது.

இக் 'கைது' பற்றி தமது பத்திரிகையில எழுதிய புலிகள் 'பிடிபட்டவர்கள் புளொட் துரோகக் கும்பலைச் சேர்ந்தவர்கள்' என அப்பட்டமாகப் பொய்க் காரணம் காட்டியுள்ளனர். புலிகளால் புளொட் தடைச் செய்யப்படு முன்னரே புளொட்டின் அராஜகப் போக்குகளால் அதிலிருந்து வெளியேறியவர் கேசவன். புளொட்டுக்கு தலைமறைவாக இருந்துகொண்டே 85 முற்பகுதியில் புளொட் மீதான மாயையுள் இருந்த மக்கள் மத்தியில் அதன் அராஜகப் போக்கை அம்பலப்படுத்தும் கடினமான முயற்சியில் ஈடுபட்டவர். "தீப்பொறி" பத்திரிகை 2 இதழ்களுக்கூடாகவும், "புதியதோர் உலகம்" நாவல் மூலமும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புளொட்டின் அராஜகப்போக்கை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். இதை மக்களும் அறிவர். புலிகளும் அறிவர். இப்படியிருக்க இவர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவரென காரணம் கற்பிப்பது விசமத்தனமானது. தமது உள்நோக்கம் கொண்ட செயலை வெளியில் நியாயப்படுத்துகின்ற முயற்சி.

யூனில் யுத்தம் ஆரம்பமானதிலிருந்து இன்றுவரை என்.எல்.எவ்.ரி, பேரவை, பி.எல்.எவ்.ரி, தீப்பொறி அமைப்புகளைச் சார்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்டவர்களும், மற்றும் இயக்கங்களிலிருந்து வெளியேறியிருந்தவர்கள், எதுவுமே அறியாதவர்கள்... என எல்லோருமாக சுமார் 200-க்கு மேற்பட்டோரும் புலிகளால் கடத்தப்பட்டு 'காணாமற்' போயுள்ளனர். யாழ் பல்கலைக்கழக மாணவன் விமலேஸ்வரன் படுகொலையிலிருந்து இன்றைய 'கைதிகள்' வரை பிடிபட்ட/ கொல்லப்பட்ட எவருமே இலங்கை/இந்திய அரசுகளுக்கு சார்பானவர்கள் அல்ல என்பதும், எவ்வகையிலும் 'துரோகிகள்' எனப்பட்டம் சூட்டமுடியாதவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் உயிரோடு இருக்கிறார்களா? இல்லையா? எங்கு 'சிறை' வைக்கப்பட்டிருக்கிறார்கள்? என்பது இவர்களது பெற்றோர், உறவினர்களுக்குக்கூட தெரியவருவதில்லை.

இத்தனைக்கும் இவர்கள் செய்த குற்றம்தான் என்ன?

இந்திய அரசின் கெடுபிடி, இலங்கையரசின் ஒடுக்குமுறை, புலிகளின் ஜனநாயக மறுப்பு, மற்ற இயக்கங்களின் அட்டகாசம் என்பவற்றின் மத்தியிலும் சொந்த மண்ணில் வாழ்ந்தார்கள். விடுதலையை நேசித்தார்கள்.

இதுதான் இவர்கள் செய்த குற்றமா?

நாட்டின் தலைவிதியை எண்ணி ஏங்கும் நெஞ்சங்களே,

மக்களின் உண்மை விடுதலைக்கான முனைப்புகள் உயிருள்ளன என்ற உண்மையை உணருங்கள்.

இந்த முனைப்புகளுக்குப் புலிகள் தடையாகஇருக்கிறார்கள் என்பதை உணருங்கள்.

உண்மையை உணர மறுப்பது, 'சோசலிசம் வேண்டாம்' என்ற மனோபாவம் என்பவற்றிலிருந்து நாம் வெளியே வரவேண்டியுள்ளது என்பதை உணருங்கள்.

காலம் காலமாக பல நல்ல சக்திகளைத் தமிழினம் இழந்துகொண்டு வருகிறது. இதைக் கேட்டுப் பழகிப் போனவர்களாக ஆகிவிடாமல், இவற்றைத் தடுக்க உங்களால் இயன்ற அனைத்தையும் செய்யுங்கள்.

— நண்பர்கள் (ஈழம்)

www.tamilarangam.net

# ஊனம் மனிதர்கள்

வெடிக்கும்
இன்னமும் குண்டுகள் வெடிக்கும்
இங்கிருந்து சுடப் போகும்
துப்பாக்கி நினைவினால்
வெள்ளிகள் மரணிக்கும்

அதினால்,
பொத்தல் விழுந்து ஆகாயம்
தொங்கும்
நிலவு சிலநேரம் நாளைக்கே---

இது விஞ்ஞான காலம்
விரல் சூப்பும்
குஞ்சு நோணியும் போர்க்கருவி
தயாரிக்க
ஆற்றல் பெற்ற நேரம்
நீ சொல்லு
சரியா ?
பிழையா?

அந்தக் ~~காலம்~~
காலம் போச்சு,
நாவு வெற்றிலையை
ஒரு அரை
பாக்குச் சீவலை
போட்டு இடிஉரலை மொக்கு
மொக்கென
குத்தி ஆத்திரத்தை தீர்த்தப்பா
தணித்தி
அந்த--------
காலம் போச்சு.

இன்றைக்கு யார்தான்
இடிஉரலைத் தூக்குவது ?
உரலும்
கடியன் கடித்து தோற்சிவந்து
விட்டாலும்
இருக்கிறது உண்டு
எடுத்த எடுப்பிலேயே ஒரு அந்தை
கொழிக்க
இருக்கிறது துப்பாக்கி.

இது
விஞ்ஞான காலம்
தொட்டிலுக்குள் பிள்ளை
பூப்பார்த்து மகிழாமல்
புதிதாக நாசம் ஆயுதத்தைத்
தயாரிக்க
என்ன வழியுண்டு ?
என்று ஆராயும் அளவிற்கு
இரத்த வெறி
பாலருந்தும் போதே நாக்கேறி
ஆடும்
அநியாய யுகம்.

வாப்பாவே!
உன் இந்திரியத்தில் பிறந்த
எனக்கே
ஆபத்து

இரண்டு கை
இரண்டு கால்
மனிதர்களால் தான்
மிகவும் அச்சுறுத்தல்
ஆனபடியால் ------
என் இந்திரியத்தில் உயிர்க்கும்
சிசுவுக்கு
யுத்தப் பயிற்சியை சிசுக்கள்
நடத்துவதே
காலவசத்தினை முறைக்கிறது
மிக்க
உசிதமாய் இருக்கும்
அல்லவா ?

-நன்றி- பணிமலர்!

"தேசபக்தன்"
அதிகார பூர்வ வெளியீடு
தேசபக்த முன்னணியினர் கழகம்
தமிழீழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்